ஸ்ரீ தமிழ்

உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**

இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**

வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**

நா. பாஸ்கரன்

சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**

ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**

இல. ஸ்ரீராம்

த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**

ஸ்ரீ தமிழ்

77/6, 10வது அவென்யூ,

அசோக்நகர்,

சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv

facebook.com/shreetv

x.com/Shreetv media

youtube com/ShreeTV

shreemedia.news@gmail.com



Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!



**தனி பிரதி: ரூ 30/–**

**ஆண்டு சந்தா: ரூ 600/–**


# சர்வதேச போரின் களமாகிறது தமிழகம்!

தில்லியில் நடந்த கோர குண்டு வெடிப்பில் 13 உயிரிழப்புக்கள்! இரசாயன யுத்தத்திற்குத் தயாராகும் இஸ்லாமிய பயங்கரவாதிகள்!

LTTE அமைப்புடன் கைகோர்த்து தமிழக இலங்கைப் பகுதிகளில் களமிறங்கும் தாவூத் இப்ராஹிம்! கஸ்வா-இ-ஹிந்த் பிரச்சாரத்தை விரிவுபடுத்தும் அடிப்படைவாதிகள்!

வாக்காளர் பட்டியல் சீர்பார்ப்பை எதிர்க்கும் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள்.. ஓட்டுக்காக ஆதரவளிக்கும் எதிர்கட்சிகள்!

இந்த அனைத்து நிகழ்வுகளுமே கடந்த 15 நாட்களாக முதன்மை பெற்று வருகின்றன!

தில்லியில் நடந்த குண்டு வெடிப்பு ஒரு தனிப்பட்ட சம்பவம் அல்ல. இது வரவிருக்கும் ஓர் பேராபத்தின் சிறு பகுதியாகத் தான் பார்க்கப்பட வேண்டும்!

தியோபந்தி மற்றும் வஹாபி பயங்கரவாத அமைப்புகள் வெடிகுண்டு உள்ளிட்ட தாக்குதல்களுக்குத் தயாராகும் போது சுன்னத் ஜமாத் அமைப்புகள் பெரும் கலவரங்களைத் தூண்டும் ஆயத்தப் பணிகளை முடுக்கி விட்டுள்ளன. பல சுன்னத் ஜமாத் தலைவர்கள் பாக்தாத் உள்ளிட்ட நகரங்களில் பாகிஸ்தான் ஆதரவு முல்லாக்களுடன் நடத்திய சந்திப்பை நாம் ஏற்கனவே வெளிக்கொண்டு வந்திருந்தோம். தில்லி குண்டு வெடிப்பிற்குப் பின் தில்லி வெடிகுண்டு சம்பவத்தை குண்டு வெடிப்பு என்றும், பாகிஸ்தான் குண்டு வெடிப்பை பயங்கரவாதத்திற்கு எதிரான பாகிஸ்தானின் போராட்டம் என்றும் அமெரிக்க தூதரக அதிகாரிகளின் எக்ஸ் பக்கத்தில் காண முடிந்தது. இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் நடத்தும் பயங்கரவாதத் தாக்குதலுக்கு அமெரிக்கா கொடுக்கும் மறைமுக உதவியாக இது பார்க்கப்பட வேண்டும்.

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் உயிரோட்டத்துடன் இருக்கும் LTTE அமைப்புக்கு தாவூத் இப்ராஹிமின் ஆதரவும், இந்தியாவிற்கு எதிராக பயங்கரவாதத்தை முன்னிறுத்தி நடத்தப்படும் யுத்தத்திற்கு லிபரல் மற்றும் சர்ச் அமைப்புகளின் ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது. இந்த பரந்துப்பட்ட யுத்த களத்தில் தமிழகம் முக்கிய போர்முனையாக உள்ளது. தமிழ் மாநில அரசோ, இந்த சதிகாரர்களின் ஊதுகுழலாக உள்ளது. எப்படி பஞ்சாப், காஷ்மீர், வட கிழக்கு மாநிலங்கள் பாரதத்தின் தலைவலியாக மாற்றப்பட்டனவோ, இன்று தமிழகம் அதே திசையில் செலுத்தப்படுகிறது.

ஆம்..செலுத்தப்படுகிறது என்று தான் சொல்ல வேண்டும். கட்சிக்குள் கோஷ்டி, முதல்வர் குடும்ப உறுப்பினர்கள் இடையே சண்டை, மூத்த அமைச்சர்கள் இடையே கோஷ்டிச் சண்டை, காவல்துறை உயர் அதிகாரிகளிடையே கோஷ்டிச் சண்டை, உயர் நிர்வாக அதிகாரிகளிடையே கோஷ்டிப் பூசல் இவை அனைத்திற்கும் மேலாக அரசின் மீது கட்டுப்பாட்டை செலுத்த முடியாத முதல்வர்! இதை பயன்படுத்தி, தீய சக்திகள் அரசை மிரட்டியும், வழிமாற்றியும் இயக்கி வருகிறார்கள். இதன் விளைவாக பயங்கரவாதம், பிரிவினைவாதம், போதை, வன்முறையில் விஞ்சி நிற்கிறது தமிழகம்! விழித்துக் கொள்ளுமா மத்திய அரசு !

# தில்லி குண்டுவெடிப்பு - தொடர் தாக்குதலுக்கான எச்சரிக்கை

பால. கௌதமன்

நவம்பர் 11 மாலை சுமார் 6:50க்கு தில்லி செங்கோட்டை அருகே உள்ள சிக்னலில் மெதுவாக நகர்ந்து வந்த கார் பலத்த சத்தத்துடன் வெடித்து தீப்பற்றியது. இதில் அருகிலிருந்த பல வாகனங்களும் தீப்பற்றியது. இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக புலனாய்வு செய்த அதிகாரிகள் அம்மோனியம் நைட்ரேட்டுடன் பெட்ரோலியம் தொடர்புடைய திரவம் கலக்கப்பட்டிருந்ததாகவும், இந்த திரவம் அதிக வெப்பத்துடன் நீண்ட நேரம் எரியும் தன்மையுடையது என்றும் தெரிவித்தனர்.

வாகனங்களில் வெடிக்கும் பொருட்களை நிரப்பி நாசகார தாக்குதல்கள் சமீபத்தில் கோவை கார் குண்டுவெடிப்பிலும், மங்களூரு குக்கர் குண்டு வெடிப்பிலும் அரங்கேறியது. கோவையில் விசாரணை செய்த அதிகாரிகள் கோவை அரபிக்கல்லூரிக்கும் இந்த பயங்கரவாதச் செயலுக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவித்தனர். இந்த தில்லி தாக்குதலிலும் கூட ஃபரிதாபாத்தில் இயங்கி வரும் அல் ஃபலா பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் டாக்டர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால், அல் ஃபலா பல்கலைக்கழகம் இதில் தொடர்புடைய டாக்டர்களின் செயல்பாட்டிற்கும், பல்கலைக்கழகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மறுத்துள்ளது.

**கல்வி நிறுவனங்களை மறைவாகக் கொண்டு பயங்கரவாதச் செயல்களை பரப்புவது மற்றும் நவீன அறிவியல் வசதிகளை பயன்படுத்தி பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவது தொடர்கதையாகி விட்டது.**

தமிழகத்தில் கோவை அரபிக்கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் பலரை பயங்கரவாதிகளாக உருவாக்கினார் என்ற செய்தி வந்தவுடன், எதோ ஒரு ஆள் தவறு செய்தார் என்பதற்காக ஒட்டுமொத்த கல்லூரி மீது பழி போடுவது தவறு என்று கண்டனம் தெரிவித்தார் ஜவாஹிருல்லா. சென்னையை மையப்படுத்தி மாடர்ன் எஷன்சியல் எஜுகேஷனல் டிரஸ்ட் என்பதை நிறுவி டாக்டர் ஹமீது ஹுசைன் என்ற பெட்ரோலிய ரசாயன பொறியாளர் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார். இவர் அண்ணா பல்கலைக்கழகத்தின் கௌரவ பேராசிரியராகவும் பணியாற்றினார். கல்வி நிறுவனங்களை மறைவாகக் கொண்டு பயங்கரவாதச் செயல்களை பரப்புவது மற்றும் நவீன அறிவியல் வசதிகளை பயன்படுத்தி பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவது தொடர்கதையாகி விட்டது.

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் விஸ்வ ஹிந்து பரிக்ஷத் அமைப்பின் நகரத் தலைவரின் மரக்கடை எரிக்கப்பட்டது. வழக்கறிஞர் அஸ்வத்தாமன் அலுவலகத்தில் தீ, ஆர்.எஸ்.எஸ் அமைப்பிற்கு இடம் கொடுத்த அறந்தாங்கி பள்ளியில் மர்ம தீ, PFI அமைப்பின் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்தவுடன் 20க்கும் மேற்பட்ட ஹிந்து அமைப்பினரின் வீடுகளின் மீதும் நிறுவனங்களின் மீதும் எரி குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. கேரளாவில் கன்னூர் அருகே இரயிலில் ஒரு தீ வைப்புச் சம்பவம் நடந்தது.

இந்த சம்பவங்கள் அனைத்திலும் தீ வேகமாக பரவியதுடன் நீடித்தும் எரிந்தது. இந்த சதிப் பின்னணியை ஆதாரங்களுடன் பலமுறை நாம் தெரிவித்துள்ளோம். இதில் விசேஷ திரவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தொடர்ந்து நிரூபித்து வருகிறோம். இன்றைய தில்லி தாக்குதலிலும் இந்த இராசயன கலவை உள்ளதால் இந்த வழிமுறையில் பயிற்சி பெற்றவர்களும் இதன் மூலப்பொருட்களும் நாடு முழுவதும் பரந்து கிடக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்த தில்லி தாக்குதலில் கார் குண்டை இயக்கியதால் டாக்டர் உமர் முகமது இறந்துள்ளான். இது தொடர்பாக டாக்டர் முஜாமில் சஹில் மற்றும் டாக்டர் ஆதில் ராத்தர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் துருக்கிக்கு சென்று ஜெய்ஸ்-இ-முகம்மது தலைவர்களை சந்தித்து வந்ததாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த குண்டுவெடிப்புத் தொடர்பாக அன்சர் கஸ்வத்-உல்-ஹிந்த் என்ற அமைப்பை விசாரணை வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளனர். இந்த அமைப்பு 2017ம் ஆண்டு ஷாகிர் மூசா என்பவனால் தொடங்கப்பட்டது. சிறிய குழுவாக தொடங்கப்பட்ட இந்த அமைப்பின் தலைவர் உட்பட ஏறத்தாழ 10 நபர்களை பாதுகாப்புப் படையினர் சுட்டு வீழ்த்தினர்.



இந்த அமைப்பு அழிக்கப்பட்டு விட்டது என்று எண்ணி இருந்த நிலையில் இந்த தாக்குதல் சம்பந்தமான தடயங்கள் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தில்லி வெடிகுண்டு தாக்குதல் நடைபெற்றவுடன் அதற்கு கண்டனம் தெரிவித்த இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் இந்தத் தாக்குதலை கொடூர வெடி விபத்து என்று குறிப்பிட்டார். அதுவும் ஒரு நாள் தாமதமாக! மாறாக பாகிஸ்தானில் நடைபெற்ற ஒரு குண்டுவெடிப்பு தாக்குதலை பயங்கரவாதத்திற்கு எதிரான பாகிஸ்தானின் போராட்டம் என்று இஸ்லாமாபாத் அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டிருந்தது. பயங்கரவாதத்தில் அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாட்டை இந்த இரண்டு டீவிட்டுகளும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

மும்பை குண்டு வெடிப்பு முதல் பல பயங்கரவாதச் செயல்களை இயக்கி வரும் தாவூத் இப்ராஹிம், முன்னாள் LTTE உறுப்பினர்களுடன் சேர்ந்து தமிழகம் - இலங்கைப் பகுதிகளில் போதை சாம்ராஜ்யம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். தமிழகத்தில் தேனி மாவட்டம் பெரியகுளத்தைச் சேர்ந்த பெண்கள் மதரஸா தலைவர் உஸ்தாத் பீர் முகமது இந்தியாவை படையெடுத்து வெல்ல வேண்டும் என்ற ஹதீஸை மேற்கோள்காட்டி கலவரத்தைத் தூண்டுகிறார். சல்மான் அசாரி என்ற மும்பையைச் சேர்ந்த மௌல்வி இதே ஹதீஸை மேற்கோள் காட்டி கலவரத்தைத் தூண்டினார். இவர்கள் இருவரும் சுன்னத் ஜமாத் என்ற இஸ்லாமிய சுன்னி குழுவைச் சேர்ந்தவர்கள். சல்மான் அசாரி பாக்தாத் சென்று பல பாகிஸ்தான் மௌல்விகளைச் சந்தித்து திரும்பியதை கடந்த ஸ்ரீதமிழ் இதழில் விரிவாக எழுதியிருந்தோம், ஆப்ரேஷன் சிந்தூருக்குப் பின் இந்தியா மீது தாக்குதல் நடத்த பல சதித் திட்டங்களை பாகிஸ்தான் தீட்டி வருகிறது, ஆப்ரேஷன் சிந்தூரில் பாகிஸ்தானுடன் அடிவாங்கிய அமெரிக்காவும் இந்த சதிச் செயலுக்கு ஆதரவு அளித்து வருகிறது. ஆப்ரேஷன் சிந்தூர் தோல்வியை சகித்துக் கொள்ள முடியாமல் பாரதம் முழுவதும் உள்ள பயங்கரவாத குழுக்களை உசுப்பி விட்டு இந்தியாவை நிலைகுலையச் செய்ய வேண்டுமென்று பாகிஸ்தான் எடுத்துவரும் தொடர் முயற்சிகளின் ஒரு பகுதி தான் இந்த தில்லி குண்டு வெடிப்பு.

இந்த குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் நுண்ணிய பயிற்சி, மூளைச் சலவை செய்ய பயன்படுத்தப்படும் குரான், ஹதீஸ் வசனங்கள் அழிவை ஏற்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட முறை ஆகியவை வெவ்வேறு காலக்கட்டங்களில் பாரதம் முழுவதும் சிறிய அளவில் ஒத்திகை பார்க்கப்பட்டுள்ளது என்பதால் இது போன்ற தொடர் சம்பவங்கள் பல இடங்களில் நிகழ வாய்ப்புள்ளது. மதக்கலவரத்தைத் தூண்ட இஅஅ சட்டத்திருத்தம் பயன்படுத்தப்பட்டது போல் குஜகீ கணக்கெடுப்பு பயன்படுத்தப்படும். ஒருபுறம் குண்டுவெடிப்பு, மறுபுறம் கலவரங்கள், இவற்றிற்கு உதவ நவீன தொழில்நுட்பம், போதை மற்றும் கடத்தல், நிதி ஆதாரம் என்று மெகா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தற்போது இது போன்ற தாக்குதல்களில் விஷேச திரவங்கள் கலக்கப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது**

தில்லி குண்டுவெடிப்பை ஒரு பெரும் சதியின் அங்கம் என்று உணர்ந்து இதை ஒரு தனிப்பட்ட பயங்கரவாத நிகழ்வாக பார்க்காமல் வரவிருக்கும் பேராபத்தின் சேம்பிள் ஆக உணர்ந்து எல்லா தளத்திலும் அரசு விரைந்து செயல்பட வேண்டும். முஸ்லீம் ஓட்டு அரசியலுக்காக தேச நலனை அடகு வைக்கும் போக்கை அரசியல் கட்சிகள் கைவிட வேண்டும்.



# கள்ளக்காதல் திராவிட மாடலை வீட்டுக்கு அனுப்பலாமா ?



- நாணா

"ஒரு பெண் கழுத்தில் நகைகளை அணிந்து கொண்டு நள்ளிரவில் தன்னந்தனியாக பயமின்றி சாலையில் நடக்க முடிந்தால், அன்றே இந்தியா உண்மையான சுதந்திரம் அடைந்து விட்டது என்று சொல்லலாம்" என்று மகாத்மா காந்தி கூறியிருக்கிறார் என்று பெண் சுதந்திரம் பற்றி மேடையில் முழங்குவது..

அப்படி யாராவது சுதந்திரமாகச் சென்று, சென்ற இடத்தில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால் "அந்த நேரத்தில் அந்த இடத்தில் அவளுக்கென்ன வேலை" என்று அவளின் நடத்தையை இழிவு செய்து பாதிக்கபட்ட பெண்ணை குற்றவாளி ஆக்கிப் பேசுவது..

காதலில் கள்ளக்காதல் நல்ல காதல் என்று எதுவுமில்லை, காதல் என்றால் காதல் தான், அதை நாம் மதிக்க வேண்டும் என்று தத்துவம் பேசுவது... ஆனால் அரசியல் மேடைகளில் அந்தக் கட்சிக்கும் இந்தக் கட்சிக்கும், அந்தத் தலைவருக்கும் இந்தத் தலைவருக்கும் கள்ளக்காதல் என்று பேசி காதலை கொச்சைப்படுத்துவது, ஏதாவது குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிரச்சினை என்றால் அவர் எழுதிய "பெண் ஏன் அடிமையானாள்" புத்தகத்தை ஒவ்வொருவரும் படிக்க வேண்டும் என்று உரக்கப் பேசுவது...(அது ஒரு பினாத்தால் புத்தகம் என்பது வேறு விஷயம்)

ஆனால், "இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்பள, இங்கிலீசு படித்தாலும் இன்பத் தமிழ்நாட்டிலே" என்றும் "செந்தமிழ் நாட்டு தமிழச்சியே, சேலைக்கட்ட தயங்கறயே" என்றும் 'மாரல் போலீசிங்' பாடல்களை பாடி

அவர்களை 'அடிமைப்படுத்துவது'....

பெண்ணுக்குத் தாலி தேவை தானா என்று பேசுவது...

பர்தா வேண்டாம், முத்தலாக் வேண்டாம் என்றால்

அது மத உரிமை என்று மாற்றிப் பேசுவது....

இப்படி பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இரட்டை நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு, சந்தர்ப்பத்திற்குத் தக்க நிலைப்பாட்டை உபயோகிப்பதற்கு இன்றைய பெயர், "திராவிட மாடல்".

வெட்கம் கெட்டவர்கள், தங்கள் வீட்டுப் பெண்களுக்கு ஒரு நீதி, மற்றவர் வீட்டுப் பெண்களுக்கு ஒரு நீதி என்பது தான் இவர்கள் மாடல்!

> **பெண்களுக்கு தீங்கிழைத்து மாட்டிக்கொண்டாலும் எப்படியும் அந்த சார் வந்து காப்பாற்றி விடுவார் என்ற நம்பிக்கை**

இவர்களைப் புரிந்து கொண்டவர்கள் இவர்களின் ஆட்சி பற்றி பயப்படுவது இல்லை. பெண்களுக்கு தீங்கிழைத்து மாட்டிக் கொண்டாலும், எப்படியும் அந்த "சார்" வந்து காப்பாற்றிவிடுவார் என்பது இவர்களின் ஆழமான நம்பிக்கை.

எனவேதான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன. சென்ற வாரம் கோவையில் நடந்துள்ள கொடூர சம்பவம் இதற்கு மற்றொரு உதாரணம்.

நடந்தது இது தான்:

கோவை சித்ரா பகுதியில் சர்வதேச விமான நிலையம் பின்புறத்தில் இரவு சட்டக் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயிலும் 19 வயது மாணவி ஒருவர் அவரது நண்பருடன் காரில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாக வந்த அடையாளம் தெரியாத மூன்று பேர், காரின் கண்ணாடியை உடைத்து, மாணவியின் அந்த ஆண் நண்பரைத் தாக்கி மயக்கமடையச் செய்துவிட்டு, மாணவியைப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

மயக்க நிலையிலும் அந்த ஆண் நண்பர் காவல்துறைக்கு தகவல் அளிக்க, சம்பவ இடத்துக்கு விரைந்த பீளமேடு காவல்துறையினர் மாணவியையும் அவரது நண்பரையும் தாக்கப்பட்டு

அடிபட்டு கிடந்த நிலையில் மீட்டுள்ளனர்.

குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டு விட்டாலும் கூட, பாதிக்கப்பட்ட மாணவியை திமுக பேச்சாளர்கள், தரக்குறைவாக பேசி வருகின்றனர். இதுதான் இவர்கள் பெண்களை பாதுகாக்கும் லட்சணம்!

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் மறைவதற்கு முன்பே கோவை சம்பவம் அரங்கேறி இருக்கிறது. அவசர அவசரமாக விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டு அந்த வழக்கில் "யார் அந்த சார்?" என்பது இன்னமும் தெரியாத புதிராகவே உள்ளது. எத்தனை எத்தனையோ வழிகளில் "அந்த சார்" காப்பாற்றப்பட்டு விட்டதால் பாலியல் குற்றங்கள் செய்பவர்களுக்கு பயம் இல்லா நிலை உருவாகி விட்டது என்றால் அது மிகையல்ல.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் ஒன்றிய திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் தெய்வச் செயல், மாணவி ஒருவரை பாலியல் கொடுமைப்படுத்திய சம்பவத்தின் மீது ஊடகங்களில் செய்தி வெளி வந்ததால் தான் வழக்கே பதிவு செய்யப்பட்டது. அதுவரை மாணவியின் புகாரை எடுத்துக் கொள்ளாமல் காவல்துறை அலைக்கழித்து வந்தது குறிப்பிடத்தக்கது. திமுக உறுப்பினரை காப்பாற்றுவது தானே அரசுக்கு, தெய்வச் செயல்!

சென்னை விருகம்பாக்கத்தில் திமுக எம்பி கனிமொழி கலந்து கொண்ட கூட்டத்திலேயே, காவலில் ஈடுபட்டிருந்த பெண் போலீஸ்கள் மீது பாலியல் சேட்டையில் ஈடுபட்டனர் திமுக உடன் பிறப்புகள். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பெண் உரிமை பேசும் கனிமொழி இந்த சம்பத்தில் கப்சிப்....!

திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியின் ஓட்டுநர் மீது பாலியல் குற்றச்சாட்டு எழுந்த விஷயம், பெரிதாவதற்கு முன்பே மூடப்பட்டுவிட்டது!

சென்னை அண்ணாநகரில் மாற்றுத் திறனாளி பெண் குழந்தை மீது பாலியல் கொடுமை செய்த குற்றவாளிகளுக்கு ஆதரவாக காவல்துறை நடந்து கொண்ட சம்பவம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. பாதிப்புக்கு உள்ளான பெண் குழந்தையும் அவரது பெற்றோரையும் பாதுகாப்பதே பெரிய விஷயமாகி விட்டது. பாதிக்கப்பட்ட பெண்கள் பக்கம் என்றுமே இருக்க மாட்டோம் என்று திராவிட மாடல் அரசு சத்தியம் செய்து இருக்கிறதோ என்னவோ!

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு நடுநிலைப் பள்ளியில் மூன்று மாணவிகளுக்கு அப்பள்ளி ஆசிரியரே பாலியல் தொந்தரவு கொடுத்திருக்கிறார். பள்ளி மாணவியரின் பெற்றோர்கள் களத்திற்கு வந்த பிறகே வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது!

**வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பெண் உரிமை பேசும் கனிமொழி இந்த சம்பவத்தில் கப்சிப்**

திருவள்ளூரை அடுத்த ஆரம்பாக்கம் என்ற இடத்தில் எட்டு வயது மாணவி ஒருவர் வேற்று மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கொடியவனால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்.

இது போன்ற சம்பவங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். குறிப்பிட்ட நாளிதழ், இன்றைய பாலியல் வழக்குகள் என்று தலைப்பிட்டு செய்து வழங்கும் அளவிற்கு நாள்தோறும் பாலியல் வன்முறை செய்திகள் வெளியாவது இந்த அரசின் சாதனைப் பட்டியலில் நிச்சயம் இடம் பெற வேண்டும்!

காவல்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, செயல்படாமல் வேடிக்கை பார்க்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று நீங்களும் நானும் வேண்டுமானால் மாறி மாறி கத்தலாம்!

சினிமாத் துறை அவர் கையில், ஊடகத்துறை அவர் கையில், அரசு நிர்வாகம் அவர் கையில், நீதியை காப்பாற்றுவதில் வேண்டுமானால் காவல்துறை முடங்கி இருக்கலாம், ஆனால் நீதி கேட்டுப் போராடுபவர்களை வேட்டையாடுவதில் அவர்களுக்கு நிகர் அவர்கள் தான்!

நம்மைப் பொறுத்தவரை இதற்கான தீர்வு, முதலமைச்சரிடம் இல்லை, அவரின் அரசு நிர்வாகத்திடம் இல்லை. இவரின் தந்தை முன்னாள் முதல்வர் கருணாநிதி சொன்னது போல, காவல்துறை மரத்துப் போய் நிற்கிறது. எனவே தீர்வு அவர்களிடம் இல்லை. மக்களிடம், மக்களிடம் மட்டுமே இருக்கிறது.

ஆம், 2026 இல் இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவது ஒன்றே பெண்களை காப்பதற்கான ஒரே தீர்வு! அனுப்பலாமா ?

# சன்னதி தெருவில் மசூதி - ஆபத்தில் தென்காசி விஸ்வநாதர் கோவில்

— ப்ரியா வெங்கட்

கால நிர்ணயம் செய்ய முடியாத கோவில்கள் பல நம் பாரத தேசத்தில் உள்ளன. இந்த வரிசையில் மிகவும் தொன்மையானதும் புனிதமானதுமாக கருதப்படுவது காசி. இந்த ஆலயம் 1194ல் கோரி சுல்தான் படையெடுப்பின் போது இடிக்கப்பட்டது. ஹிந்துக்கள் இந்த ஆலயத்தை மீண்டும் நிறுவினர். மீண்டும் இந்த ஆலயம் முஸ்லீம்களால் இடிக்கப்பட்டது. இந்த காலகட்டத்தில் தென்பாண்டி நாட்டை ஆண்டு வந்த பாண்டிய மன்னனின் கனவில் சிவபெருமான் தோன்றி தென்பகுதியில் ஒரு சிவலாயத்தை நிறுவி தட்சிண காசியாக ஸ்தாபிக்கும்படி உத்தரவிட்டார். இந்தச் செய்தி கல்வெட்டிலும் உள்ளது. பின்னாளில் இதே பகுதியை ஆண்ட சுந்தர பாண்டியனின் கல்வெட்டில் காஞ்சியை காப்பாற்றினேன் காசியை காப்பாற்ற முடியவில்லை என்ற குறிப்பு பொறிக்கப்பட்டுள்ளது. இந்த இரு கல்வெட்டுக்கள் காசியின் முக்கியத்துவத்தையும், காசியின் மரபை காக்கும் கடமையையும் இறைவனே விதித்ததாக ஹிந்து மன்னர்கள் கருதினர் என்பதை தெளிவாக்குகிறது.

இந்நிலையில், ஹாஜி எம்.எஸ். ஹாஜா மொகைதீன், தலைவர் தென்காசி பஜார் ஜும்மா பள்ளிவாசல் என்பவரது பெயரில் செப்டம்பர் மாதம் 2025ல் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புது மசூதி கட்ட அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த இடம் காசி விஸ்வநாதர் கோவில் சன்னதி அருகாமையில் அமைந்துள்ளது. இந்த கோரிக்கை வைத்த ஜமாத்தின் பெயர் பஜார் ஜும்மா பள்ளிவாசல் என்பதாகும். இந்த பள்ளிவாசல் காசி விஸ்வநாதர் கோவில் சொத்தில் கட்டப்பட்டதை இந்தப் பகுதி ஹிந்துக்கள் காலங்காலமாக எதிர்த்து வருகிறார்கள். அம்மன் சன்னதிக்கு அருகாமையில் இருக்கும் இந்த மசூதியால் தென்காசியில் பல கலவர சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த கோவிலுக்காகப் போராடிய இந்து முன்னணியின் நிர்வாகி திரு. குமார பாண்டியன் 2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். 2007ஆம் ஆண்டு அவரது சகோதரர்களான செந்தில் பாண்டியன், சேகர் பாண்டியன், சுரேஷ் பாண்டியன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த மசூதி இருக்கும் இடம் கோவிலுக்கு சொந்தமானது என்று நீதிமன்றமும் ஆணை பிறப்பித்து விட்டது. இருப்பினும் அதே மசூதியின் பெயரில் புதிய மசூதி கட்டுவதற்கு விண்ணப்பிப்பதின் நோக்கம் என்னவாக இருக்க முடியும்?

மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மசூதித் தலைவர் எழுதிய கடிதத்தில், “தென்காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு வருடம் இருமுறை 10ரூபாய்க்கு எண்ணெய் வாங்கி கொடுப்பது என்ற கட்டளை உள்ளது. அந்த 1.71 செண்ட் இடத்தை தற்பொழுது நாங்கள் கோவிலுக்கு நன்கொடையாக கொடுக்க மனப்பூர்வமாக சம்மதிக்கிறோம் என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது.’’ 10ரூபாய் எண்ணெய் கொடுப்பதாகச் சொல்லி கோவில் நிலத்தை அபகரித்து அனுபவிக்கும் ஆக்ரமிப்பாளன் கோவிலுக்கு இடத்தை நன்கொடையாக கொடுக்கிறாராம்! நாய் வாலை வெட்டி நாய்க்கே சூப் கொடுக்கும் கதையாக அல்லவா இருக்கிறது!

**10ரூபாய் எண்ணெய் கொடுப்பதாகச் சொல்லி கோவில் நிலத்தை அபகரித்து அனுபவிக்கும் ஆக்ரமிப்பாளன் கோவிலுக்கு இடத்தை நன்கொடையாக கொடுக்கிறாராம்!**

இப்போது மசூதி கட்டுவதற்கு முஸ்லீம்களால் கோரப்பட்டுள்ள பகுதி ஹிந்துக்கள் பெருவாரியாக வணிகம் செய்யும் பூக்கடை பஜார் அருகே உள்ளது. இந்த மனையின் வடக்கு எல்லையாக ஸ்வாமி சன்னதி தெருவும், தெற்கு எல்லையாக அம்மன் சன்னதி தெருவும் அமைந்துள்ளது.

அனைத்து கோவில் திருவிழாக்களின் ஊர்வலப் பாதையாக இவ்விரு சாலைகளும் அமைந்துள்ளன. இந்த முஸ்லீம்களின் கோரிக்கைக்கு ஆதரவாக நிர்வாகம் முடிவெடுக்க இருப்பதாகதகவல்கள் வெளியாகிறது. பல கலவரங்களும், பல உயிர்பலிகளும் ஏற்பட்ட பின்னும் சட்டத்திற்குப் புறம்பாக ஹிந்து கோவிலின் அருகில் மசூதி கட்ட அனுமதிப்பது நியாயமா? ஹிந்து கோவில் சொத்தை ஆக்ரமித்து இவ்வளவு நாள் நடத்தப்பட்டு வந்த மசூதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத அறநிலையத்துறை இதே கோவிலில் திருவாசகம் பாட வந்தவர்களை விரட்டி அடித்ததை நினைவுப்படுத்தி பார்க்கும் போது ஹிந்துக்களை இன அழிப்பு செய்ய இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் தமிழக அரசு கைகோர்த்து செயல்படுவது உறுதியாகிறது.

# கிறிஸ்தவ முஸ்லீம் பல்முனை தாக்குதலில் கடையநல்லூர் அச்சம்பட்டி

*— வேலு நாச்சியார்*

இந்தியாவில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு இல்லை. சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை நடக்கிறது என்ற கூக்குரல் இல்லாத நாள் இல்லை எனலாம்!

இப்படி நாள்தோறும் கதறும் சிறுபான்மையினர் ஜனத்தொகை என்னவோ இந்தியாவில் பெருகி வருகிறது! வங்கதேசம், பர்மா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து முஸ்லீம்கள் குடியேறும் பாப்புலர் டெஸ்டினேஷன் இந்தியா தான்!

இந்த சிறுபான்மையினரால் அடக்கு முறையாளர்களாகச் சித்தரிக்கப்படும் ஹிந்துக்கள் நிலை என்ன?

ஒடுக்கப்பட்டவர்கள் என்று நீலிக்கண்ணீர் வடித்துக்கொண்டு வலம் வரும் கிறிஸ்தவ முஸ்லீம்களுக்கு பயந்து அரசியல்வாதிகளாலும், சட்டத்தினாலும் இரண்டாம் தர குடிமக்களாக உரிமை இழந்து பாதுகாப்பின்றி தவிக்கிறார்கள். இந்த அவலத்தைச் சந்திக்கும் ஹிந்து பெரும்பான்மை கிராமம் தென்காசி மாவட்டம் புதுக்குடி பஞ்சாயத்திற்குட்பட்ட அச்சம்பட்டி கிராமம்.

அச்சம்பட்டி கிராமத்தில் கிறிஸ்தவர்கள் ஒரு இடத்தை வாங்கி சட்டவிரோதமாக சர்ச் கட்டினர். பல முயற்சி செய்தும் ஆள் சேராததால் பூட்டிக்கிடந்த சர்ச்சை மதுரையைச் சேர்ந்த அஸ்லாமிய ஃபவுண்டேஷன் டிரஸ்ட் என்ற முஸ்லீம் டிரஸ்ட்க்கு விற்கின்றனர். இந்த நிறுவனம் வெளியூர்களிலிருந்து பல முஸ்லீம்களை அங்கு தங்க வைத்துள்ளது. இந்த இளைஞர்களை அவ்வப்போது மாற்றியும் வருகிறது. வெளியூர்காரர்களின் நடமாட்டத்தினாலும், இரவில் அவர்கள் ஏற்படுத்தும் கூச்சல்களாலும் சலிப்புற்ற ஹிந்துக்கள் காவல்துறையினரிடம் புகார் தெரிவித்தனர். இது குடியிருப்பு பகுதி எனவே இங்கு மசூதியோ விடுதியோ நடத்தக்கூடாது என்று கண்டிப்பாக சொல்ல, காவல்துறை முஸ்லீம்களிடம் அனுமதி பெற்று வாருங்கள் என்று கூறியது.

இந்நிலையில், நவம்பர் மாதம் முதல் வாரத்தில் தாசில்தார், காவல்துறை அதிகாரிகள், தீயணைப்பு துறையினர் இந்தக் கட்டிடத்தை ஆய்வு செய்ய வந்துள்ளனர். திடீரென்று அரசு அதிகாரிகள் படையெடுத்து ஊருக்குள் வரவே விவரம் கேட்கச் சென்ற ஹிந்துக்களிடம் ஒன்றும் இல்லை என்று சொல்லி அனுப்பி வைத்தனர் அதிகாரிகள். ஆனால், ஹிந்துக்கள் விசாரித்ததில் முஸ்லீம் தங்குவதற்கான விடுதிக்கு அனுமதி கோரப்படுவதாக தெரியவந்துள்ளது. ஹிந்துக்கள் மட்டுமே அமைதியாக வாழும் ஒரு குடியிருப்பு பகுதியில் விடுதிக்கு எப்படி அனுமதி கொடுக்க முடியும் என்று மாவட்ட ஆட்சியரிடம் கேள்வி எழுப்பி இதை தடை விதிக்க வேண்டும் என்று மனு கொடுத்துள்ளனர். இதே கிராமத்தில் இந்த அஸ்லாமியா ஃபவுண்டேஷன் டிரஸ்ட் தாரூல் உலூம் அல் அஸ்லாமியா அரபிக் கல்லூரியையும் நடத்தி வருகிறது.

ஒருபுறம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தாக்குதலுக்கு உட்பட்ட இந்தக் கிராமத்தை கிறிஸ்தவ மதமாற்ற கும்பலும் விட்டு வைக்கவில்லை. 04.11.2025ம் தேதியன்று ஒரு கிறிஸ்தவ கும்பல் இந்த கிராமத்திற்குள் புகுந்து துண்டு பிரசுரங்கள் விநியோகித்து மதமாற்றத்தில் ஈடுபட்டது. இதைத் தட்டிக் கேட்ட கிராமத்து இளைஞர்களை அவதூறாக பேசியதுடன் உன்னால் முடிந்ததைப் பார் என்று அடாவடியில் ஈடுபட்டது. நிலைமை கைவிட்டு போகாமல் இருக்க 5 இளைஞர்கள் கடையநல்லூர் காவல்நிலையத்திற்குச் சென்று புகார் தெரிவித்தனர். புகார் தெரிவிக்கச் சென்ற இளைஞர்களிடம் அங்கிருந்த ஒரு கிறிஸ்தவ காவல்துறை அதிகாரி புகாரை வாபஸ் வாங்கச் சொல்லி மிரட்டினார்.

காவல்நிலையத்தில் இந்த மிரட்டலை சற்றும் எதிர்பார்க்காத ஹிந்துக்கள் இந்து முன்னணியினருக்கு தகவல் தெரிவிக்க அவர்கள் காவல்நிலையம் விரைந்தனர். இந்து முன்னணியினர் காவல்நிலையம் சென்றவுடன் கிறிஸ்தவ பிரச்சாரர்களை கலைந்து செல்ல வைத்தனர் காவல்துறை. புகாருக்கு ரசீது கொடுக்காமல் காவல்நிலையத்தை விட்டுச் செல்ல மாட்டோம் என்று உள்ளிருப்பு போராட்டம் நடத்தியதின் விளைவாக **CSR** வழங்கப்பட்டது. இதுவரை **FIR** பதிவு செய்யப்படவில்லை. இப்படி ஒருபுறம் கிறிஸ்தவர்களாலும், மறுபுறம் இஸ்லாமியர்களாலும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட இந்த கிராமத்து ஹிந்துக்களுக்கு நீதி கிடைக்குமா? இன அழிப்பிலிருந்து அச்சம்பட்டி கிராமம் காக்கப்படுமா?

# கல்குவாரி முறைகேடு - பொது மக்கள் கருத்துக் கேட்பு - கலவரம் - நக்சல் ஆபத்து

-தமிழ் நேசன்

திருநெல்வேலி ராதாபுரம் (கேள்விப்பட்ட இடமாக இருக்கிறதா? சபாநாயகர் அப்பாவு பெயர் நினைவுக்கு வந்தால் உங்கள் பொது அறிவுக்கு ஒரு பாராட்டு) பகுதியில் கல்குவாரிகளால் தூசுப்படலம், நிலத்தடி நீர் குறைவு, விவசாயம் பாதிப்பு என்று பல பிரச்சனைகள் வருகின்றன. இதனைக் கண்டித்து அறப்போர் இயக்கம் என்ற அமைப்பின் சார்பில் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடந்தது. அதில் அறப்போர் இயக்கத்தின் ஜெயராமனுடன் முக்கியப் பங்கெடுத்தவர் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சுரேஷ். இவர் **PUCL** எனும் நக்சல்சார் அமைப்பின் பொதுச் செயலர் கூட. இவர் மூலம் இந்தக் கூட்டம் நடைபெற்ற போது கல்குவாரி ஆதரவாளார் என்று ஒரு 25 பேர் கும்பல் உள்ளே புகுந்து தாக்கியது. இவர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவானவர்கள் என்று குற்றம் சாட்டுகிறார் ஜெயராமன். தாக்குதலில் வழக்கறிஞர் சுரேஷ் காயமடைந்தார். கூட்டம் கலைந்துபோனது. காவல்துறை பாதுகாப்புத் தரவில்லை என்று அறப்போர் இயக்கம் புகார் சொல்கிறது. இதுபோன்ற சம்பவம் வேறெங்கும் நடந்திருந்தால் ஐயகோ பாசிசம், ஆஹாஹா முதலாளித்துவம் என்று பொங்கும் நாகரீக நக்சல்களான கம்யூனிஸ்டுகள் இப்போது மூச்சுக்கூட ஓசையின்றி விடுகின்றனர். 25 கோடி படுத்தும் பாடு என்று தெரிகிறது.

கன்யாகுமரி மாவட்டத்தில் மாத்தூர் தொட்டிப்பாலம் அருகே உள்ள மலைகளைச் சுரண்டி அனுப்பும் காரணத்தால் பாலம் ஆட்டம் கண்டுவிட்டதாகத் தகவல். சித்திரங்கோடு மலைப்பகுதியைக் காணவில்லை. கடந்த நான்கரை ஆண்டுகளில் குவாரி என்று தோண்டுவதில் பூமியின் அடுத்த பகுதியை அடைவது உங்கள் இலக்கா என்று நீதிமன்றம் கேட்டது. ஆனாலும் அடங்கவில்லை தோண்டுராசாக்கள். கருமமே கண்ணாகத் தோண்டுகிறார்கள். ஆங்காங்கே பொதுமக்கள் தெரிவிக்கும் எதிர்ப்புகள் நசுக்கப்படுகின்றன. எதிர்க்கட்சிகள் குரல் மறைக்கப்படுகிறது, நெறிக்கப்படுகிறது என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு. இதில் கொடுமை என்னவென்றால் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் சுள்ளி பொறுக்கினாலே வனத்துறை வழக்குப்போடும். ஆனால் இந்தப் பகுதிகளில் மணல் வாரி, கல்லுடைத்துக் கனிமங்களை வண்டியேற்றி அனுப்ப உதவும் வகையில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் ஒரு கிலோமீட்டர் தூரம் வரை குவாரி வேலைகள் செய்யலாம் என்று சட்டம் போட்டுள்ளது தமிழக அரசு.

> **எட்டுவழிச்சாலை அமைக்க வேறிடத்தில் மரக்கன்று நட்டு இருக்கும் மரத்தை அகற்ற முடிவெடுத்தபோது இயற்கை போசே என்று கொதித்த ஒரு ஆள் ஒரு இயக்கம் இதற்கு எதிராகப் புருவத்தைக் கூட உயர்த்தவில்லை.**

எட்டுவழிச்சாலை அமைக்க வேறிடத்தில் மரக்கன்று நட்டு இருக்கும் மரத்தை அகற்ற முடிவெடுத்தபோது இயற்கை போச்சே என்று கொதித்த ஒரு ஆள், ஒரு இயக்கம் கூட, இதற்கு எதிராகப் புருவத்தைக் கூட உயர்த்தவில்லை. பெருந்தலைவர் காமராஜர் கட்டிய தொட்டிப்பாலம் ஆட்டம் கண்டதற்கு காங்கிரஸ் எம்பி வசந்த அண்ட்கோ விஜய் வாய் திறக்கவில்லை. அவருக்குத் தொகுதி பற்றித் தெரியாது பாவம். தொட்டிப்பாலத்தில் ஷூட்டிங் வைத்தால் பாலம் ஆடுதே செட்டுப் போட்டு எடுத்துக்கலாம் என்பார். குளச்சல் துறைமுகம் வந்தால் இயற்கை அழிந்துவிடும் என்று கூவிய அங்கிக்காரர்கள் யாரையும் காணவில்லை. பூவுலகின் நண்பர்கள் பழவுலகின் நண்பர்கள் என்று சுற்றிவரும் யாரும் வாய் திறக்கவில்லை. எதனால் என்பது பொதுமக்களின் கேள்வி. கடைக்குப் போகும் வழியை மறித்த மரத்தை வெட்டிய ஜவுளிக்கடை போதீசுக்கு அபராதம் போடுவேன் என்று பொங்கிக் கிளம்பிய பியுஷ் சேத்தியா என்ன ஆனார்?

மக்களின் வாழ்வாதாரம் அல்ல வாழ்வே கேள்விக்குறியாகிறது. ஆட்டம் கண்ட பாலத்தில் பயணித்து யாராவது காயப்பட்டாலோ இறந்தாலோ யார் பொறுப்பு? பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில்



தோண்டப்படுவதால் விலங்குகள் வேறிடம் நோக்கி நகரும். அவை ஊருக்குள் வந்தால் தோண்டுராசாக்களை மட்டும் அடிக்காது. கண்ணில்படும் மனிதர்களைத் தாக்கும். யார் பொறுப்பேற்பார்கள்? திமுக சார்ந்த அவர்களின் சூழலில் சுழலும் அமைப்புகள் வேண்டியதை வாங்கிக் கொண்டு லட்சியம் நிறைவேறியது என்று ஒதுங்கிவிட்டன என்பது பொதுவாகப் பேசப்படும் கருத்தாக இருக்கிறது.

மாவட்ட அமைச்சர் மனோ தங்கராஜ் கொழுப்புச் சத்துக் குறைக்கப்படாத கறந்த பாலைக் குடித்துக் கொழுப்பேறிக் களிப்புடன் இருப்பதால் இதெல்லாம் கண்ணில் படுவதில்லையா? ஊரை அடித்து உலையில் போடுவது என்பது சொலவடை. ஆனால் இங்கே ஊரையே உலையில் ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். அரசு நிர்வாகம் கண்டும் காணாது துணை செய்கிறது. சரி இதைக் கண்டித்துக் கிராம சபை கூட்டி இந்தக் குவாரிகளுக்கு எதிராகத் தீர்மானம் போட முயன்றால் அங்கே காணொளி மூலமாக முதல்வர் கலந்து கொள்கிறார். கிராமசபையில் முதல்வருக்கு என்ன வேலை? அரிட்டாபட்டியில் டங்க்ஸ்டனுக்கு எதிராகப் போராடிய அமைப்புகள் அங்கே தொழில் பூங்கா வருவதை வரவேற்கின்றன. வருகின்ற தொழில்களை எதிர்த்துக்கொண்டே இருந்தால் தொழில் பூங்கா என்று என்ன நந்தவனமா நடத்துவார்கள்?

இதில் சில அமைப்புகள் மக்கள் போராட்டம் என்ற பெயரில் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட்டை விரட்ட நடத்தியது போல சிறிய அளவுகளில் நடத்துகின்றன. அரசு முறைகேடுகளைக் கண்டுகொள்ளவில்லை. எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தும் பயனில்லை என்று சிலவும், கூட்டணி உள்ளிட்ட அரசியல் கணக்குகளால் சிலவும் பேசாதிருக்க நமக்காக நாம் தானே போராடவேண்டும் என்று மக்களை அரசு என்ற கட்டமைப்புக்கு எதிராகத் திருப்பும் வேலையில் இறங்கியிருக்கின்றன. இது சத்தீஸ்கர் உள்ளிட்ட இடங்களில் வெந்நீர் ஊற்றப்படும் நக்சல் வேர்களைத் தமிழகத்தில் நட்டு நன்னீர் ஊற்றி வளர்க்கும் செயல். இது இங்கே நக்சல்வாதம் தலைதூக்க வகைசெய்யும். அரசும் சட்டமும் அற்ற அராஜக நிலைக்குத் தமிழகத்தை இட்டுச் செல்லும் செயல் இது. இதை போர்க்கால அடிப்படையில் அணுகி நிறுத்தவேண்டும். நடுவண் அரசு கடும் நடவடிக்கை எடுப்பதே வழி. வேறுயாரும் இதைக் கண்டிப்பதாக இல்லை. ஆதரவு பெருகி அராஜகம் அதிகரிப்பதற்குள் அடக்குதல் அவசியம்.

## அறிவிப்பு



தமிழர்கள் ஹிந்துக்கள் அல்ல என்று
முழங்கும் மூடர்களுக்கு ஓர் அபாயச் சங்கு!
சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நம் முன்னோர்களே
சனாதனிகள்தான் என்பதை உரக்க முழங்கிடும்
சங்கநாதம்!
எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், ஏற்றமிகு
பதினென்கீழ்க்கணக்கு நூல்களும், எடுத்தியம்பும்
ஹிந்துத்துவச் செய்திகளை தகுந்த
ஆதாரங்களுடன் தடம்பிறழாமல்

தண்டமிழில் பத்மன் விளக்கும் நெடுந்தொடர்

**சங்கத் தமிழில் சனாதனம்**

**அடுத்த இதழில் தொடக்கம்**

# அறநிலையத்துறை பணிக்கு ஈவேரா அறிவு அவசியமா?

— ராம்கி

தமிழைக் காட்டுமிராண்டி என்று சொன்ன தமிழினத் தலைவர் யார்?

திமுககாரர்களின் குடும்ப பெண்களைத் தரக்குறைவாக குறிப்பிட்ட 21ம் பக்க நாயகன் யார்? திருட்டு இரயில் ஏறி வந்து ஆசியாவின் பணக்காரப் பட்டியலில் இடம் பெற்றுள்ள குடும்பம் யாருடையது?

கனிமொழி என்ற பெண் குழந்தை தலைவருக்கு பிறந்துள்ளது என்ற செய்தியை வெளியிட்டதற்காக ஜவஹரிஸம் சுப்ரமண்யம் என்ற பத்திரிக்கையாளரை கைது செய்த தலைவர் யார்?

கருத்துக்கணிப்பு வெளியிட்டதற்காக பத்திரிக்கையாளர்களை அலுவலகத்தில் உயிருடன் கொளுத்திய குண்டர் தலைவர் யார்?

கேள்வி கேட்பதற்கு முன்பாகவே அடுத்தக் கேள்விக்கான விடை என்று பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில் படித்த செட் அப் செல்லப்பா யார்?

இந்தக் கேள்விகள் 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான திமுக வேட்பாளர் நேர்காணலில் கேட்கப்படுமா?

கொடுமையைப் பாருங்கள் கோவிலுக்குச் செல்பவன் முட்டாள். கடவுளை நம்புபவன் காட்டுமிராண்டி என்று ஹிந்து வெறுப்பையே தன் வாழ்க்கை கொள்கையாக வைத்து சமூகத்தைச் சீரழித்த ஈ.வே.ரா பற்றி உங்களுக்கு தெரிந்ததை சொல்லுங்கள்? ஈ.வே.ராவின் பொன்மொழிகளில் உங்களை கவர்ந்தது எது? திராவிட மாடல் அரசு, தமிழகத்தில் ஆன்மீகத்திற்குச் செய்த பணிகள் என்ன? என்ற கேள்விகள் பேரூர் பட்டீஸ்வரம் கோவில் ஊழியர் நேர்காணில் கேட்கப்பட்டன. திருக்கோவிலில் பணியாற்றுபவர்கள் ஈவேராவின் பொன்மொழிகளைத் தெரிந்துக் கொண்டால் கோவில் நிலத்தை விற்பார்களா? காப்பார்களா?

ஹிந்து அறநிலையங்கள் அவைகளின் பழமை மாறாமல் காக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அறநிலையத்துறை இயங்குவதாக அறநிலையத்துறை சட்டம் சொல்கிறது. இந்த அறநிலையங்களும், அவைகள் காக்க வேண்டிய சடங்களும் சம்பிரதாயங்களும் அவற்றிற்கு உதவி செய்யும் கட்டமைப்புகளையும் ஒழிப்பதையே நோக்கம் என்றார் ஈ.வே,ரா. அப்படியென்றால் இந்தத் துறையின் நோக்கத்திற்கு எதிரானவரின் விஷமத்தனத்தை பொன்மொழிகள் என்று அறநிலையத்துறை நேர்காணலில் கேள்வியாக ஆக்கியதை சட்டப்படி தவறு. துறையை ஒழிக்கும் உள்நோக்கம் கொண்டது. அரசுதுறைகள் சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டுமே தவிர ஆட்சியாளர்களின் அரசியல் சித்தாந்தத்திற்காக அதன் அடிப்படையையே அழிக்கும் பணியில் ஈடுபட்டால் அந்த துறை அதன் நோக்கத்தை இழந்து விடுகிறது. இந்த அடிப்படையில் அறநிலையத்துறை தனது நோக்கத்திலிருந்து தவறியதால் அதனை கலைத்து விட வேண்டும்.

> **ஹிந்துக்களை, கோவில்களை, கடவுளர்களை ஒழிக்க வேண்டும் என்ற விஷத்தைக் கக்கும் ஈவேராவைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு ஹிந்துக்களின் மனதை அறநிலையத்துறை புண்படுத்தியுள்ளது.**

ஹிந்துக்களை, கோவில்களை, கடவுளர்களை ஒழிக்க வேண்டும் என்ற விஷத்தைக் கக்கும் ஈவேராவைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு ஹிந்துக்களின் மனதை அறநிலையத்துறை புண்படுத்தியுள்ளது. இதற்கு காரணமான அறநிலையத்துறை அதிகாரிகள் ஆமீகு சட்டப்பிரிவு 299 மற்றும் 302கீழ் கைது செய்யப்பட வேண்டும்.

திமுக ஆட்சிக்கு வந்தபின் இது போன்ற செயல்பாடுகள் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஹிந்து கோவில்களில் ஹிந்து எதிர்ப்பு சித்தாந்தவாதிகளை பணியமர்த்தி ஹிந்து இன அழிப்பை அரசின் கொள்கையாக ஏற்றிருக்கிறது. சர்ச் கிறிஸ்தவர்களிடம், மசூதி முஸ்லீம்களிடம் ஹிந்து கோவில்கள் ஹிந்து இன அழிப்பு செய்பவர்களிடம்! தாமாக முன்வந்து விசாரணைக்குப் பல வழக்குகளை எடுத்துக்கொள்ளும் நீதிமன்றங்களும் கருத்துரிமைக்காக களமாடும் நீதிபதிகளும் கண்மூடி வாய்திறக்காமல் இருப்பது ஏன் என்ற கேள்வி மட்டும் ஹிந்துக்கள் மனதில் தொடர்ந்துக் கொண்டே இருக்கிறது.

# அரசியல் உலா

-கரிகாலன்

**SIR** வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தமிழ்நாட்டில் தொடங்கிவிட்டது. அது என்ன என்று பரவலாக எல்லோரும் புரிந்து கொள்வதற்குள் அந்தத் திருத்தத்திற்கான கால அவகாசம் முடிந்து போய்விடும். அதன் பிறகாவது விட்டுப்போன தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் இதையே ஒரு சாக்காக வைத்து வாக்குச்சாவடி முகவர்களை உரிய முறையில் ஆயத்தப்படுத்த முடியும். எல்லா கட்சிகளுக்குமே இது ஒரு நல்ல அருமையான வாய்ப்பு.



இந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தோல்வியடைய வேண்டும் என்றுதான் திமுக உள்ளிட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் விரும்புகின்றன. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் பொறுப்பான அதிகாரிகளை நியமிக்க வேண்டியது மாநில அரசின் கடமை. ஆனால் இத்திட்டம் முறையாக செயலாக்கம் பெறக்கூடாது என்பதற்காகவே வேண்டா வெறுப்பாக தேர்ச்சி பெறாத கடை நிலை ஊழியர்களை இப்பணியில் ஈடுபடுத்துகிறது மாநில அரசு.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி இதை ஆதரிப்பதோடு நில்லாமல் அதன் சாதகங்களை விளக்கியும் பேசுகிறார். ஆனாலும் கூட அரசியல் கட்சித் தொண்டர்கள் எந்த அளவு இந்தத் திட்டத்தை பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது தெரியவில்லை.

இந்தத் தருணத்தை தவறவிட்டால் பின்பு தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச் சீட்டில் தன் பெயரில்லை, வாக்காளர் பட்டியலில் என் குடும்பமே இல்லை, என் வாக்குப்பதிவு மையம் எதுவெனத் தெரியவில்லை என்றெல்லாம் புலம்பிப் பிரயோஜனமில்லை.


திராவிட மாடலின் வழக்கமான தேர்தல் தில்லுமுல்லுகள் இனி மேல் எடுபடாமல் போய்விடுமோ என்ற பயத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்தை எதிர்த்து நீதிமன்றத்தை நாடிய திமுக மீண்டும் மூக்கறுபட்டுள்ளது. திமுகவின் அராஜகம் இந்த தேர்தலோடு சர்ர்ரென சரிந்து விடும் என எதிர்பார்க்கலாம்.



சமீபத்தில் தவெக சிறப்பு செயற்குழுவில் கூட்டணி குறித்து முடிவு எடுக்கக் கூடிய அதிகாரத்தை கட்சி விஜய்க்கே வழங்கி இருக்கிறது. அவரும் தனித்துப் போட்டி என்று அறிவித்துவிட்டார். நாம் தமிழர் கட்சியின் சீமான் அதேபோன்று கருத்தை வலியுறுத்தி நாங்களும் தனித்து நிற்போம் என்று சொல்லி இருக்கிறார். ஆக இந்த இருவரது முடிவிலும் இப்போதைக்கு மாற்றம் இல்லை என எடுத்துக் கொள்ளலாம்.

தேர்தல் நெருங்கி வரும் பொழுது இவர்கள் இருவரும் எடுக்கும் முடிவுகள் திமுகவின் தோல்வியை அல்லது வெற்றியை நிர்ணயிக்கும், ஏதோ சிறு விதத்திலாவது பாதிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அது வரையில் திமுக தைரியமாக இருப்பது போல் தொடர்ந்து நடிக்கலாம்.

இவையெல்லாம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க சத்தம் இல்லாமல் தமிழக பாஜக வேலை செய்து வருகிறது. மாநிலம் முழுவதிலும் புதிதாக நியமிக்கப்பட்ட அணி பிரிவு நிர்வாகிகளுக்கான கூட்டம் ஒவ்வொரு கோட்டத்திலும் நடத்துகிறார்கள். கட்சியின் எந்த பொறுப்பில் இருந்தாலும் அவர்கள் இந்த முறை உற்சாகத்தோடு தேர்தல் வேலை செய்ய வேண்டும் என அவர்களைத் தயார்படுத்தி வருகிறார்கள்.




ஆக மொத்தத்தில் கூட்டணி குறித்து இது வரை எந்த ஒரு பரபரப்பான அறிக்கைகளும் வெளிவராத நிலையில் இன்னும் ஒரு மாத காலம் தமிழக அரசியல் சூழ்நிலை இதே மந்த கதியில் தொடரும் என்று நம்பப்படுகிறது.

தேர்தல் காலத்தில் சிறிய சிறிய கட்சிகளுக்குக் கூட அதீத முக்கியத்துவம் கிடைத்து விடுகிறது. காரணம் அவர்களால் கிடைக்கக் கூடிய சில ஆயிரம் வாக்குகள். அதையும் விட முக்கியமானது தங்கள் அணியில் இத்தனைக் கட்சிகள் ஒன்று திரண்டு இருக்கிறோம் என்று மக்களிடத்திலே கம்பீரமாக எடுத்துச் சொல்வதற்கு.

இந்த விஷயத்தில் உள்ளூர ஆயிரம் பயம் இருந்தாலும் வெளியிலே எதையும் காட்டிக் கொள்ளாமல் பலசாலி வேஷம் போட்டுத் திரிகிறது திமுக. அந்தக் கூட்டணியில் பிளவு ஏற்படும் என்று சிலர் நினைத்திருந்தாலும் கூட இந்தத் தேர்தலில் அதற்கு வாய்ப்பில்லாத சூழ்நிலை உருவாகிவிட்டது.

சிறிய கட்சிகளுக்குப் பின்னால் கூட அலைய வேண்டிய இந்த தேர்தல் காலத்தில், செ ாந்தக் கட்சியிலும் எந்த சலசலப்பும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். இருக்கக் கூடிய சில தலைவர்களை எத்தனை சங்கடங்கள் வந்தாலும் சகித்துக் கொள்ள வேண்டியது அவசியம். பாரதிய ஜனதா கட்சி இந்த விஷயத்தில் மிகப்பெரிய முன்னுதாரணம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது பாலபாடம் அரசியல் கட்சிகளுக்கு அதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த தேவை இருக்கிறது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவித்தாலும் சொந்தக்கட்சி தொண்டர்களுக்கே அந்த நம்பிக்கை பொய்த்து விடும் அளவுக்கு சமீபத்திய நிகழ்வுகள் ஏமாற்றம் அளிக்கின்றன.

கோட்டையிலே ஆட்சியைப் பிடிப்போம் என்று கனவு கொண்டிருக்கக் கூடிய வேளையில் கோட்டைச் சுவற்றில் சில கற்கள் காணாமல் போகின்றன. பெயர்த்தது யார் என்று எட்டிப் பார்த்தால் அது எடப்பாடி பழனிச்சாமியாக இருக்குமோ என்று சந்தேகம் வருகிறது.

விசுவாசத்திற்குப் பேர் போன கட்சி அஇஅதிமுக. இப்பொழுது கட்டுப்பாட்டிலும் பெயர் வாங்க வேண்டும் என்று நினைக்கிறாரோ என்னவோ. மிகவும் கெடுபிடியாக நடந்து கொள்கிறார் விலகியவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என கோரிக்கை வைத்தால் அவர்களையும் விலக்கி வைக்கிறார்.

எது எப்படிப் போனாலும், எப்படியோ எதிர்காலத்தில் கட்சி தன் வசம் இருக்கும் என உறுதியாக அவர் நம்புகிறார். இந்தத் தேர்தல் நேரத்திலும் வளைந்து கொடுக்காமல் இப்படி விறைப்பாக இருந்தால் அந்தக் கட்சிக்கு எதிர்காலம் இருக்குமா என்றுதான் சந்தேகம் வருகிறது.

மந்திரத்தால் மாங்காய் காய்க்காது என்பார்கள். தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கக்கூடிய சூழலில், யாரோ ஒரு மந்திரவாதி வரப்போகிறார், தமிழக அரசியலில் அதிசயம் நிகழ்த்தப் போகிறார் என்று அண்ணாந்து பார்க்க வேண்டிய கட்டாயத்தில் தான் தமிழக மக்கள் இருக்கிறார்கள்.




இங்கபாரு... உருண்டாச்சு பொரண்டாச்சு... குட்டிக்கரணம் கூட போட்டாச்சு. ஒண்ண்ணும் ஒத்துவல்லே... ஜனங்க சீரியஸா எடுத்துக்க மாட்டேங்கறா... நீங்க **gen-Z** இளசுகள் புரக்ஷி பண்ணுவான்னு வாய ஆன்னு தெறந்து வெச்சுண்டு பாக்கறேள்... அவங்கதான் மோடி மோடின்னு அந்த மனுஷன் பின்னாடியே போறான். அவங்க கூட உக்காந்து பேசறதுக்கும் அப்டேட்டடா இருக்கார் அந்த மனுஷன்.

உங்காளு என்ன பண்றான்? ஜியோல ரீல்ஸ் போட்டா அதானிக்கு காசு போறது ன்னு ஒளர்றான். அம்பானி மொறைக்கறான். இளசுகள் எதால சிரிக்கறதுன்னு இன்ஸ்டால பேசிக்கறதுகள். எங்க உருப்படறது?

ஓட்டுத் திருட்டுங்கறான். ஆதாரம் ரீம் ரீமா பேப்பர்ல இருக்குங்குங்கறான். கோர்டுக்குப் போயேண்டான்னா போனதடவ அவா ஒதைச்சதே இன்னும் வலிக்கறது. அதனால தெருத்தெருவா இப்படிப் பேசிண்டு திரிவேன், கோர்ட்டுக்கு மட்டும் போக மாட்டேங்கறான். ஜனங்க இருக்கட்டும் ஏ ஹே ஹேய்... பாத்தியா நோக்கே சிரிப்பு வரது.

இவன் தீக்குளிச்சாக்கூட சிரிக்கத்தான் செய்வா தெரியுமோ. ஏன்னு கேக்கறியா? ஊத்திக்கற பெட்ரோல்ல இருந்து அதானிக்கு ரூபிள்ல லாபம் வருதும்பன் இவன். இம்போர்ட் பண்ற அம்பானி பல்லக் கடிப்பன். இளசுகள் தலேல அடிச்சுண்டு போடா பொம்மான்னு டீ குடிக்கப் போயிடும்.

ஒண்ணா உனக்கா விஷய ஞானம் இருக்கணும். இல்லே சொல்லித்தரவன் புத்திசாலியா இருக்கணும். இங்க ரெண்டும் இல்லே... எங்கிட்ட பொலம்பி என்ன ஆகப் போறது?

# மதம் மாறிய வன்னியர்களை வைத்து வன்னியத் திருவிழாவிற்கு செக்

- இராமகிருஷ்ணன்

ஹிந்துக்களைப் பிரிப்பது அதில் ஒரு சிறு பகுதியை மதமாற்றி சர்ச் கட்டி கிறிஸ்தவ செயல்பாட்டை மேம்படுத்தி பாரம்பரிய ஹிந்து கோவில் வழிபாடுகளை மங்கச் செய்து பின்னர் ஹிந்து விழாக்களை ஒட்டு மொத்தமாக முடக்கி கோவில்களை அழிப்பது கிறிஸ்தவத்தின் பாரம்பரிய டூல் கிட். இந்தப் பிரயோகத்தில் சிக்கிய பல்லாயிரம் கிராமங்களில் ஒன்று திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் அமைந்த என்.பஞ்சம்பட்டி.

வன்னியர் சமுதாயத்தினர் காலங்காலமாக வழிபட்டு வந்த காளியம்மன் கோவிலைச் சுற்றி கிறிஸ்தவர்கள் மதமாற்ற வேலைகளைத் தொடங்கினார்கள். சில காலங்களில் கோவிலைச் சுற்றி கிறிஸ்தவர்களின் ஆதிக்கமும் அதிகரித்தது. இதற்கு அருகாமையிலேயே கிறிஸ்தவ சர்சும் கட்டினார்கள். இந்த ஊரின் பொது மைதானம் ஒன்று கோவிலின் அருகிலேயே உள்ளது. இந்த மைதானத்தில் கிறிஸ்தவ திருவிழாவை ஆண்டுதோறும் நடத்தத் தொடங்கினார்கள் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்களின் பண ஆதிக்கமும், ஹிந்துக்களின் உணர்வின்மையும் இந்த ஊரின் போக்கையே மாற்றி விட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின் என்.பஞ்சம்பட்டி ஹிந்துக்கள் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் தேதி காளியம்மன் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்தனர். கும்பாபிஷேகத்திற்காகப் பல ஊர்களிலிருந்து பக்தர்கள் வருவதால் ஊர் பொது மைதானத்தில் அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்தனர். ஊர் மைதானம் கிறிஸ்தவ சர்சின் மைதானம் என்று எண்ணிக்கொண்டிருந்த கோவில் நிர்வாகிகள் கிறிஸ்தவ நிர்வாகத்திடம் சென்று பொது மைதானத்தில் அன்னதானம் நடத்த அனுமதி கேட்டனர். ஆனால், ஆக்ரமிப்பு கிறிஸ்தவர்களோ அந்த மைதானம் அவர்கள் சொத்து இல்லை என்று தெரிந்திருந்தும் ஹிந்துக்களுக்கு அனுமதி மறுத்தனர். கிறிஸ்தவர்கள் அனுமதி மறுத்த செய்தி வெளியே கசிந்தவுடன் அந்த மைதானம் பொது மைதானம் தானே அது கிறிஸ்தவர்கள் சொத்தில்லையே என்று பரவலாக பேசப்பட்டது. அரசாங்க ஆவணங்களை ஹிந்துக்கள் புரட்டி பார்க்கத் தொடங்கினர். அப்போது தான் அது பொது மைதானம் என்று தெரியவந்துள்ளது. நிலைமை விபரீதம் ஆகும் என்று உணர்ந்த ஹிந்துக்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையை அணுகி பொது மைதானத்தில் எங்களுக்கு அன்னதானம் செய்ய அனுமதி வேண்டும் என்று வழக்குத் தொடர்ந்தனர். வழக்கு விசாரணையின் போது 100 ஆண்டுகாலமாக கிறிஸ்தவர்கள் தான் பயன்படுத்தி வருகிறோம் இதில் ஹிந்துக்களுக்கு அனுமதி தரக்கூடாது என்று கிறிஸ்தவர்கள் வாதிட்டனர். இந்த ஒருமுறை அனுமதித்தால் ஹிந்துக்கள் இந்த இடத்தில் அவர்கள் விழாக்கள் நடத்துவதை வழக்கமாக்கி விடுவார்கள் என்றும் வாதிட்டனர். வழக்கைவிசாரித்தநீதிபதி பொது இடம் ஒரு மதத்தினரின் வழிபாட்டிற்கு மட்டுமானதல்ல எல்லோருக்கும் பொதுவானது எனவே ஹிந்துக்கள் அன்னதானம் செய்ய காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று உத்ரவிட்டார். நீதிமன்ற உத்ரவிற்கு பின் வேறு வழியில்லாமல் காவல்துறையினர் அன்னதானத்திற்கு பாதுகாப்பு கொடுத்தனர்.

> **100 ஆண்டுகாலமாக கிறிஸ்தவர்கள் தான் பயன்படுத்தி வருகிறோம் இதில் ஹிந்துக்களுக்கு அனுமதி தரக்கூடாது என்று கிறிஸ்தவர்கள் வாதிட்டனர். இந்த ஒருமுறை அனுமதித்தால் ஹிந்துக்கள் இந்த இடத்தில் அவர்கள் விழாக்கள் நடத்துவதை வழக்கமாக்கி விடுவார்கள் என்றும் வாதிட்டனர்.**

உடனே, கும்பாபிஷேக திருவிழா மற்றும் அன்னதானத்தை சீர்குலைக்க 500க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ பெண்கள் சர்ச்சின் உள்ளிருப்பு போராட்டம் தொடங்கினார்கள். போராட்டத்திற்கான வசதிகளை சர்ச் நிர்வாகம் தடபுடலாக பிரியாணி உணவுடன் செய்து கொடுத்தது. எப்படியாவது சட்ட ஒழுங்குப் பிரச்சினையை பதிவு செய்ய வேண்டும்

என்பதற்காக 500க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ பெண்கள் சர்சிலிருந்து ஊர்வலமாக வந்து எங்களை கைது செய்யுங்கள் என்று காவல்துறையினரை வற்புறுத்தினர். கிறிஸ்தவர்களின் கோரிக்கையை ஏற்று அந்த பெண்களை கைது செய்து ஒரு திருமண மண்டபத்தில் வைத்து ராஜ மரியாதை செய்தது காவல்துறை. ஒரு பதட்டமான சூழலை ஏற்படுத்தினால் தான் ஹிந்துக்களை மிரட்டி ஒடுக்க முடியும் அரசாங்கத்தை பணிய வைக்க முடியும் என்று உணர்ந்த கிறிஸ்தவர்கள் ஆதார்கார்டுகளை சரண்டர் செய்ய போவதாக அறிவிப்பு வெளியிட்டனர். திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியதுடன் பொது மைதானத்தை பாஸ்கோ மைதானம் என்று அறிவித்து கிறிஸ்தவர்களின் பெயரில் அந்த சொத்தை மாற்ற வேண்டும் என்று கோரினர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆத்தூர் தொகுதி எம்.எல்.ஏவும் திமுக அமைச்சருமான ஐ.பெரியசாமி என்ற கிறிஸ்தவரின் ஆசி உள்ளதாகவும், ஹிந்து திருவிழாக்களுக்கு அந்த மைதானம் பயன்பட்டு விடக்கூடாது என்பதை உறுதி செய்ய துறைரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள கிறிஸ்தவர்கள் தீவிரமாக களமிறங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

**வன்னியர்களின் பாரம்பரிய விழாக்களை அந்த சமுதாயத்திலிருந்து மதம் மாறிய வன்னியர்களை வைத்தே முடக்கி வருகின்றார்கள் கிறிஸ்தவர்கள்**

என்.பஞ்சம்பட்டியில் வன்னிய சமுதாயத்தினரை சுமார் 100 ஆண்டுகள் முன்பு கிறிஸ்தவர்கள் குறி வைத்து மதம் மாற்றத் தொடங்கினர். இன்று இந்த ஊரில் ஹிந்துக்கள் ஏறத்தாழ 800 குடும்பங்களாகவும், கிறிஸ்தவர்கள் 3000 குடும்பங்களாகவும் மாறிவிட்டனர். ஆரம்ப காலக்கட்டங்களில் மண உறவுகள் வன்னியர் என்ற அடிப்படையில் பார்க்கப்பட்டது. மதம் ஒரு காரணியாக இல்லை. உறவு முறைளைப் பயன்படுத்தி பொருளாதார வசதிகள், ஆசை காட்டுதல், அச்சுறுத்துதல், ஏமாற்றுதல் என்று கொஞ்சம் கொஞ்சமாக வன்னியர் சமுதாயத்தினரை திண்டுக்கல் பகுதிகளில் கிறிஸ்தவர்கள் திட்டமிட்டு மதம் மாற்றினர். ஹிந்து வன்னியர் கோவில்களில் உள்ள கிடா வெட்டுதல், குறி சொல்லுதல் போன்ற பழக்கங்களை கிறிஸ்தவ சர்சுகளில் ஏற்படுத்தினாரகள். தேர் பவனி, கொடிமரம் போன்ற சம்பிரதாயங்களையும் ஏற்படுத்தி இரண்டுக்கும் வித்தியாசமில்லை என்று அடையாள மோசடியில் ஈடுபட்டனர்.

இன்று திண்டுக்கல் மாவட்டத்தின் பல ஊர்களில் ஹிந்து வன்னியர்களை விட கிறிஸ்தவர்களாக மதம் மாறிய வன்னியர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. வன்னியர்களின் பாரம்பரிய விழாக்களை அந்த சமுதாயத்திலிருந்து மதம் மாறிய வன்னியர்களை வைத்தே முடக்கி வருகின்றார்கள் கிறிஸ்தவர்கள். அதே சமயம், வன்னியர்கள் என்ற அடையாளத்தை முன்னிறுத்தி ஜாதி வெறுப்பு / அடையாள அரசியலை முன்னெடுக்கிறார்கள். ஜாதிக் கலவரங்கள் ஏற்படும் போது வன்னிய அடையாளம். ஹிந்துக்களை ஒழிக்க மத அடையாளம் என்று பல்முனை தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாடார் என்ற அடையாளத்தை முன்னிறுத்தி ஹிந்து அடையாளங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு நாடார் சமுதாயத்தின் பெருமிதத்தையும் பண்பாட்டையும் அழித்து, இதர ஹிந்து சமுதாயத்தினருக்கிடையே கலகத்தை மூட்டி கன்னியாகுமரி மாவட்டத்தை ''கன்னிமேரி'' மாவட்டமாக மாற்ற கிறிஸ்தவர்கள் தொடர்ந்து சதி செய்கிறார்கள். இதே சதியை வன்னிய சமுதாயத்தை மையப்படுத்தி திண்டுக்கல்லிலும் செய்து வருகிறார்கள். 1980களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்களின் செயல்பாடுகளாலும், ஐயா ஸ்தாணுலிங்க நாடார், மதுராநந்த ஸ்வாமி போன்ற மகான்களின் சீரிய தலைமையினாலும் இந்த கிறிஸ்தவ சதி முறியடிக்கப்பட்டது. இன்று திண்டுக்கல்லில் கூட பல ஹிந்து வன்னியர்கள் இந்த சதியை உணர்ந்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். இந்த விழிப்புணர்வு, ஒரு இயக்கமாக மாறினால் தான் நீண்ட வெற்றியைப் பெறும்.





# 240 கோடி நகரத்தார் சொத்து 2 நாளில் மீட்டுத் தந்த யோகி சிவ சேவைக்கு அர்ப்பணிப்பு

கடந்த அக்.31ல் வாரணாசியில் காசி நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் 60 கோடி ரூபாயில் கட்டப்பட்ட 10 மாடி கட்டிட தர்மசத்திரம் மக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்வில் இந்திய துணைக்குடியரசு தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தற்போது நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கட்டி முடித்த தர்மசத்திரம் இருந்த நிலம் 19 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருந்தது. அதை 2022ல் மீட்டுத் தந்தது யோகி அரசு. இந்த நிலம் எவ்வாறு மீட்கப்பட்டது என்பது குறித்து நமது ஸ்ரீ டிவிக்கு நகரத்தார்கள் கமிட்டியின் உறுப்பினர் ஓய்வுபெற்ற DSP திரு.முத்துக்குமார் கொடுத்த பேட்டியின் சில பகுதி.

**இந்த சிக்ரா நந்தவனம் எப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்பதை சொல்ல முடியுமா?**

60 கோடியில் இன்று கட்டப்பட்டுள்ள தர்சத்திரம் இருக்கும் இடம் நந்தவனம், பசுமடம் ஆகியவற்றிற்காக தான் வாங்கப்பட்டது. சாமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த ஆனந்த் மோஹன் மற்றும் அவரின் சகோதரர் கிருஷ்ண மோஹனால் இந்த நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது. இதை மீட்க பல்வேறு முயற்சிகள் நடந்தாலும், அரசியல் செல்வாக்கும், காசியில் இவர்களின் சமூகம் ஆதிக்கம் இருப்பதால், அவர்களுக்கு எல்லாமட்டங்களிலும் செல்வாக்கு பெற்று இருந்ததால் முடியவில்லை. எனவே நிலத்தை மீட்க நகரத்தார் சங்கத்தின் பொதுக்குழு கூடி ஓய்வுபெற்ற போலீஸ் ஈகுகயான என்னையும், அரசியல் செல்வாக்கு மிக்க மு.சோ. அழகப்பனையும் எங்களுக்கு உதவியாக **IOB** சேர்மனாக இருந்த தேனப்பன் , **ICCI** நாச்சியப்பன் மற்றும் செகரட்டரி கதிரேசனையும் நியமித்தார்கள்.

காசிக்கு வந்து பார்த்த போது தான் ஆக்கிரமிப்பை மீட்பது எவ்வளவு கடினம் என புரிந்தது. ஒரிஜினல் கதவு மூடப்பட்டு, அதற்குப் பின் ஒரு டீ கடை. ஆனால் பின் பக்கமாக திறந்து கிருஷ்ணா மேரேஜ் லான் என்ற பெயரில் வருடத்திற்கு 100 திருமணங்கள் நடத்தி நல்ல வருமானம் பார்த்திருக்கிறார்கள். திருமணத்திற்காக பந்தல்,கேட்டரிங்,குதிரை சவாரி,ஐஸ் க்ரீம் விற்பவர் என பலருக்கும் உள்வாடகைக்கு விட்டோடு. அவர்களின் வருமானத்தில் 30% கமிஷனும் இடத்திற்கான வாடகையும் வசூலித்து வந்தார்கள். சமாஜ்வாதி கட்சியின் கூட்டம்,பார்கிங்கிற்கும் பயன்படுத்தியதால் இந்த இடமே இவருடையது தான் என லோக்கலில் பலரும் நம்பினார்கள்.

நிலைமை இப்படியிருக்க லிட்டிகேஷனில் இறங்கினால் நம்மால் மீட்க முடியாது என புரிந்து கொண்ட நாங்கள், அங்கு குடியிருக்கும் ஒவ்வொருவரையும் அகற்றும் வேலையில் இறங்கினோம். சுமூகமாக லோக்கல் ஆட்களை வைத்து பேசி பணம் செட்டில் செய்து அவர்களை வெளியேற்றினோம். அந்த நிலம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தயார் செய்தோம். பெரும்பாலான ஆவணங்கள் பார்சி, உருது மொழியில் இருந்தன, அவற்றை மொழியாக்கம் செய்ய வேண்டியதாக இருந்தது.

மு.சோ.அழகப்பனின் முயற்சியால் **PMO**




அலுவலகத்திற்கு நன்கு பரிச்சயமானவரை சந்தித்தோம். அவர்கள் லக்னோ சென்று பாருங்கள் எனச் சொன்னதைத் தொடர்ந்து அப்போது பாஜக மாநில தலைவராக இருந்த சுதந்திரதேவ் சிங்கை சந்தித்து விஷயத்தை தெரிவித்தோம். அவர் முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சந்திக்க உதவினார். எங்கள் ஆவணங்கள் குறித்து விசாரித்த அதிகாரிகள் உடனடியாக காசி போலீஸ் கமிஷ்னரை சந்திக்கச் சொன்னார்கள்.

லக்னோவிலிருந்து புறப்பட்டு காசி வருவதற்குள் கமிஷ்னர் சதீஷ் கணேஷ் லோக்கல் ஆட்களை வரவழைத்து இருந்தார்.

**அப்படியென்றால் நீங்கள் வருவதற்குள் யோகிஜி அலுவலகத்தில் இருந்து உத்தரவு வந்து விட்டது?**

மிகச் சரி, எங்களிடம் ஆவணம் முதலானவற்றை கேட்டவர் இத்தனை ஆண்டுகள் என்ன செய்தீர்கள் எனக் கேட்டார்? சமாஜ்வாதி கட்சி ஆட்சியில் எங்களுக்கு நீதி கிடைக்காது என்பதால் அப்ரோச் செய்யவில்லை, இப்போது யோகி ஆட்சி என்பதால் உங்களிடம் வந்தோம் என பதில் அளித்ததோடு **Yellow card** உட்பட அனைத்தையும் சமர்ப்பித்தோம். நிலம் சம்பந்தமாக ஆவணம் சரியாக இருந்தால் உங்களுக்கு நீ தி, இல்லையென்றால் உங்கள் மீதே கடும் நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம், என்பதை கண்டிப்புடனும் அதேவேளையில் கனிவுடனும் தெரிவித்தார்.

**கமிஷ்னர் தமிழரா?**

இல்லை கர்நாடகாவைச் சேர்ந்தவர். ஆக்கிரமிப்பு நிலம் இருக்கும் சிக்ரா போலீஸ் சரக இன்ஸ்பெக்டர் பாண்டே என்பவரிடம் விவரங்களைச் சொல்லி எங்களுக்கு உதவிட உத்தரவிட்டார் கமிஷ்னர். அந்த இடத்திற்கு நேரடியாகச் செல்லுங்கள், விசாரியுங்கள். உண்மை இவர்கள் பக்கம் இருந்தால், அந்த ஆக்கிரமிப்பை புல்டோசர் கொண்டு இடித்துத் தள்ளுங்கள் என உத்தரவிட்டார்.

அடுத்த நாளே சிக்ரா போலீஸ் ஸ்டேஷன் சென்றவுடன் ஆவணங்களை சரிபார்க்க ரெவ்ன்யூ அதிகாரிகள் வந்திருந்தனர். நிலம் ஆக்கிரமிப்பு தொடர்பாக புகார் கொடுக்கச் சொன்னதையடுத்து செகரட்டரி லட்சுமணன் பெயரில் புகார் தந்தோம்.

**புகாரே அப்போது தான் தருகிறீர்கள்.**

இது எல்லாம் 2 நாள்களில் அதிரடியாக நடத்தியது யோகி அரசு. பின்னர் எங்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்திற்கு போலீசாருடன் சென்றோம், கிருஷ்ண மோஹன் சாவியை ஒப்படைத்தார். திறந்து பார்த்த போது தான் முன்பக்கம் சுவரை எழுப்பி அதன் பின்னால் மேரேஜ் லான் அமைத்திருப்பதை கண்டபோது எங்களுக்கே அதிர்ச்சியாக இருந்தது. உடனே புல்டோசரை வைத்து இடித்துத் தள்ளி முழுநிலத்தையும் மீட்டு எங்களிடம் ஒப்படைத்தனர். நிலத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமித்த சமாஜ்வாதி கட்சி சகோதரர்கள் மீது FIR போடப்பட்டு அவர்களை கைதும் செய்தது காவல்துறை.

மீட்ட நிலத்தை ஒப்படைத்தவுடன், நிலத்தை காலியாக வைத்திருக்காதீர்கள், சரியாக பராமரியுங்கள் என எங்களுக்கு அறிவுரை கூறினர்.

**ஒரு அரசியல் கேள்வி, யோகி பாஜக அரசு இல்லாமல் வேறு ஆட்சி இருந்திருந்தால் உங்கள் நிலம் மீட்கப்பட்டிருக்குமா?**

வாய்ப்பே இல்லை. நேர்மையான ஒரு ஆட்சி யோகி ஜி நடத்துவதால் தான் இது சாத்தியமானது. வேறு ஆட்சி என்றால் நாங்கள் அப்ரோச் செய்திருக்கவே மாட்டோம் என்பதே உண்மை.

இந்த நேர்காணலில் ஓய்வுபெற்ற DSP முத்துக்குமார் அவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சிவத்தொண்டு, அவர்களுக்கும் காசிக்குமான தொடர்பு, நகரத்தார் சமூகம் எப்படி இறைபணியிலும், தமிழ்த்தொண்டிலும் வாழையடிவாழை என ஈடுபடுவதற்கான காரணங்கள் என பல விஷயங்களையும் பகிர்ந்து கொண்டார். அந்த விரிவான பேட்டியின் காணொளி QR Oode கொடுக்கப்பட்டுள்ளது.

SCAN ME

**மநீம தலைவர் கமல்ஹாசன் பிறந்தநாள் அன்று வீட்டுக்குச் சென்று வாழ்த்து தெரிவித்த முதல்வர் -**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

பைசன் படம் பார்க்க நேரம் இருக்கு....
கமல் வீட்டுக்கு போக நேரம் இருக்கு....
வேங்கைவயல் போகவும், கள்ளக்குறிச்சி போகவும் மூஞ்ச திருப்பு....

**எதிர்பார்த்தோம், ஏமாந்தோம் இனி போராட்டம் தான் - அரசு ஊழியர்கள்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

எதிர்பார்த்து தேர்தல்
தில்லு முல்லு
பண்ணுனீங்க..
ஏமாந்ததுக்கு என்ன
பண்ண போறீங்க...
வாங்கிட்டு ஒதுங்காம
இருந்தா சரி




**கருப்பு,சிவப்பு,நீலம் இணைந்தால் எந்தக் காவியும் நம்மை எதுவும் செய்ய முடியாது - முதல்வர் ஸ்டாலின்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அப்ப காவிய காட்டி பச்சைய ஏமாத்திறலாம்.. நீலத்துக்கும் சிவப்புக்கும் இரண்டு துண்ட போட்டுறலாம்... எல்லாத்துக்கும் வெல வெச்சாச்சு... காவியால ஒன்னும் பண்ண முடியாது தான்..

**திருமாவளவனுக்கு "இசட்" பிரிவு பாதுகாப்பு கோரி அரியலூரில் விசிகவினர் உண்ணாவிரதம்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இவங்க சொல்ற ஒன்றிய அரசோடு **Z** பிரிவு பாதுகாப்புக்கு மாற்றா, தொப்புள்குடி உறவுகளிடம் சொல்லி அண்ணனுக்கு ஒரு ஒட்டகப் படையை உருவாக்கலாமே !!

**குடும்ப ஆட்சி நடத்தி ஊழல் செய்ய பெரியாரும் அண்ணாவும் சொன்னார்களா ? தவெக அருண்ராஜ்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

அவர்கள் சொன்னத எல்லாம் செய்ரதுனா, இன்னும் மோசமா இருக்குமே... விஜய் குடும்ப அடிமை அவர்களே...

**பணகுடி அருகே நாதக சார்பில் மாடு மேய்க்கும் போராட்டம் - செய்தி**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

ஆறறிவுள்ள மனுஷ பயலுங்க
நமக்கு எப்படியும் வாக்கு
போடமாட்டாங்கனு....
ஆடு,மாடு, மரம் னு கிளம்பிட்
டாரோ. குஜகீ ல அதுங்க
பேரையும் சேர்க்கணும்னு
போராடாம இருந்தா சரி....

**- நா.பாஸ்கரன்**

**சட்ட விரோதமாக பணம் பெற்ற வழக்கில் மமக கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லாவுக்கு ஓராண்டு சிறை தண்டனை - நீதிமன்றம்**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

நவம்பர் மாசத்துல எந்த முஸ்லீம் பண்டிகையும் இல்லையே ! காவல்துறை தகுரியமா கைது செய்யுமா ?

**Bigg Boss மீது வழக்கு போடுவோம், Toll gate வேல்முருகன் ஆவேசம் - செய்தி**

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

இந்த போராட்டத்திற்கு கூட்டணி கட்சியோட **bigboss** கிட்ட எப்படி அனுமதி வாங்கிருப்பாரு ?

# போதையின் பாதையில் தமிழகத்தின் எதிர்காலம்:
## சிறந்த “குடி” மகன்களை உருவாக்கும் திராவிட மாடல்

— யுவராஜ் தாமோதரன்
மாநில செயலாளர், ABVP வடதமிழகம்.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று பாரதியால் பாடப்பெற்று, பாரதம் முழுமைக்கும் ஒரு முன்மாதிரியாகச் சுட்டிகாட்டபடும் மாநிலமாக திகழ்ந்து வந்தது தமிழகம். வளர்ச்சி, கல்வி, சமூக நீதி எனப் பேசப்படும்போது, ‘திராவிட மாடல்’ என்று ஒரு கருத்தியல் பெருமிதத்துடன் பேசப்படுகிறது. ஆனால், இந்தக் கருத்தியல் அலங்காரங்களுக்குப் பின்னால், நாம் இன்று நிஜமாக எதிர்கொள்ளும் கேள்விகள் அச்சுறுத்தக்கூடியதாக இருக்கின்றன. தமிழகத்தின் தெருக்களில் இன்று போதைப்பொருள் வெள்ளமாகப் பாய்கிறது. இது கஞ்சா என்ற பழைய விஷம் மட்டுமல்ல; ‘மெத்’ (Meth), ‘எல். எஸ்.டி’ (LSD) போன்ற நவீன, இரசாயன வஸ்துக்கள் வரை சாதாரணமாகக் கிடைக்கிறது.

ஒருபுறம், சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் ஆளும் கட்சியின் நிர்வாகிக்குத் தொடர்பு இருப்பது அம்பலமான பிறகும், ‘விசாரணை நடக்கிறது’ என்று மட்டும் கூறிவிட்டு மௌனம் சாதிக்கப்படுவது, இதற்கு ஆளும் வர்க்கத்தின் ஆதரவு இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. ‘போதையில்லா தமிழ்நாடு’ எனப் பதாகை பிடிப்பவர்கள், உண்மையிலேயே இந்தச் சவாலை எதிர்கொள்ளத் தயங்குகிறார்களா அல்லது இந்தச் சந்தை இவர்களுக்கு இலாபகரமானதா என்ற கேள்விகள் எழுகின்றன.

**போதை மற்றும் மதுவின் நேரடி பாதிப்பு, தமிழகத்தின் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மீது மிகக் கொடூரமாக பதிந்து பாதித்து வருகிறது. வகுப்பறையில் இருக்க வேண்டிய மாணவர்கள், இன்று காவல் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் தலைகுனிந்து நிற்கிறார்கள்.**

போதைப்பொருள் ஒழிப்பு குறித்த இந்தக் கேள்விகள் ஒருபுறம் என்றால், அரசின் அதிகாரப்பூர்வமான போதைக் கொள்கை (மது) மறுபுறம் சமூகத்தைக் கபளீகரம் செய்து வருகிறது. ஆண்டுக்குச் சுமார் 50,000 கோடி வருமானம் தரும் ‘TASMAC’ என்னும் வணிகமே, ‘திராவிட மாடலின்’ சமூகநீதி கோஷங்களை கன்னத்தில் அறையுமளவுக்கு எதிரொலிக்கிறது. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து முன்னிருந்த ஆட்சியாளர்கள் வகுத்த திட்டங்களின் பலன்களை நாம் இன்று அறுவடை செய்து வருகிறோம். ஆனால் தற்போது ஆட்சியல் இருக்கும் அரசு மக்களின் நலனை பணயம் வைத்துத்தான் தன் கஜானாவை நிரப்புகிறது.

‘குடி குடியைக் கெடுக்கும்’ என்று பாட்டிலில் எழுதிவிட்டு, அதை அதிகபட்ச விலையில் விற்பனை செய்வதும், பாட்டிலுக்கு 10 ரூபாய் வழிப்பறி செய்வதும், மக்களின் நலனை காப்பாற்றுவதா அல்லது பணத்தைக் கொள்ளையடிப்பதற்கான ‘சட்டபூர்வமான வழியா’ என்ற விவாதம் மிக வெளிப்படையாக நடந்து வருகிறது. இந்த விமர்சனங்கள் போதாதென்று, சர்வதேச சந்தையில் கிடைக்கும் ‘பிரீமியம்’ மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட புதிய மது வகைகளை டாஸ்மாக் கடைகளில் அறிமுகப்படுத்த இந்த அரசு ஆர்வம் காட்டுகிறது. இந்த அரசின் நோக்கம் மதுவை ஒழிப்பதல்ல, மாறாக மதுப் பழக்கத்தை நவீனமயமாக்கி, அனைத்து தரப்பு மக்களையும் அதற்கு அடிமையாக்குவது தானோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

மதுவிலக்கை நோக்கிச் செல்வதாகத் தேர்தலில் வாக்குறுதி அளித்தவர்கள், இன்று மக்களை மேலும் போதையை நோக்கி அழைத்துச் செல்கிறார்கள் என்றால், அந்த வாக்குறுதிகள் அனைத்தும் வெறும் தேர்தல் தந்திர நாடகம் தானா என்று மக்கள் விவாதிப்பதில் நியாயம் இல்லாமலில்லை.

போதை மற்றும் மதுவின் நேரடி பாதிப்பு, தமிழகத்தின் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மீது மிகக் கொடூரமாக பதிந்து பாதித்து வருகிறது. வகுப்பறையில் இருக்க வேண்டிய மாணவர்கள், இன்று காவல் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் தலைகுனிந்து நிற்கிறார்கள். தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) சமீபத்திய தரவுகளின்படி, இளம் குற்றவாளிகளின் (Juvenile Delinquency) வழக்குகளில் தமிழகம் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக இருப்பது, ‘திராவிட மாடல் கல்வி வளர்ச்சியின்’ வெற்றி என்று தனக்கு தானே பாராட்டுவிழா எடுத்துக்கொள்பவர்களின் பெருமைகளுக்கு சாவு மணி அடிக்கிறது.

சக மாணவனைத் தாக்குவது, திருடுவது, ஏன்... கொலை வரை இளஞ்சிறார்கள் துணிந்து செய்கிறார்கள் என்றால், நமது சமூகக் கட்டுமானத்தில் எங்கோ ஒரு பெரிய பலவீனம்

ஏற்பட்டுள்ளது. இந்த இளைய தலைமுறை குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்குப் பின்னால், எளிதாகக் கிடைக்கும் போதைப்பொருட்கள் மற்றும் தெருவிற்கு தெரு அரசே நடத்தும் மதுபானக் கடைகள் முக்கியக் காரணிகளாக உள்ளன.

'மாணவர்களுக்கு காலை உணவு' கொடுத்தோம், 'இலவசக் கல்வி வழங்கினோம்' என்று தம்பட்டம் அடிக்கும் திராவிட மாடல்



முதல்வரே, அந்தக் குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது போதையால் பாதிக்கப்பட்டிருந்தால், அந்தக் கல்வியின் உண்மையான பயன் என்னவாக இருக்கும்? மாணவர்களைக் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு, ஒருபுறம் விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்துவதும், மறுபுறம் அதே போதைப்பொருள் கடத்தலை ஆட்சியாளர்களின் துணையுடன் நடத்துவதும், 'நாங்கள் பாசாங்கு செய்கிறோம்' என்று மக்கள் முகத்தில் அடித்தாற்போல் சொல்வதற்குச் சமமாகும்.

தி.மு.க. அரசு, கடந்த தேர்தலில் '505 வாக்குறுதிகள்' அளித்து அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதில் பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்தவண்ணம் உள்ளன; ஒரு அரசின் அடிப்படைப் பொறுப்புகளில் முதன்மையானதான சட்டம்-ஒழுங்கு மற்றும் போதைக் கட்டுப்பாடு ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் இந்தக் கையாலாகாதனம், இந்த அரசை **"Failure Model"** அரசாக தரம்தாழ்த்தியுள்ளது.


ஆட்சியாளர்கள் புதிய மது வகைகளை டாஸ்மாக் மூலம் அறிமுகப்படுத்தத் துடிப்பதும், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயங்குவதும், இந்த அரசு சமூக நலனை விட அரசியல் ஆதாயத்துக்கும், வருவாய்க்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்ற வாதத்தை வலுப்படுத்துகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது மக்களை கவரும் வகையில் திட்டங்களை அறிவித்து

**குற்றவாளிகளாக மாறும் மாணவர்கள் மற்றும் இளம்தலைமுறையினர், வெறும் புள்ளிவிவர இழப்பு மட்டுமல்ல; அது தமிழகத்தின் அடுத்த 50 ஆண்டுகளுக்கான வளர்ச்சியில் ஏற்படப்போகும் வெற்றிடமாகும்.**

விளம்பரம் செய்துகொள்வது மட்டுமல்ல; அது எதிர்காலத் தலைமுறையைக் குற்றங்கள் மற்றும் போதையின் பிடியிலிருந்து விடுவிப்பதில்தான் அடங்கியிருக்கிறது. இந்த அடிப்படைச் சவாலில் கோட்டை விட்டுவிட்டு, "திராவிட மாடல்" என்று பெருமைகளைப் பேசுவது, மக்களை ஏமாற்றும் செயல்.

இந்த அரசு உடனடியாக விழித்துக் கொள்ளாவிட்டால், தமிழகம் கொடுக்கபோகும் விலை நினைத்து பார்க்க முடியாத அளவிற்கிருக்கும். போதைக்கு அடிமையாகி, குற்றவாளிகளாக மாறும் மாணவர்கள் மற்றும் இளம்தலைமுறையினர், வெறும் புள்ளிவிவர இழப்பு மட்டுமல்ல; அது தமிழகத்தின் அடுத்த 50 ஆண்டுகளுக்கான வளர்ச்சியில் ஏற்படப்போகும் வெற்றிடமாகும். சட்டம்-ஒழுங்கில் ஏற்பட்டுள்ள இந்த ஓட்டைகள், நிர்வாகத் திறமையின்மையையும், அதிகாரத்தின் மீதுள்ள பிடி தளர்ந்துவிட்டதையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தங்கள் கட்சிக்குள்ளேயே போதை மாஃபியாக்கள் ஊடுருவியிருப்பதைக் கண்ட பிறகும், ஆட்சியாளர்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்குவது, அவர்கள் தங்கள் பதவியைத் தக்கவைக்க தமிழக மாணவர்களின் எதிர்காலத்தை பலியிடவும் தயாராக இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

2026லாவது விழித்துக் கொள்ளுமா தமிழகம்?



# உயர்சாதி கட்டுப்பாட்டில் இராணுவம்

## - தத்தாத்ரேய கௌல் பிராமணர் ராகுல் காந்தி

- அருண்ப்ரபு

நாட்டைத் தங்கள் குடும்பச் சொத்தாக நடத்தி வந்த காந்தி - நேரு குடும்பம் 2014ல் அது கைவிட்டுப் போனபோது என்னதான் இருந்தாலும் வாஜ்பாயி போல இந்த ஆளும் ஒரு 5-6 வருஷம் ஆளுவான். அப்புறம் போயிருவான். நாம் தான் எல்லாம் என்று இறுமாந்து இருந்தனர். 2019ல் மோடிக்கு மேலும் அதிகப் பெரும்பான்மை என்றவுடன் கொஞ்சம் கொக்கரிக்கத் தொடங்கினர். முடியவில்லை. 2024ல் கவிழ்ந்துவிடும் என்று கடும் எதிர்பார்ப்பில் இருக்க நாயுடு - நிதிஷ் கூட்டணியோடு பாஜக சேர நிமிர்ந்து நின்றது தேசம். அதன் பிறகு இவர்களுக்கு மொத்தமாக நம்பிக்கை போய்விட்டது. மேலும் 2011லிருந்து பலமுறை கொம்பு சீவிப் பெயிண்ட் அடித்துக் களமிறக்கி ஜல்லிக்கட்டுக் காளை என்று அவர்களே புகழ்ந்து கொண்ட ராகுல்காந்தி தோல்விகளில் சதம் கண்டிருக்கிறார்.

இதில் coming of age என்று 55 வயது வரை வயதுக்கு வருகிறார், வருகிறார் என்று பத்திரிகைகளில் தொடர்ச்சியாகப் பூப்புனித நீராட்டு விவரணை வேறு. எதுவும் வேலைக்கு ஆகவில்லை என்ற போது படியளந்த பெருமாள் பேசாதிருப்பாரா? டீப் ஸ்டேட்டின் அப்பன் சோராஸ் அழைத்துப் பேசி ஏதாவது செய், மோடியை பதவியிறக்க வேண்டும் என்று கடுமை காட்டினார். மண்ணெண்ணை ஊற்றுகிறேன், செக்கெண்ணை சிறப்பானது, கடுகெண்ணை காரம் அதிகம், விளக்கெண்ணை பேதிக்குப் போகும் என்று டிவி சித்த வைத்தியர்கள் போல ஆரம்பித்துப் பார்த்தார் ராகுலர். எதிர்பார்த்த அளவிற்கு மோடிக்கு எதிரான அலையைக் கொண்டு வர முடியவில்லை. இவர்கள் ட்விட்டரில் வைத்த பொங்கல்கள் மிஞ்சி ஊசிப்போய்த் தூக்கி வீசினார்கள். இப்போது சாதிவாரியாக ஹிந்து மக்களைப் பிரித்து அந்த ஓட்டுக்களைச் சிதறடித்த மர்மமும் அவரது "தாய் மதமும்" கைகொடுத்தால் போதும் கரை சேரலாம் என்ற கணக்கில் சாதிவாரிக் கணக்கெடுப்பு என்று ஆரம்பித்தார். அதன்படி "நாட்டின் மொத்தச் சாதிகளைக் கணக்கெடுத்து மக்கள் வாரியாகப் பிரித்து, நாட்டின் மொத்தச் சொத்துக்களைக் கணக்கெடுத்து எந்தச் சாதியினரிடம் எவ்வளவு சொத்து உள்ளது என்று பார்த்து அதைப் பிடுங்கி அவர்கள் சாதி எத்தனையோ அத்தனை மட்டும் அவர்களிடம் கொடுத்துவிட்டு மற்றதை மற்ற சாதிகளுக்குக் கொடுப்பேன்" என்றார். யாரும் கண்டுகொள்ளவில்லை.

நாட்டின் பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட தலைமை நிலையங்களில் உயரதிகாரிகளில் குறிப்பிட்ட சாதிக்காரர்களே இருக்கிறார்கள் என்றார் இராகுலர். உள்துறை அமைச்சர் அமித்ஷா உங்கள் பாட்டி காலத்தில் சிவில் சர்வீஸ் எழுதி வந்தவர்கள் இவர்கள். இவர்களது பதவி உயர்வு உள்ளிட்ட அனைத்தும் பாட்டி காலத்திய விதிமுறைகளின் படி நடக்கிறது. மற்ற சாதிகள் ஐஏஎஸ் ஐபிஎஸ் ஆகவேண்டும் என்று பாட்டி நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று உயர் பதவிகளுக்கு அவர்கள் வந்திருப்பார்கள். உங்கள் பாட்டி ஏன் நடவடிக்கை எடுக்காதிருந்தார் என்று கேட்டார். வாயை மூடிக் கொண்ட ராகுலர் இப்போது அதே விஷயத்தை வேறு மாதிரிக் கொண்டு வருகிறார்.



பிஹாரில் தேர்தல் பிரச்சாரம் செய்யும் போது ஔரங்காபாத் என்ற இடத்தில் பேசிய ராகுலர் "நாட்டின் முக்கியமான அமைப்புகளில் குறிப்பிட்ட 10% சாதியினர் மட்டுமே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். குறிப்பாக ராணுவம், நீதித்துறை, அரசு நிர்வாகம் என்று அனைத்திலும் இப்படியே இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினர் இங்கே முக்கியப் பொறுப்புகளில் இல்லை என்றும் நாட்டின் முக்கிய நிர்வாகப் பொறுப்புகளில் இதர பிற்படுத்தப்பட்ட சாதியில் வந்த செயலர்கள் 3 பேர் மட்டுமே உள்ளனர்" என்றும் கூறியிருக்கிறார். தேசிய சாதிவாரிக் கணக்கெடுப்பு வேண்டும் என்று பேசிய ராகுலர்

ராணுவத்தை முதல் முறையாக இந்தச் சர்ச்சையில் இழுத்துள்ளார். மேலும் பேசும்போது இந்தியாவின் பெரிய தனியார் கம்பெனிகள் முற்றிலும் 10% சாதிக்காரர்களை மட்டுமே வேலைக்கு வைக்கின்றனர் என்றும் பேசியிருக்கிறார். குறிப்பாக தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இப்படி ராணுவத்தில் கூட 10% ஆட்கள் வைத்ததே சட்டமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

ராணுவத்தில் சாதியை இழுத்துப் பேசுவது ஆபத்தான போக்கு என்றும் ராணுவம் சாதிகளுக்கு அப்பாற்பட்டுச் செயல்பட்டு வருகிறது என்று ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகள் கூறி ராகுலைக் கண்டித்துள்ளனர். மேஜர் ஜெனரல் ஜி. டி. பக்ஷி கூறுகையில் "கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன், ராணுவத்தை உங்கள் சாதிப் பிரச்சனைகளில் இழுக்காதீர்கள். இந்நாட்டில் எந்த ஒரு பாகுபாடும் இன்றி "வா, தேர்வுகளில் கலந்து கொள், தேர்ச்சி பெற்றால் உள்ளே வா, இல்லையென்றால் போ" என்று இருப்பது ராணுவம் மட்டுமே. இந்த நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்து நாட்டையும் மக்களையும் காத்துவரும் அமைப்பை இழிவுபடுத்தாதீர்கள்'' என்று சொல்லியிருக்கிறார். ஓய்வுபெற்ற கர்னல் சஞ்சீவ் மாலிக் பேசும் போது "ராணுவத்தில் சேர சாதி, மதம், இனம், மொழி என்று எந்த பேதமும் கிடையாது. தகுதியிருந்தால் வரலாம். இதில் சாதியை நுழைப்பது ராணுவத்தைப் பலமிழக்க வைக்கும்'' என்று பேசியிருக்கிறார்.

ராகுலின் முப்பாட்டன் ஜவஹர்லால் நேரு தன் சொந்தக்காரரை ராணுவத்தலைமைக்கு உயர்த்தி 1962ல் சீனாவிடம் தேசம் அவமானப்படக் காரணமானார். அவர் ஏன் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, இதர சாதிகளில் இருந்து ராணுவத் தலைவரைக் கொண்டு வராமல் தன் சொந்தக்காரன் கௌல் பிராமணனைக் கொண்டுவந்தார்? அம்பேத்கர் தேர்தலில் தோற்கவேண்டும் என்று உறுதியாக இருந்தவர் ராகுலின் முப்பாட்டன் நேரு என்பது வரலாறு. ஏன் ஒரு தாழ்த்தப்பட்ட தலைவர் தோற்கவேண்டும் என்று கடுமை காட்டினார்?

ஓய்வு பெற்ற கர்னல் சுனில் குமார் கூறுகையில் "முதலில் ராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதாரம் வேண்டும் என்று பேசினார். இப்போது 10% சாதியினர் ராணுவத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று சொல்கிறார். ராணுவத்தில் மட்டுமே "சர்வ தர்ம ஸ்தலம்" என்று ஒவ்வொரு படைப்பிரிவிலும் உண்டு. அனைவரும் அங்கேதான் வழிபாடு செய்வார்கள். இவர் பேசும் முட்டாள்தனமான வார்த்தைகளால் ராணுவத்தின் ஒற்றுமையை மாற்ற முடியாது.'' என்று சொன்னார்.

ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் "ராணுவத்தைச் சாதிப் பிரச்சனையில் இழுப்பதே தவறு. ராணுவ வீரர்களுக்கு தேசத்தைக் காப்பதே தர்மம். சாதி, மதம்

**நேரு ஏன் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, இதர சாதிகளில் இருந்து ராணுவத் தலைவரைக் கொண்டு வராமல் தன் சொந்தக்காரன் கௌல் பிராமணனைக் கொண்டுவந்தார்?**

இன்னபிற பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் அவர்கள். காங்கிரஸ்காரர்கள் அரசியல் லாபத்துக்கு ராணுவத்தைக் கொச்சைப்படுத்தக் கூடாது'' என்று தெரிவித்தார்.

அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா பேசும்போது "ராகுல் காந்தி ஒரு தேசத்துரோகி. அவருக்குச் சொல்லிக்கொடுப்பவர்கள் அவரை நீதித்துறையைத் தாக்கு, ராணுவத்தைத் தாக்கு, அரசு நிர்வாகத்தைத் தாக்கு, அதுவும் சாதி ரீதியாகத் தாக்கு என்று சொல்லித் தருகிறார்கள். இந்தத் தேசத் துரோகியும் அதைச் செய்கிறார். இது ராணுவத்தையும் தேசத்துக்காக உயிர் நீத்த வீரர்களையும் அவமதிக்கும் செயல். ஆனால் தேசத்துரோகி அப்படித்தான் செய்வார்'' என்று கூறினார்.



உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசும்போது "இந்தப் பேச்சுக்காக ராகுல்காந்தி வெட்கப்படவேண்டும். நாம் என்றுமே ராணுவத்தை சாதி, இன ரீதியாகப் பிரித்துப் பார்த்ததில்லை. அது நம் பழக்கமில்லை. ராகுல் இந்தப் போக்கை நிறுத்திக்கொள்ளவேண்டும்'' என்று சொன்னார்.

ஆனால் இராகுலர் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முடிக்க வேண்டும் என்று முனைப்பாக மீண்டும் மீண்டும் இதையே பேசுவார். அவருக்குத் தேவை இந்த நாடு பலமாக இருக்கக்கூடாது. ஆட்டுவிக்கும் வெள்ளையரின் தாளத்துக்கு ஆடும் அடிமையாக இருக்கவேண்டும் என்பதே நோக்கம். அதை நோக்கி அவர் பயணிப்பார். நாம்தான் எச்சரிக்கையாக நம் நாட்டின் பலத்துக்கும் நம் மக்களின் நலனுக்கும் ஏதுவான விஷயங்களைச் செய்து இராகுலரின் நோக்கத்தை முறியடித்து தேசத்தைக் காக்க வேண்டும். வந்தே மாதரம்.

# மம்தானியின் வெற்றி? யாரின் வெற்றி?

- குமரி மைந்தன்

நியூயார்க் மாநகர மேயராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜோஹ்ரான் மம்தானி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த வெற்றி இந்திய வம்சாவளியினரின் வெற்றி! உழைக்கும் வர்க்கத்தின் வெற்றி! குடியேற்றகாரர்களின் வெற்றி! இவை அனைத்திற்கும் மேலாக Genzயின் வெற்றி! என்று பலவிதமான Narrative செட்டிங் உலகம் முழுவதும் கிளம்பியுள்ளது. உண்மையில் இது யாருக்கான வெற்றி?

ஜோஹ்ரான் மம்தானி இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்று கொண்டாடும் இந்தியர்கள் வியப்புக்குரியவர்கள் அல்ல. உலகிலேயே எளிதாக ஏமாறும் கூட்டம் இவர்கள் தானே!

மீரா நாயர் என்ற பஞ்சாபி ஹிந்துப்பெண்ணிற்கும் மெஹமூத் மம்தானி என்ற குஜராத்தை பூர்வீகமாகக் கொண்டு யுகாண்டாவில் குடியேறியவருக்கும் மகனாக பிறந்தவர் ஜோஹ்ரான் மம்தானி. பாலஸ்தீன ஆதரவு, ஹிந்து பண்பாட்டு வெறுப்பு, இந்தியாவை அவலமாக சித்தரிப்பது என்பதை கொள்கைகளாக கொண்டு இவரது குடும்பம் செயல்படுத்தி வருகிறது. திரைத்துறையில் தாய் மீரா நாயரும், கல்வித்துறையில் தந்தை மெஹமூத் மம்தானியும், அரசியல் மற்றும் கருத்தியலாக்கத்தில் மம்தானியும் இப்பணியை செவ்வன செய்துவருகின்றனர். ஜோஹ்ரான் மம்தானி தன்னை ஒரு மதச்சார்ப்பற்றவராக காட்டிக்கொண்டாலும், இஸ்லாமிய அடிப்படைவாத ஆதரவு செயல்பாடுகளில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்பவர். செப்டம்பர் 11 அமெரிக்காவில் நடந்த இரட்டை கோபுர தாக்குதலால் அதிகம் பாதிக்கப்பட்டது முஸ்லீம்களே என்றார். தாக்குதலுக்குப் பின் ஹிஜாப் அணிந்து தமது அத்தையால் நடமாட முடியவில்லை என்று கூறி குற்றவாளிகளுக்கு பரிதாபம் தேடித்தரும் முயற்சியில் ஈடுபட்டவர். இவரது அத்தை ஹிஜாப் அணியும் பழக்கம் இல்லாதவர் என்று பின்னர் தெரிய வந்தது. கடந்த 2 ஆண்டுகளாக அமெரிக்காவில் பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டை ஆதரிப்பதுடன் அதை பரப்புவதிலும் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டார்.

காலிஸ்தானிய பிரிவினைவாதம், பாகிஸ்தான் ஆதரவு குழுக்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளவர் தான் மம்தானி.

மம்தானியின் தேர்தல் பிரச்சாரத்தின் போது பல முஸ்லீம் அடிப்படைவாத குழுக்கள் அமெரிக்காவில் விரைவில் ஷரியா ஆட்சி வரும் என்று கோஷமிட்டன. மம்தானியும் தன் பிரச்சாரத்தில் அமெரிக்கா என்பது குடியேற்றகாரர்களின் நாடு என்பதை அறிவுறுத்தி வந்தார். தனது வெற்றிக்குப் பின் இதே கருத்தை வலியுறுத்திப் பேசினார். இந்தப் பேச்சுக்கள் மூலம் அமெரிக்காவை இஸ்லாமிய நாடாக மாற்றும் சதிச் செயலுக்கு மம்தானி உதவுவார் என்பது உறுதியாகிறது. இலண்டனின் மேயராக சாதிக் கான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் நடந்த இஸ்லாமிய குடியேற்றமும் அதைத் தொடர்ந்த வன்முறைச் சம்பவங்களும் இன்று இலண்டனின் பலப் பகுதிகளை உள்நாட்டு சட்டங்களுக்கு அப்பாற்பட்ட பகுதிகளாக மாற்றி விட்டன. இன்று இதே நிலை நியூயார்க்கிற்கு ஏற்படக் கூடும். அமெரிக்காவில் ஆப்பிரிக்க முஸ்லீம்களின் குடியேற்றத்தை ஊக்குவித்தல் அல்லது சட்டவிரோத குடியேற்றகாரர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருத்தல் போன்ற நிலைப்பாட்டை எடுப்பார் மம்தானி. அமெரிக்காவில் கொள்ளை, திருட்டு, போதை, வன்முறை சம்பவங்கள் போன்ற சட்டவிரோத செயல்களில் பெரும்பாலும் கருப்பர் இனத்தவர் ஈடுபடுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதைக் கண்டுகொள்ளாமல் வளர்த்தி விட்டால் அச்சத்தில் பிற சமூகங்கள் அமைதி காக்கும். அதில் சிலர் எதிர்ப்பு தெரிவித்தால் வெள்ளை ஆதிக்கத்தனம் என்று முத்திரை குத்தி அரசியலுக்கும் அது பயன்படும். இயல்பாகவே குடியரசு கட்சியினர் அதிலும் குறிப்பாக டிரம்ப் வெள்ளை நிற வெறி பிடித்தவர்கள்,

**மம்தானியின் தேர்தல் பிரச்சாரத்தின் போது பல முஸ்லீம் அடிப்படைவாத குழுக்கள் அமெரிக்காவில் விரைவில் ஷரியா ஆட்சி வரும் என்று கோஷமிட்டன. மம்தானியும் தன் பிரச்சாரத்தில் அமெரிக்கா என்பது குடியேற்றகாரர்களின் நாடு என்பதை அறிவுறுத்தி வந்தார். தனது வெற்றிக்குப் பின் இதே கருத்தை வலியுறுத்திப் பேசினார்.**

அவர்கள் கையில் அதிகாரம் இருப்பதால் திட்டமிட்ட சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் வன்முறைகளை இனவெறி கோணத்தில் இவர்கள் அரசியலாக்க முற்படுவர். இதைத் தான் மம்தானியும், மம்தானியை முன்னிறுத்தும் ஜிகாதி இடதுசாரி குழுக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

வெள்ளையருக்கு எதிராக அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைப்பது, வெள்ளை இனத்தவரின் ஒரு பகுதியினரை பழமைவாதிகள் என்று முத்திரை குத்தி அவர்களுக்கு எதிராக இன்னொரு வெள்ளையினர் குழுவை உருவாக்கி உலக அரசியலைக் கைப்பற்றும் ஒரு திருப்பு முனையாக மம்தானி தேர்தல் வெற்றியை இடதுசாரி ஜிகாதி குழுக்கள் பயன்படுத்தும்.

**செப்டம்பர் 11 அமெரிக்காவில் நடந்த இரட்டை கோபுர தாக்குதலால் அதிகம் பாதிக்கப்பட்டது முஸ்லீம்களே என்றார். தாக்குதலுக்குப் பின் ஹிஜாப் அணிந்து தமது அத்தையால் நடமாட முடியவில்லை என்று கூறி குற்றவாளிகளுக்கு பரிதாபம் தேடித்தரும் முயற்சியில் ஈடுபட்டவர்.**

பாலஸ்தீன ஆதரவு போக்கு, இஸ்ரேலுடான அமெரிக்க உறவில் சிக்கல்களை ஏற்படுத்தும். ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளுடனான ஒப்பந்தங்கள் பலவற்றில் மாற்றம் ஏற்படும். இஸ்லாமிய குடியேற்றத்தால் பாதிக்கப்பட்டு குடியேற்றக்காரர்களின் கட்டுபாட்டிற்குள் சென்ற நாடுகள் ஒருபுறம் அதை எதிர்த்து போராடும் நாடுகள் ஒருபுறம் என்று பிளவு ஏற்படும். இந்தப் பிளவை அமெரிக்க அரசியல் மேலும் விரிவுபடுத்தும். சவுதி அரேபியா, குவைத், கத்தார், எகிப்து, சிரியா, ஈரான், ஈராக், ஜோர்டான் போன்ற நாடுகளில் அரசியல் மாற்றங்கள் அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப மாறும் இது அப்பகுதியின் ஸ்திரதன்மைக்கு பெரும் சவாலாக அமையும். இந்நிலையை சீனா முழுமையாகப் பயன்படுத்தி அமெரிக்காவில் தனது ஆதிக்கத்தை மேம்படுத்தும்.

மம்தானியின் தேர்தல் வெற்றி GenZயின் வெற்றி, தொழிலாளர்களின் வெற்றி என்று கொக்கரிப்பவர்கள் ஒரு உண்மையை மறைத்து விடுகிறார்கள். நியூயார்க்கில் ஒரு சிறிய வீட்டில் வசிக்கும் எளிய தலைமகன் என்று அழைக்கப்படும் மம்தானியின் தேர்தல் செலவிற்கு கோடிக்கணக்கான பணம் எங்கிருந்து வந்தது? இதை செலவு செய்தவர்கள் யார்? இந்த பிரச்சாரங்கள் எப்படி நடத்தப்பட்டன என்பதை கூர்ந்து நோக்க வேண்டும்.

சீன கம்யூனிஸ்ட் நிதியுதவி, மசூதிகளில் இஸ்லாமிய அடையாளத்தை முன்னிறுத்திய பிரச்சாரம் போன்றவை பல கேள்விகளை எழுப்புகின்றன. வெளிப்படையாக மசூதிகளில் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டும் மதச்சார்பின்மையின் அடையாளமாக மம்தானி காட்டப்பட்டது இந்திய தேர்தல்களில் அந்நிய தலையீடுகளை நினைவுக்கு கொண்டு வருகிறது. இந்தியாவில் அமெரிக்கா, சீனா போன்ற நாட்டவர்கள் செய்யும் கருத்தாக்கத்தை இன்று அமெரிக்காவில் சீனர்கள் செய்கிறார்கள். உலகத்தில் பல நாடுகளின் அரசுகளை கவிழ்க்க செய்யப்படும் அமெரிக்காவின் வழிமுறைகளை இன்று ஜிகாதிகளும் சீன கம்யூனிஸ்ட்டுகளும் அமெரிக்காவிலேயே செயல்படுத்துகிறார்கள்.

மம்தானியின் இந்த வெற்றி அமெரிக்கா அழிவிற்கான தொடக்கம் மட்டுமின்றி உலக ஸ்திரத்தன்மைக்கான சவாலாகவும் பார்க்கப்பட வேண்டும். வெள்ளை ஆதிக்க வெறியை விடுத்து அனைவரையும் உள்ளடக்கி அவரவர் பண்பாடு, பாரம்பரியம் மீது பற்றுள்ளவர்களின் கட்சியாக குடியரசு கட்சி மாற வேண்டும். நிறவெறியை முன்னிறுத்தினால் ஜனநாயக கட்சிக்கு அழிவே.! ஹிந்துக்கள், யூதர்கள், பற்பல நாட்டு சமயத்தினர் இவர்களின் ஆதரவைப் பெற அக்கட்சி முயலாவிட்டால் அடுத்த சில ஆண்டுகளில் அமெரிக்கா சிதறுண்டு போகும் என்பதில் ஐயமில்லை!

இதனை உணர்ந்து பாரம்பரியம் காக்க நினைக்கும், அதே சமயத்தில் அடிப்படைவாதத்தை வெறுத்து ஜனநாயகத்தை பேணும் கருத்தியல்வாதிகளை இணைக்கும் முயற்சி உலகம் முழுவதும் ஏற்படுத்த முயலாவிட்டால் பல மேற்கத்திய நாடுகளும் அமெரிக்காவைப் போன்று அழிவை நோக்கி பயணிக்கத் தொடங்கும்! ஜிகாதிகளின் துணைக்கொண்டு இடதுசாரி சித்தாந்தங்கள் தேசியப் பண்பாட்டு அடையாளங்களை அழிக்கும் திட்டத்தை உலகம் முழுவதும் செயல்படுத்தி வருகின்றன. மம்தானியின் வெற்றி இந்த கூட்டுச் சதியின் வெற்றியே!



செய்தி சிந்தனை

**செய்தி:**

**வள்ளியூரில் பூசாரியை மிரட்டிய கிறிஸ்தவ கண்டக்டர் போராட்டத்தில் குதித்த ஹிந்துக்கள்**

**சிந்தனை**

கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்தால் பேருந்து நிறுத்தம் கூட மாறி விடும். மத அடிப்படைவாதத்தின் உச்சம். ஹிந்துக்களின் அடிப்படை உரிமை பறிப்பு. வீதிக்கு வந்து உரிமையை நிலைநாட்டிய ஹிந்துக்கள்

**செய்தி:**

**ஹிந்துமதத்தையும், பெண்களையும் ஆபாசமாகப் பேசிய பொன்முடிக்கு மீண்டும் பதவி**

**சிந்தனை**

பதவி பறி போனது உள்கட்சி அரசியலுக்காக.. பெண்கள் ஹிந்துக்கள் என்று அப்பாவிகள் நம்ப வைக்கப்பட்டனர். தேர்தலுக்கு தேர்ந்தெடுத்த திருட்டுத்தனத்தை அரங்கேற்றவே பொன்முடிக்கு பதவி

**செய்தி:**

**முஸ்லீம் ஆணின் இரண்டாவ மனைவிக்கு தெரியப்படுத்த**

**சிந்தனை**

பொது சிவில் சட்டம் இல்லா தில் ஈடுபடலாம் என்ற நிலை விளைவிக்கிறது. இருப்பினு திருமணம் என்ற தீர்ப்பு அடு தெரிந்து கொள்ள உதவும்!

**செய்தி:**

**பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் காரு குடி கிராம கோயிலை ஆக்கிரமிக்கும் அறநிலையத்துறை - மக்கள் எதிர்ப்பு**

**சிந்தனை**

ஆலயத்திலிருந்து ஹிந்துக்களை வெளியேற்றி சொத்துக்களை கொள்ளையடிக்கும் அரசு. பின்னர் வழிபாட்டு முறைகளை மாற்றி ஹிந்துக்களின் அடிப்படை உரிமையை பறித்து அடையாளங்களை அழித்து ஹிந்து இன அழிப்பை செயல்படுத்தும் அறநிலையத்துறை

**செய்தி:**

**ஆபாச படங்களுக கொந்தளிப்பு ஏற்**

**சிந்தனை**

இந்திய இளை தீர்ப்பு! நேபாள சமூக வலைதளங் எனுணநூ ஐ இத அபாயகரமான வி

# திகள்
# னைகள்

**செய்தி:**

**சென்னை அருகே எந்த துறையின் அனுமதியும் இன்றி சாலையில் மர்ம மேம்பாலம்**

**சிந்தனை**

அரசு அதிகாரிகளுக்குத் தெரியாமல் இப்படி ஒரு பாலம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. பாலம் கட்டுபவர் யார்? அவருக்கு அதிகாரிகள் ஏன் உதவ வேண்டும்?

**து திருமண பதிவுக்கு முன், முதல்**
**வேண்டும் - நீதிமன்றம் உத்தரவு**

ததால் முஸ்லீம்கள் பலதார திருமணத்
பெண்களின் பாதுகாப்பிற்கு குந்தகம்
ம், அனுமதி பெற்றால் இரண்டாம்
த்த திருமணம் என்ற தகவலையாவது

**செய்தி**

**நீதிபதி நிஷா பானு இடமாற்றத்தை அமல்படுத்த வலியுறுத்தி வழக்கறிஞர்கள் கொலிஜியத்திற்கு கடிதம்**

**சிந்தனை**

பணி மாற்ற உத்தரவு வந்தும் புதிய பொறுப்பை ஏற்காமல் நிஷா பானு தட்டிக்கழிப்பது ஏன்? நீதியரசர் சட்டத்திற்கு விரோதமாக செயல்படலாமா? துணிந்து சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டால் கிடைக்கும் லாபம் என்ன?

**க்குத் தடை விதித்தால்**
**படும் - உச்சநீதிமன்றம்**

ஞர்களை அவமானப்படுத்தும்
போராட்டம் ஒட்டுமொத்தமாக
களை தடை செய்ததற்கு.. நேபாள்
த்துடன் ஒப்பிடுவது தவறானது..
விளைவை ஏற்படுத்தக் கூடியது..

**செய்தி**

**பாகிஸ்தானின் நியூக்ளியர் மையங்களை அழிக்கும் திட்டத்தைத்தடுத்த இந்திரா காந்தி - முன்னாள் CIA அதிகாரி தகவல்**

**சிந்தனை**

தவறான முடிவால் தவிக்கிறது பாரதம்! வெளிநாட்டு உறவு சமரசங்கள் என்ற பெயரில் தேசத்தின் பாதுகாப்பிற்கும், உலகின் பாதுகாப்பிற்கும் பங்கம் ஏற்படுத்திய முடிவு! இந்திரா காந்தி உறுதியான பிரதமர் என்ற நம்பிக்கை தவறானது!

# பாகிஸ்தானை நம்பி மோசம் போகுமா வங்கதேசம்

— N.C.பிபிந்த்ரா

பாகிஸ்தானின் சமீபத்திய வங்கதேசம் மீதான ராஜதந்திர மற்றும் இராணுவ உடன்படிக்கை முயற்சிகள் உலக அரசியல் பார்வையில் வேண்டுமானால் நேர்மறையான தோற்றத்தை ஏற்படுத்தலாம்.

மூன்று நெருடலான விஷயங்கள் யதார்த்ததை நமக்கு உணர்த்துவதாக இருக்கின்றன

1.1971 இன் ஏற்பட்ட சிக்கலின் சாயல்,

2.நீண்டகாலமாக நிலவும் பதட்டமான சூழ்நிலை,

3. புவிசார் அரசியல் ரீதியாக பொருத்தமானதாக பாகிஸ்தான் எடுக்கும் முயற்சி

எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும் போது இவை அனைத்தும் சந்தர்ப்பவாதமானவை, இந்தியாவின் கிழக்குப் பகுதியில் செல்வாக்கை வளர்ப்பதற்கான இராஜதந்திர, உபாயம் தானே தவிர வங்காளதேசத்தின் நலனுக்கானது அல்ல.

2025ம் ஆண்டு பாகிஸ்தான் இராணுவக் குழுக்களும்.,மூத்த தலைவர்களும் டாக்காவிற்கு விரைந்தனர், கடற்படை இராணுவ அதிகாரி பங்களாதேஷ் செல்ல இருப்பதாக வரும் செய்திகள் அனைத்திற்கும் இராணுவ விரிவாக்கதிற்கான ஒத்துழைப்பு மற்றும் உளவுத்துறை தொடர்புகளை மேம்படுத்துதல் என்பது தான் நோக்கம் என ஊடகங்கள் சொன்னாலும், இவை அனைத்தும் சந்தர்ப்பவாதமே தவிர நாடுகளுக்கிடையேயான நல்லிணக்கத்தை மேம்படுத்த அல்ல.

இதுகுறித்த ஆய்வு 1971ல் இருந்தே தொடங்கப்பட வேண்டும். அவ்வாண்டு மார்ச் 25 அன்று, பாகிஸ்தான் இராணுவம் ஆபரேஷன் சர்ச்லைட்டைத் தொடங்கியது. கிழக்கு பாகிஸ்தானில் வங்காள தேசிய வாதத்தை நசுக்க குறி வைத்து கொலைகள், கும்பல் கும்பலாக பாலியல் வன்கொடுமைகள், சமுதாய சீரழிப்பு, அரசு நிர்வாகத்தை முடக்குதல் போன்றவை அரங்கேற்றப்பட்டன. 3 மில்லியன் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.. அதுமட்டுமல்லாமல், 1 கோடி பெங்காலிகள் அகதிகளாக இந்தியாவிற்குத் தப்பியோடி வந்துள்ளனர். இந்தியா அச்சமயத்தில் தலையிட்டு பாகிஸ்தானை சரணடைய வைத்தது.

இருப்பினும் கூட பாகிஸ்தான் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வங்காளதேசத்தின் அங்கீகாரத்தைத் தடுத்து நிறுத்தியது. பல தரப்பு அழுத்தத்திற்கு பின் பிப்ரவரி 22, 1974 அன்று லாகூரில் நடந்த OIC உச்சிமாநாட்டின் போது தான் பங்களாதேஷை அங்கீகாரம் செய்தது.

சிக்கித் தவிக்கும் நபர்களை திருப்பி அனுப்புதல், சொத்துக்களைப் பிரித்தல், சொத்து உரிமைகோரல்கள் மற்றும் போர்க் கைதிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பது போன்றவைகள் சரி செய்யப்பட பல ஆண்டுகள் ஆனது, இதனால் மக்கள் குறைகள் தீர்க்கப்படாமல் போயின. பாகிஸ்தான் ஒருபோதும் நடந்த அட்டூழியங்களுக்கு மன்னிப்பு கேட்கவில்லை. இதனால் நல்லிணக்கம் என்பதற்கு சாத்தியகூறுகள் இல்லை.

2000களின் முற்பகுதியில் பிரபலமான "லூஸ் டாக்" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி, வங்கதேச மக்களை இனவெறி பிடித்தவர்களாகவும், முரட்டுத்தனமானவர்களாகவும், தாழ்ந்தவர்களாகவும் சித்தரித்தது.

2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறுவப்பட்ட பங்களாதேஷின் சர்வதேச குற்றத் தீர்ப்பாயம் (ICT&BD), 1971 போர்க் குற்றங்களுக்காகவும், குற்றவாளிகளுடன் ஒத்துழைத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது வழக்குத் தொடுத்தது.

பல உயர்மட்ட நபர்கள் தண்டிக்கப்பட்டனர். தீர்ப்பாயத்தின் நடைமுறைகள் சர்வதேச சட்ட வல்லுநர்களால் விவாதிக்கப்பட்டாலும், அதன் மையப்புள்ளி வங்காளதேசத்திற்கு நீதியை பெற்றுதருவதில் நாட்டம் கொண்டதாக இருந்தது. ஆனால், இந்த விசாரணைகளின் போது பாகிஸ்தானின் தற்காப்பு நிலைப்பாடு பங்களாதேஷுக்கு பாகிஸ்தான் மீதான அவநம்பிக்கையை ஆழப்படுத்தியது. இது பாகிஸ்தான் தன் கடந்தகால தவறுகளை ஏற்க மறுத்ததையே காட்டியது.

பாகிஸ்தானுடைய தற்போதைய முயற்சிகளான உயர்மட்ட இராணுவப் பேச்சு வார்த்தைகள், இராணுவ பயிற்சி பரிமாற்ற ஒப்பந்தங்கள், பயங்கரவாத எதிர்ப்பிற்கான

ஒத்துழைப்பு இவை அனைத்தும் ராஜதந்திரத்திற்கும் அப்பாற்பட்டவை.

வங்கதேசத்தில் தங்களின் செல்வாக்கை விரிவாக்கும் உளவுத்துறை முயற்சிகள், பங்களாதேசத்தைப் பங்காளியாகக் கருதாமல், இந்தியாவுக்கு எதிராக காய் நகர்த்தும் திட்டத்தின் பகுதியாகவே கருத வைக்கிறது. ஆனால், தற்போதைய இந்த பாகிஸ்தானின் பாசம் என்பதை வங்களாதேசத்தைப் பொறுத்தவரையில் அதன் வரலாறுக்கும், நிலவும் சூழ்நிலைக்கும் அந்நாட்டிற்கு எதிரானதாகவே பார்க்கப்பட வேண்டும்.

வங்கதேசத்தின் வெளியுறவுக் கொள்கை




என்பது இந்தியாவுடன் வலுவான வளர்ச்சி மற்றும் நல் உறவுகளைப் பேணுதல், சீனாவுடனான பொருளாதார ஈடுபாடு மற்றும் பிராந்திய மன்றங்களில் பங்கேற்பது போன்றவையாகும்.

இந்தியாவிற்கும், பங்களாதேஷுக்கும் இடையேயான நல்லுறவை கெடுக்க பாகிஸ்தானின் இந்த முயற்சி உதவலாம். ஆனால், வரலாற்று குறைகளை நிவர்த்தி செய்யாமல், வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தாமல் இம்முயற்சி வெற்றி பெற சாத்தியமில்லை.

இதற்கு நேர்மாறாக, வங்கதேசத்துடனான இந்தியாவின் உறவு உறுதியானது மற்றும் நீடித்தது. கடந்த பத்தாண்டுகளில், வங்கதேசம் சந்தித்த பேரழிவுகளின் போது இந்தியா முன்னணியில் இருந்து பரஸ்பர உதவியாளராக இருந்ததுள்ளது.

வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரப்பூர்வ பதிவுகள், மீண்டும் மீண்டும் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதைக் காட்டுகின்றன. பல நாடுகள் உதவி புரிந்தாலும் இந்தியா தான் உடனுக்குடன் செயலாற்றி வருகிறது.

இன்று, பாகிஸ்தானுக்கும் வங்கதேசத்துக்கும் இடையிலான மக்கள் தொடர்பு குறைவாகவே உள்ளது, வர்த்தகமும் பெரியளவில் இல்லை.

கடந்த கால குற்றங்களை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு பரிகாரம் தேடாமல், நேர்மையான பேச்சு வார்த்தையில் ஈடுபடாத வரை பாகிஸ்தானின் நேசக்கரத்தை பங்களாதேஷ் சந்தேகத்திற்குரியதாகவே பார்க்கும்.

இதற்கிடையில், வர்த்தகம், மருத்துவ சுற்றுலா, உயர் மட்ட கல்வி, கலாச்சார பரிமாற்றம் மற்றும் இயற்கை பேரிடர்களின் போது ஆதரவு போன்றவற்றை வழங்கி, இந்தியா தொடர்ந்து நம்பகமான கூட்டாளியாக உள்ளது.

குறிப்பாக, இந்தியா-வங்காளதேசம் இடையே இருதரப்பு வர்த்தகம் தோராயமாக 12 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தாலும், பாகிஸ்தான்-வங்காளதேசம் இடையேயுள்ள வர்த்தகம் 650 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே. இது இந்தியாவோடு ஒப்பிடும்போது வெறும் 5% மட்டுமே.

பாகிஸ்தான் 1971 இல் நடந்த குற்றங்களுக்கு பொறுப்பான நடவடிக்கைகள் மூலம் அதை எதிர்கொள்ள வேண்டும். இல்லையென்றால் இந்த முயற்சிகள் பிராந்தியப் போட்டிக்கான ஒரு தந்திர உபாய சூழ்ச்சிகளாக கருதப்படுமே அன்றி, தார்மீக பரஸ்பர உறவாக கருதப்பட மாட்டாது.

மேலும், பாகிஸ்தான் பிராந்திய ரீதியாக தனிமைப்பட்டுள்ளது, காரணம் அதன் அனைத்து அண்டை நாடுகளுடனும் (ஆப்கானிஸ்தான், இந்தியா மற்றும் ஈரான்) நல்ல அமைதியான உறவில் இல்லை. அமைதியான உறவுகளைத் தக்கவைக்க முடியாமல் அது “அண்டை நாடுகளின் கெட்ட பையனாக” மாறிவிட்டது.

நெருக்கடியிலும் சாதாரண நேரங்களிலும் பங்களாதேஷின் முதல் மற்றும் மிகப்பெரிய உதவியாளருமான இந்தியாவை பகைத்துக்கொள்வதே பாகிஸ்தானின் குறிக்கோள்களாக இருக்கும்போது, இவ்வளவு உறுதியற்ற தன்மையைக் கொண்டுள்ள ஒரு நாட்டுடனான உறவை மேம்படுத்திக்கொள்வதினால் என்ன நன்மை கிடைக்கும் என்று பங்களாதேஷ் நினைக்கும்.

பாகிஸ்தான் வெறும் வார்த்தை ஜாலங்களில் தன் மனவருத்தத்தை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக செயல்கள் மூலம் வெளிப்படுத்தும் வரை, பாகிஸ்தானின் சமீபத்திய முயற்சி உள்நோக்கம் கொண்டதாகவும், சுயநலமானதாகவும், திட்டமிட்ட அரசியல் நோக்கமுடையதாக இருக்குமேயன்றி, உண்மையாகவே நல்லுறவை மேம்படுவதற்காகத் தான் பாகிஸ்தான் முயல்கிறது

# வந்தேமாதரம் - 150
# தேசத்தின் மந்திரம் உருவான பின்னணி!

செங்கோட்டை ஸ்ரீராம்

1757 தொடங்கி 1857 முதல் சுதந்திரப் போராட்டம் வரையில், பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் படைகளுக்கு எதிராக குறுநில மன்னர்களும் நிலச்சுவான்தார்களும் போரிட்டார்கள். பின்னர் பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சி முறை வந்த நிலையில், பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டம் என்பது பொது மக்களின் கைகளுக்கு மாறியது. அப்போது, அவர்களை ஒருங்கிணைக்கும் மந்திரச் சொல்லாக உருப்பெற்றது “வந்தே மாதரம்”

1896 செப்.28ல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் ரவீந்திர நாத் டாகுரால் முதல் முதலில் வந்தேமாதர கீதம் பாடப்பட்டது. இப்பாடலை அதற்கு 20 வருடங்களுக்கு முன் எழுதியிருந்தார் வங்கக்கவி பங்கிம் சந்திர சட்டர்ஜி. அந்தப் பாடலையே காங்கிரஸ் மாநாட்டின் பாடலாக டாகுர் சில திருத்தங்களுடன் பாடினார். அப்பாடல் உருக்கமாகவும் தொண்டர்களின் உற்சாகத்தைத் தூண்டுவதாகவும் அமைந்தது. அது பெரும் வரவேற்பு பெற்றபின் தொடர்ந்து காங்கிரஸ் கூட்டங்களில் பாடப்பட்டது. 1905ல் கவிஞர் சரளா தேவி சௌதுராணி பனாரஸ் காங்கிரஸ் அமர்வில் தேசியப் பாடலாக இதனைப் பாடினார். லாகூரிலிருந்து, லாலா லஜ்பத் ராய் வந்தே மாதரம் என்ற பத்திரிகையை வெளியிட்டார். 1905ல் ஹிராலால் சென் தயாரித்த முதல் அரசியல் படத்தில் வந்தே மாதரம் இசைக்கப்பட்டது. அந்நேரம் வங்கப் பிரிவினை ஏற்பட, பிரிட்டிஷாருக்கு எதிரான சுதந்திர தாகத்தை வெளிப்படுத்திய சொல்லாக வந்தேமாதரம் திகழ்ந்தது.



இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்திய வந்தே மாதர கீதத்தின் தோற்றம், ஒரு சுவாரஸ்யமான பின்னணியில் நிகழ்ந்தது! பாரதீயர்களின் தன்மான உணர்ச்சியைத் தட்டியெழுப்பி, சுய கௌரவம், தன்னெழுச்சி, பாரம்பரியப் பெருமை இவற்றைப் பறை சாற்றும் வகையில் அமைந்தது. உயர்ந்த பண்புகளும் வளங்களும் கொண்ட திருநாட்டின் புதல்வனான நான் எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயனான உனக்கு அடிமையாக இருப்பதா என்ற சுதந்திர உணர்ச்சி தட்டியெழுப்ப அமைந்த அந்தப் பாடல் பிறந்தது இப்படித்தான்!

பெர்ஹாம்பூரில் நியமிக்கப்பட்ட முர்ஷிதாபாத் மாவட்ட துணை ஆட்சியரான பங்கிம் சந்திரர் ஒரு பல்லக்கில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். பல்லக்கை சுமந்து சென்றவர்கள், கிரிக்கெட் மைதானத்தின் உள் வழியே சென்று சாலையை அடைவார்கள் என்பது அவருக்குத் தெரியாது. அந்நேரம், மைதானத்தில் பிரிட்டிஷ் வீரர்கள் கர்னல் டஃபின் தலைமையில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். இந்தப் பல்லக்கால் விளையாட்டு தடைப்பட, அது ஒரு மோதலுக்குக் காரணமானது.

கர்னல் டஃபின் பல்லக்கை நிறுத்தி, பங்கிம் சந்திரரைக் கீழே இழுத்து, அவரை அடித்து விட்டார். இந்நிகழ்வால், பங்கிம் சந்திரர் பெரிதும் அவமானப் பட்டதாக உணர்ந்தார். முதல்வர் ராபர்ட் ஹேண்ட், ரெவரெண்ட் பார்லோ, நீதிபதி பென்பிரிட்ஜ், லால்கோலாவின் ராஜா ஜோகிந்திர நாராயண் ராய், துர்காசரண் பட்டாச்சார்யா, பிரிட்டிஷ் அதிகாரிகள் சிலர், கிரிக்கெட் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த உள்ளூர்வாசிகள் சிலர் என அங்கே இருந்தனர்.

1873 டிச.16 - மறுநாளே பங்கிம் சந்திரர் கர்னலுக்கு எதிராக முர்ஷிதாபாத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். மாவட்ட நீதிபதி விண்டர் சாட்சியங்களை விசாரித்தார். பலரும் அச்சத்தால் அந்த மோதலை மறுக்க, முதல்வர் ராபர்ட் ஹேண்ட் மோதலை ஒப்புக் கொண்டார். ராஜா ஜோகிந்திர நாராயண் ராயும் துர்காசரண் பட்டாச்சார்யாவும்

பங்கிம் சந்திரரை ஆதரித்தனர். எனினும் நீதிபதி சாட்சியத்தை முரண்படச் செய்தார். இதனால் நீதிமன்றம் அடுத்த விசாரணையை 1874 ஜன.12க்கு தள்ளி வைத்தது. அன்று நீதிமன்றத்தில் சுமார் ஆயிரம் பேர் கூடினர். அதனால் தனி அறையில் விசாரணையைத் தொடர்ந்தார் நீதிபதி. அங்கே வழக்கை வாபஸ் பெறுமாறு பங்கிம் சந்திரர் நிர்பந்திக்கப்பட்டார். குறைந்த பட்சம் அனைவர் முன்பும் கர்னல் மன்னிப்பு கோரினால் வழக்கை வாபஸ் பெறுவதாக அவர் கூற, அதன்படி கர்னல் டஃபின் மன்னிப்பு கேட்டார். 1874 ஜன.15ல் அமிர்தபஜார் பத்திரிக்கையில் இது செய்தியாக வெளியானது.

விஷயம் அத்துடன் முடியவில்லை. கர்னல் டஃபின் மன்னிப்புக் கேட்க கைகளைக் கூப்பிய போதெல்லாம், உள்ளூர் இளைஞர்கள் கைதட்டிச் சிரித்து கத்தினர். இதனால் கர்னல் தாம்



அவமானப்பட்டதாக உணர்ந்தார். அது உடனிருந்த ஐரோப்பியர்களை கோபப்படுத்த, பங்கிம் சந்திரரை தீர்த்துக் கட்டும் வேலைகளில் அவர்கள் இறங்கினர். ராஜா ஜோகிந்த்ர நாராயண் ராய்க்கு இந்த ரகசியத் தகவல் கிடைத்ததும், பங்கிம் சந்திரரைக் காப்பாற்றும் முயற்சியில் அவரை லால்கோலாவுக்கு அழைத்தார். அவரும் சென்றார். அங்கே கோயில்கள் சூழ்ந்திருந்த விருந்தினர் மாளிகையில் தங்கினார். ஜகதாத்ரி, துர்கா, காளி - மூன்று வடிவங்களில் தெய்வங்களை தரிசித்து ஆன்மீக நாட்டம் கொண்டார். மனத்தில் விரக்தி குறையவில்லை. பிரிட்டிஷ் அட்டூழியங்களுக்கு எதிராக மக்களை ஒருங்கிணைப்பது குறித்து யோசித்தார். அவர் மனத்தில் ஒரு மந்திரம் உருப்பெற்றது.

**பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டம் என்பது பொது மக்களின் கைகளுக்கு மாறியது. அப்போது, அவர்களை ஒருங்கிணைக்கும் மந்திரச் சொல்லாக உருப்பெற்றது "வந்தே மாதரம்"**

லால்கோலாவில் முழுமதி நிறைந்த பௌர்ணமி இரவில், 13 எழுத்துகள் கொண்ட "வந்தே மாதரம்" சொற்றொடர் மனத்தில் தோன்றியது. பின்னாளில் அந்த மந்திரமே பூர்வீக மக்களின் ரத்தத்தை உசுப்பேற்றியது. ஆங்கிலேயரின் ரத்தத்தையும் கொதிக்க வைத்தது. இந்தப் பாடலுடன், ஆனந்தமடம் நாவல் ஏப்ரல் 1882இல் முழுதாக வெளியிடப்பட்டது. சன்யாசி கிளர்ச்சியின் போது, பிரிட்டிஷ் காலனித்துவ சக்திக்கு எதிரான சுதந்திரப் போராளிகளின் முயற்சி களை சித்திரித்தது நாவல்.

நாவல் வெளிவந்த பின், ஆங்கிலேயர்கள் பங்கிம் சந்திரரை கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாக்கினர். நாவலின் கணிசமான பகுதியை மாற்றுமாறு வற்புறுத்தினர். தொல்லை தாங்காமல் அவர் 1886ல் பணியில் இருந்து விருப்ப ஓய்வு பெறும் சூழலுக்குத் தள்ளப்பட்டார். ஆனால் அவர் உருவாக்கிய மந்திரச் சொல் "வந்தே மாதரம்" ஆங்கிலேயரை விருப்ப ஓய்வு பெறச் செய்து நாட்டை விட்டே விரட்டி அடித்தது.

ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஜனவரி 24, 1950 அன்று வந்தே மாதரம் பாடலை ஜன கண மன பாடலுடன் சமமாக மதிக்க வேண்டும் என்றும், அதற்கு சமமான அந்தஸ்து வழங்க வேண்டும் என்றும் அரசியலமைப்புச் சபையில் ஒரு பிரகடனத்தை முன்வைத்தார். தேசியவாதத் தின் சக்திவாய்ந்த அடையாளமாக மாறிய இந்தப் பாடல், அன்று இந்திய அரசியலமைப்பு சபையால் தேசிய கீதமாக அங்கீகரிக்கப்பட்டு, தேசிய கீதத்துடன் சமமான அந்தஸ்தைப் பகிர்ந்து கொண்டது. மகாகவி பாரதி வந்தேமாதர கீதத்தின் தமிழாக்கமாக இரு வடிவங்களை அளித்தார். இந்த கீதம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் பெருமை இந்த 150ம் ஆண்டில் மேலும் வளரட்டும்!



**"அரசியலுக்கு சிலர் அடித்தளம் இல்லாமலே வர முயற்சிக்கின்றனர் "**

**ஆமா இவருக்கு மட்டும் என்ன அடித்தளம் இருக்கு ?**

பால்டாயில் குடிச்சிருக்கார்.!
படத்துல பன்னி
மேயிச்சிருக்கார்.!
சந்தானத்தோட
அசிஸ்டேண்டா
நடிச்சிருக்கார்..!!



**ரூ.2 லட்சம் லஞ்சம் - தாசில்தாரை கைது செய்த லஞ்ச ஒழிப்புத்துறை**



அதை
ஏன்"லஞ்சம்"னு
சொல்லி கேவல
படுத்துறீங்க
"கையூட்டு
பயனாளின்னு"
கொஞ்சம் டீசன்டா
சொல்லலாமே



# டாப் மீம்ஸ்



- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்

**Delhi Car Blast: "மோடி-அமித்ஷா-அம்பானி கூட்டணி பொறுப்பேற்க வேண்டும்?"-திருமாவளவன்**

கரூர் சாவு.! கள்ளசராயா சாவு.!
"ப்பீ "தண்ணி குடிச்சதுக்குலாம்.!
நீயும், முதல்வர் ஸ்டாலினும் ஏன்
பொறுப்பு ஏத்துக்கல.?



**உதயநிதி ராஜராஜ சோழன் போல வருவார் -துரைமுருகன்**

கொடுத்த காசுக்கு மேல
கூவுறானே!






# மியூச்சுவல் ஃபண்ட் - முதலீடு 20% நிதி சமநிலை முறை

— கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

ஒரே துறையில் முழு நிதியை முதலீடு செய்வது, வளர்ச்சிக்குப் பதிலாக ஆபத்தை உண்டாக்கும். எனவே, பின்வரும் 20% அடிப்படையிலான நிதிகட்டமைப்பு.

| முதலீட்டு துறை | சதவீதம் | நோக்கம் | பொருளாதார பயன் |
|---|---|---|---|
| ரியல் எஸ்டேட் | 20% | நீண்டகால முதலீடு | நிலத்தின் மதிப்பு உயர்வு, சொத்து நிலையான முதலீடு. |
| பேங்க் டெபாசிட் | 20% | பாதுகாப்பு | உறுதியான வட்டி வருமானம், உடனடியாக திரும்பப் பெறும் வசதி |
| தங்கம் | 20% | மதிப்பு பாதுகாப்பு | பணவீக்கத்திலிருந்து பாதுகாப்பு |
| பங்குச்சந்தை | 20% | வேகமான வளர்ச்சி | முதலீட்டு வருமான விகிதம் உயரும், நிறுவன வளர்ச்சியுடன் இணைவு |
| ரொக்கம் கையிருப்பு | 20% | அவசர நிதி | உடனடி செலவு வசதி, liquidity பாதுகாப்பு |

**மியூச்சுவல் ஃபண்ட் பற்றி பார்ப்போம்.**

மியூச்சுவல் ஃபண்ட் என்பது நிதி வளர்ச்சிக்கான அறிவுபூர்வமான ஒரு முதலீட்டு முறை.

இன்றைய உலகத்தில் முதலீடு பற்றிய தெளிவில்லாமல் பணம் சம்பாதிக்க முடியாது.

நாம் பணம் சம்பாதிக்கிறோம் ஆனால் அந்த பணத்தை நமக்காக செயல்பட வைக்க வேண்டும் என்ற உணர்வு பலரிடத்தில் வளரவில்லை, அதற்கான எளிமையான நம்பகமான மற்றும் திட்டமிட்ட முதலீட்டு வழிமுறைதான் மியூச்சுவல் ஃபண்ட் என்பது. இது ஒரு சிறிய தொகையை வைத்து பெரிய வளர்ச்சியை நோக்கி செல்ல உதவும் ஒரு முதலீட்டு முறை.

**மியூச்சுவல் ஃபண்ட் என்றால் என்ன?**

மியூச்சுவல் ஃபண்ட் என்பது பல முதலீட்டாளர்களிடம் இருந்து பெறப்படும் தொகைகளை மொத்தமாக, துறை சார்ந்த நிபுணர்களால் நிர்வகிப்பது, அந்த நிர்வகிப்பு என்பது பங்குகள் சார்ந்தும், கடன் பத்திரங்கள் சார்ந்தும், தங்கத்தைச் சார்ந்தும் மற்றும் பிற முதலீடுகளிலும் செய்யப்படுகிறது.

இதன் சிறப்பு என்னவென்றால் இதற்காக நாம் அதிக நேரம் செலவிட வேண்டியது இல்லை, நிபுணர்களின் வழிகாட்டுதலுடன் இந்த சந்தையில் நாம் பங்கெடுக்க முடியும்.

**முதலீட்டின் வழிமுறைகள்:**

முதலீட்டைத் தொடங்கும் முன் ஒரு முக்கிய கேள்வி.

என் இலக்கு என்ன?

1. குறுகிய கால இலக்கு 1 to 3 வருடங்கள்.

2. நடுத்தர கால இலக்கு 3 to 5 வருடங்கள்.

3. நீண்ட கால இலக்கு 5 மேற்பட்ட வருடங்கள்.

இந்த இலக்கை நாம் திட்டமிட்ட உடன் நாம் அதற்கான மியூச்சுவல் ஃபண்டை தீர்மானிக்க வேண்டும்.

**ஐந்து வகையான திட்டங்கள் உள்ளன:**

1. ஈக்விட்டி ஃபண்ட்(Equity Fund): இது நீண்ட கால வளர்ச்சிக்கு, ரிஸ்க் அதிகமானது.

2. டெப்ட் ஃபண்ட்(Debt Fund): பாதுகாப்பு மற்றும் வட்டி வருமானத்திற்கு ரிஸ்க் குறைவு.

3. ஹைபிரிட் ஃபண்ட்(Liquid Funds): மேலே குறிப்பிட்ட இரண்டையும் சமமாக கலந்தது, சந்தையை பின்பற்றியே ஏற்றமும் இறக்கமும் இருக்கும்.

4. இன்டெக்ஸ் ஃபண்ட் (Index Fund): - சந்தை ஏற்ற இறக்கங்களை பின்பற்றும்.

5. சிஸ்டமேட்டிக் இன்வெஸ்ட்மென்ட் பிளான்(SIP): சிறு தொகையிலிருந்து பெரும் வளர்ச்சி நோக்கிய ஒரு முதலீட்டு முறை.

மேலே குறிப்பிட்ட அனைத்தும் செபி(SEBI) யின் விதிகளின் கீழ் செயல்படுகிறது. அதனால் நம்பிக்கையுடன் முதலீடு செய்யலாம்.

முதலீட்டின் லாபம் சந்தையில் இல்லை, நாம் செய்யும் FUND ALLOCATION I பொறுத்து உள்ளது.

அதனால் வயது, வருமானம் நம்முடைய ரிஸ்க் எடுக்கும் சக்தி ஆகியவற்றைப் பொறுத்தே முதலீடு இருக்க வேண்டும்.

1. 25 to 30 வயது இருந்தால்: 70% ஈக்விட்டி, 20% டெப்ட், 10% லிக்விட் ஃபண்ட்.

2. வயது 35 முதல் 50 வரை இருந்தால்: ஈக்விட்டி 50%, 30% டெப்ட், 20% ஹைபிரிட்.

3. வயது 50 க்கு மேல் இருந்தால்: ஈக்விட்டி 30%, டெப்ட் 50% ஹைபிரிட் 20%.

இதை நாம் ஒரு Balanced Portfolio என்கிறோம்.

இதை ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு முறையோ மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

ரீபேலன்சிங்(rebalancing) என்பது பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப நம் மாற்றங்களை செய்ய வேண்டும்.

முதலீட்டில் ரிஸ்க் இல்லை என்றால், அந்த முதலீட்டில் அதிக லாபம் இல்லை என்று அர்த்தம். எனவே, ரிஸ்கை கணக்கிட்டு அதற்கு ஏற்றார் போல் நாம் முதலீடு செய்யும் பொழுது அதற்கு ஏற்ற அளவு அதிக லாபத்தை பெற இயலும்.

**மியூச்சுவல் ஃபண்டில் மூன்று ஆபத்துகள் உள்ளன.**

1. மார்க்கெட் ரிஸ்க்: அதாவது பங்கு சந்தையில் ஏற்ற இறக்கங்கள்.

2. கிரெடிட் ரிஸ்க்: கடன் அதிகமாக சேர்ந்து அதன் மூலம் வரும் பிரச்சினைகளால் ஏற்படும் இறக்கம்.

3. லிக்விடடி ரிஸ்க்(Liquidity): அவசர தேவைக்கு நிதியை திரும்ப பெற முடியாமல் போவது.

இதை ஒழுங்குப்படுத்துவதற்காக தான் டைவர்சிபிகேஷன் (Diversification) என்ற முறை நாம் உபயோகப்படுத்த வேண்டும், அதாவது ஒரே துறையில் முதலீடு செய்யாமல் பல துறையில் சிறு சிறு தொகைகளாகப் பிரித்து முதலீடு செய்ய வேண்டும்.

நிதி உலகில் இரண்டு முக்கியமான விஷயங்கள் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு, இந்த இரண்டையும் ஒரே நேரத்தில் நாம் ஆராய்ந்து முதலீடு செய்ய வேண்டும். இதுவே முதலீட்டின் நுணுக்கம்.

எஸ்.ஐ.பி(SIP) முறையில் மாதந்தோறும் சிறிய தொகையை முதலீடு செய்து நீண்ட கால அடிப்படையில் மிகப்பெரிய லாபத்தை பெற முடியும். நீண்ட கால அடிப்படையில் தொடர்ந்து முதலீடு செய்வதே உண்மையான நிதி வளர்ச்சி.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடு என்பது நம்மை எதிர்காலத்திற்கு மிக பாதுகாப்பான வளர்ச்சி பாதையில் நம்மை அழைத்துச் செல்லும். அடுத்தாக, மற்றொரு முதலீட்டு முறையான பங்குச் சந்தைப் பற்றி அடுத்தக் கட்டுரையில் பார்ப்போம்.



# மோதி விளையாடும் இந்தியா:

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

பஹ்ரைனில் நடந்து வந்த 45 நாடுகள் பங்குகொண்ட 3வது Asian Youth Games 2025 இல் 48 பதக்கங்களுடன் 6வது இடத்தை பிடித்தது இந்தியா.

**2013 சோதனை காலம்**

12 வருடத்திற்கு முன், 2013 இல் நடந்த 2வது Asian Youth Games-ல், இந்திய ஒலிம்பிக் கமிட்டி தேர்தல் முறைகேட்டினால் பெற்ற தடையின் காரணமாக, இந்தியாவின் பிரதிநிதியாக விளையாட முடியாமல் ஒலிம்பிக் கொடியின் கீழ் விளையாடிய இந்திய வீரர்கள் 14 மெடல்களை பெற்றனர். ஆனால் இந்த முறை பெருமையுடன் இந்தியாவிற்காக விளையாடிய நமது வீரர்கள், தங்கப் பதக்கம் மட்டுமே 13 வென்றிருப்பது, பெருமை அளிக்கிறது.

**புதிய பாதை:**

இதுவரை நாம் வெற்றி கொள்ளாத பிரிவுகளான Beach wrestling ல் மூன்று தங்கம் சேர்ந்த ஐந்து பதக்கங்களும், Mixed Martial Arts மற்றும் Taekwondo போட்டிகளில் முறையே 2 மற்றும் 3 பதக்கங்களும் வென்றதன் மூலம் இந்தியா விளையாட்டுத்துறையில் பல கோணங்களில் முன்னேறுவதை உணர முடிகிறது.

கபடி, குத்துச்சண்டை மல்யுத்த பிரிவுகளில் ஆண்களும், பெண்களும் பல தங்கப்பதக்கங்களை வென்றதும், தடகள போட்டிகளில் சிறு வித்தியாசத்தில் வெள்ளி பதக்கங்களை வென்றதும் இந்தியா துடிப்புடன் மோதி விளையாடுவதை உணர்த்துகிறது.

**தமிழர்களுக்குப் பெருமை:**

தங்கம் வென்ற பெண்கள் கபடி குழுவின் துணைத்தலைவி, சென்னை கண்ணகி நகரைச் சேர்ந்த கிருத்திகா என்பதும், ஆண்கள் பிரிவில் அற்புதமாக விளையாடிய அபினேஷ் வடுஊர் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதும் தமிழகத்திற்குப் பெருமை.

இன்று இருக்கும் இந்த விளையாட்டு போட்டிகளுக்கான தாகம் தொடர்ந்தால் ஒலிம்பிக் மேடைகளில், நம் தேசிய கீதம் பல முறை ஒலிக்கவிருக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பது உறுதி.

**இந்தியா ஆஸ்திரேலியா டி 20:**

சென்ற இதழில் நாம் கணித்தது போலவே T20 தொடரை ஆஸ்திரேலிய மண்ணில் இந்தியா 2-1 முன்னிலையில் கைப்பற்றியது, இதில் மழையால் கை விடப்பட்ட இரண்டு ஆட்டங்களிலும் இந்தியா பெரும் முன்னிலையில் இருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் தமிழக ஆல்-ரவுண்டர் வாஷிங்டன் சுந்தரை பந்துவீச்சில் முன்பே பயன்படுத்தியிருந்தால் இன்னும் அதிக ஆதிக்கம் செலுத்தி இருக்க முடியும். 2024 டி20 உலகக்கோப்பை முதல் இதுவரை ஒரு டி20 தொடரை கூட இழக்காத இந்தியா, அடுத்து இந்தியாவில் நடக்கவிருக்கும் தென்ஆப்பிரிக்கா மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான டி20 தொடர்களிலும் வெல்லும் என்பதே நமது கணிப்பு.

மேலும் 2026 T20 உலகக்கோப்பையை இந்தியாவும் இலங்கையும் இணைந்து நடத்தவிருப்பது மேலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்த முன்னேற்றங்களையும் கணிப்புகளையும் இனிவரும் கட்டுரைகளில் தொடர்ந்து காண்போம்.





# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

— இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

மனிதர்களாகிய நாம் நம்மை அடையாளப்படுத்திக் கொள்வது எப்போதுமே நமது உடலை வைத்துத்தான். நான் மிக்க அழகானவள், நான் இளைஞன், ஆணழகன், நான் பலசாலி, நான் திறமைசாலி, நான் பணக்காரன், நான் அறிவாளி என்ற தற்பெருமை அனைத்துமே உடலில் பலம் இருக்கும் மட்டும் தான். என்று நமக்கு இயலாமை ஏற்படுகிறதோ அப்போது மேற்கண்ட அனைத்து சாமர்த்தியங்களும் ஓய்வெடுத்துக் கொண்டுவிடும். ஒருவன் வயிற்று வலியால் அவதிப்படும்போது அவனது பராக்கிரமத்தைப் பற்றிக் கேட்டால் தன்னைப் பழிவாங்குகிறார்கள் என நினைப்பான்.

உடல் உணர்வு அற்றுப்போனவர்கள் யார் என்று பார்த்தால், ஒன்று சித்தர்கள், மற்றொன்று மனநிலை பாதித்தவர்கள். இன்றைய நாளில் சித்தர்கள் நம்மிடையே வருவதில்லை. ஏனெனில் நாம் தங்கமோதிரத்திற்கும், வளையலுக்கும்தான் அவரை பார்க்கச் செல்வோம். வள்ளலாரையும் புட்டபர்த்தி சாய்பாபாவையும் மறக்கமுடியாது. சித்தர்களுக்கு இந்த உலகம் ஒரு விளையாட்டு மைதானம். இந்த உலகமும் இயற்கையும் அவர்களின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கும். மற்றொன்று, பித்துப் பிடித்தவர்கள். அதாவது மனநிலை பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு இந்த உலகமே தெரியாது. இந்த இரண்டு தரப்பட்டவர்களுமே இரண்டு துருவங்களில் இருக்கின்றார்கள். நடுவாந்தரத்தில் இருப்பது சராசரி மனிதர்களாகிய நாம்தான். எனவே நம்மைப் போன்றவர்கள்தான் இந்த உலகில் உயிரோடு இருக்கும்போது நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்வது எப்படி என்றும் நோய்கள் ஏற்பட்டால் அதிலிருந்து நம்மை காத்துக்கொள்வது எப்படி என்பதையும், நம்மைச் சுற்றியிருக்கின்ற இயற்கைக்கும் நமக்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா? அப்படியானால் அந்த சம்பந்தம் எப்படிப்பட்டது என்பதையும் எப்பாடுபட்டாவது புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் சகல திறமைகளையும் கையாண்டு கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தையெல்லாம் மருத்துவமனைகளிலும் மருந்துக்கும் கொண்டுபோய் கொட்டாமல், சுகமாக புத்திசாலித்தனமாக நோயற்ற வாழ்வு வாழ முடியும். இதையே திருவள்ளுவர் நமக்கு வாழ்வின் அரிச்சுவடியாக கீழ்க்கண்டபடி வழங்கியுள்ளார். அதாவது-

**சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு. (27)**

நம்மைப் போன்றவர்களுக்கு, இந்த உலகத்தை தன் எண்ணம்போல் கட்டியாண்ட சித்தர்கள் யாராவது, நன்றாக வாழ்வது எப்படி என்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்றால், ஆம், திருமூலர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இதோ அவரது வார்த்தைகள்-

***"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்,***
***திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்.***
***உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே,***
***உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"***
***(திருமந்திரம் 724)***

அதாவது, இறைவன் அருளால் நல்ல ஆரோக்கியமான உடலை பெற்றபின்னரும், அதை நன்கு பயன்படுத்தி வாழ்க்கையை வாழாமல், உடல் எனும் கருவியை பேணிப் பாதுகாத்துக் கொள்ளாது அறிவின்றி அழித்துக் கொள்பவர்கள், இந்த உலகத்தில் உடலோடு பிறந்ததற்கான அருமையான காரணத்தை உணராமல்போவதோடு, வாழ்வாங்கு வாழ்ந்து அதன்மூலம் அடையவேண்டிய "உண்மையான உன்னதமான உயிர்ஞானத்தையும்" அடையாமல் உடலை அழித்துக் கொண்டு உயிரையும் அழித்துக்கொள்கின்றார்கள். (நான்) இந்த உடம்பை எப்படி (பாதுகாத்து) வளர்த்து (நெடுநாட்களுக்கு) இந்த உடலில் வாழ்வது என்ற ரகசியத்தைக் கண்டுகொண்டு, அதன்படி எனது உடலையும் வளர்த்து எனது உயிரையும் வளர்த்துள்ளேன் என்கிறார் திருமூலர். இந்த உபாயத்தின் மூலம் சித்தர் திருமூலர் தன் இஷ்டம்போல் கூடு விட்டு கூடு பாய்தல் என்ற சித்தியின் மூலம் வெவ்வேறு உடல்களில் தன் உயிரைப் புகுத்திக் கொண்டு மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும், ஆண்டுக்கு ஒரு செய்யுள் வீதம் மூவாயிரம் பாக்கள் இயற்றினார் என்பதும் அவைதான் ஒன்பது தந்திரங்களாக வகுத்து மூவாயிரம் செய்யுள்கள் கொண்ட திருமந்திரமாக திகழ்கிறது என்பதும் வரலாறு.

நோயற்ற வாழ்வு என்ற இந்த தொடர் மூலம் ஸ்ரீதமிழ் வாசகர்களுக்கு, பலனுள்ள பல ஆரோக்கிய ரகசியங்களை பகிர்ந்துகொள்ளலாம் என துணிந்துள்ளோம். இந்த வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ள ஸ்ரீதமிழ் பத்திரிக்கைக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

# என்னால ஏன் தொடர்ந்து செயல்பட முடியல?



வ ரங்கநாதன்,
ஆளுமைத் திறன் பயிற்றுநர்

மக்களின் பிரச்சனையே எந்த ஒரு செயலையும் தொடர்ந்து செய்ய முடிவதில்லை என்பதே. ஒரு உற்சாகத்தில புஸ்ஸூன்னு தொடங்கி பிறகு புஸ்வானம் ஆகிவிடுகிறார்கள்.

ஆமையை விட முயலுக்கு ஓடும் திறன் அதிகம் என்றாலும் பந்தயத்தில் முயல் தோற்றது. ஆமை வென்றது. ஒரே காரணம் தொடர் முயற்சி மட்டுமே தான்.

**“கச்சன் பிபீலிகோ யாதி யோஜநானாம் சதான்யபி அகச்சன் வைநதேயோபி பதமேகம் ந கச்சதி.’’**

தொடர்ந்து முயற்சி செய்தால், சிறிய கால்களை உடைய எறும்புகூட பல மைல் தூரத்தை கடந்து விடும், ஆனால் இறக்கை உள்ள பெரிய பருந்து அசையவில்லை என்றால் ஒரு அடி கூட முன்னேற முடியாது என்று இந்த சுபாஷிதம் சொல்கிறது.

**வேடிக்கை என்னவெனில் தோற்றவர்களுக்கும் தொடர்ந்து முயன்றால்தான் வெற்றி அடைய முடியும் எனத் தெரியும். இருந்தாலும் ஏன் முயற்சி செய்வதில்லை?**

“பத்து கிலோ உணவை ஒரு முறை சாப்பிட்டதாலேயே ஒருவன் பருத்து விடுவதில்லை.’’ என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. தொடர்ந்து தினம் தினம் தேவைக்கு சாப்பிட்டு வந்தால் தான் சில மாதங்களில் உடல் எடை கூடும்.

நூறு ஆண்டுகள் தொடர்ந்து இயங்குவது **ஆர்.எஸ்.எஸ்-க்கு** எப்படி சாத்தியமாயிற்று? நாடு முழுவதும் விடாப்பிடியாக தேசத்தைப் பற்றி மட்டுமே தினம் தினம் சிந்தித்ததால் சாத்தியமாயிற்று.

சாதனையாளர்கள் ஒரு நாள் சாகசத்தால் சாதித்து விடவில்லை. வேருக்கு நீர் போல் வெளியில் தெரியாமல் தொடர்ந்து முயற்சி செய்ததாலேயே சாதனை புரிந்தார்கள்.

**1.மன ஒழுக்கம் இல்லை**

மன ஒருமைப்பாடு இருந்தால் மலையையும் நகர்த்தி விடலாம் என சுவாமி விவேகாநந்தர் சொல்கிறார். ஆனால் மனமோ பேயாய் சுழலுது.. கண நேர சிலிர்ப்புகளில் கவனம் சிதைந்து போகிறது. மனக்கட்டுபாடு இல்லை

**2. பிறரைக் கவர படம் காட்டுவது**


மற்றவர்களிடம் கெத்து காட்ட புதிய செயல்களை விளம்பரப்படுத்தித் தொடங்குவது. பிறகு உற்சாகம் இழந்து உறங்கி விடுவது.

**தொடங்கிய செயலை முடிக்க என்ன செய்யணும்?**

1.செயலைத் தொடங்கியதும் ஒரு வாரத்துக்கு தினம் தினம் குறைந்தது 20 நிமிடங்கள் செலவிட்டு, அப்போது என்ன செய்ய முடியுமோ அதை செய்து விடணும். இந்தப் பழக்கம் தானாக தினமும் இலக்குக்கான செயலில் ஈடுபடுத்தும்.

2. இலக்கை அடைந்தால் என்ன பலன் கிடைக்குமோ அதை நினைத்துப் பார்த்தபடி தினம் தினம் இலக்குக்கான அன்றைய பணியை செய்து வந்தால் உறுதியாக நினைத்ததை சாதிக்கலாம்.

பேச்சை விட செயலுக்கே பலம் அதிகம். செயல் வீரர் ஆவோம்.! பாரதத்தைப் பாரில் உயர்த்து வோம்.!



# நூல் நயம்

# வந்தே மாதரம் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

பாரத சுதந்திர வரலாற்றில் எண்ணற்றோரை தேசத்திற்காகத் தியாகம் செய்யத் தூண்டிய ஓர் மந்திரச் சொல் - வந்தே மாதரம்.

திரு.ஆர்.பி.வி.எஸ்.மணியன் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக தமிழகத்தின் பல பகுதிகளில் "ஒரு தேசிய கீதம் கதை சொல்லுகிறது" என்ற தலைப்பில் பல இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தி உள்ளார்கள். அவற்றைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். வந்தேமாதர கீதத்தின் 150 ஆவது ஆண்டு விழா துவக்கத்தில் இந்த நூல் வெளி வந்திருப்பது மிகச் சிறப்பு.

வங்க எழுத்தாளர் பக்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய "ஆனந்த மடம்" என்ற புத்தகத்தில் எழுதப்பட்ட இந்த வந்தே மாதரம் பாடல்தான் பாரத சுதந்திர போராட்ட வரலாற்றைப் புரட்டிப் போட்டது.

பாரத நாடு ஓர் நிலப் பரப்பு அல்ல. பாரதம் நமது தாய், தாயைக் காப்பது தனயர்களின் கடமை என்ற உணர்வை ஏற்படுத்தியது வந்தே மாதரம்.

பாரதத் தாயே நாம் வழிபடும் தெய்வம், பாரத தாயே பத்துக் கரங்களை உடைய துர்கைத் தாயாகவும், அலை மகளாகவும், கலை மகளாகவும் இருக்கிறாள் என்ற பக்தி பூர்வமான தேசபக்தி உணர்வை உருவாக்கியது வந்தே மாதர கீதம்.

தேசத்தை ஒருங்கிணைத்த வந்தே மாதர கீதத்தை முஸ்லிகளை தாஜா செய்வதற்காக வெட்டியது காங்கிரஸ், இறுதியில் தேசமே வெட்டுப்பட்டது

வந்தேமாதர கீதத்தின் வரலாற்றுடன் அந்த காலத்தின் சூழ்நிலைக்கே நம்மை விறுவிறுப்பாக இட்டுச் செல்லும் ஆசிரியர், "தாய் என்று கும்பிடடி பாப்பா" என்று மிக அழகாக நிறைவு செய்கிறார்.

வந்தே மாதரத்தின் 150 வது ஆண்டு விழா ஆண்டு முழுவதும் கொண்டாடப்பட உள்ள நிலையில், ஒவ்வொரு பள்ளியும் இந்தப் புத்தக்த்தை வாங்கி மாணாக்கர்களுக்குப் படிக்கக் கொடுக்க வேண்டும். இந்தப் புத்தகத்தைப் படித்து தமது குழந்தைகளுக்கு இந்த வரலாற்றைத் தெரிவிக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமை.

வந்தே மாதர கீதம் சொல்லி வந்தே பணிவோம் பாரதி பாதம்.




**வந்தே மாதரம் ஒரு வரலாற்று கண்ணோட்டம்**
**ஆசிரியர்: திரு.ஆர்.பி.வி.எஸ். மணியன்**

வர்ஷன் பிரசுரம்
33/4 (15/4) ராமனாதன் தெரு,
தி.நகர், சென்னை - 17
தொலைபேசி: 9940682929
விலை ரூ.120,
பக்கங்கள்: 208

# ஆர்.எஸ்.எஸ். 100 இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி ௨)

இராம . வெங்கடாத்ரி

**ஹிந்து ராஷ்ட்ரம் என்பது அரசியல் அஜெண்டாவா?**

இந்த நாடு ஹிந்து நாடு என்று சொன்ன உடனே "குய்யோ முய்யோ" என்று கதறிக் கொண்டே பலர் வருவதைப் பார்க்கலாம். ஹிந்து ராஷ்ட்ரம் என்பது அரசியல் அஜெண்டா அல்ல. ஆனால் அப்படி தவறாக எண்ணுவதால் அவர்களுக்கு வருகின்ற பதட்டம் அது. இன்று பிரபலமாக இருக்கிற செயற்கை நுண்ணறிவு மூலம் தேடுகையில் கூட ஹிந்து ராஷ்ட்ரம் என்பது ஒரு அரசியல் கோட்பாடு என்றே பதில் வருகிறது. ஹிந்துத்வம் ஒரு அரசியல் கோட்பாடு என்று எண்ண வைக்கிற தவறான கருத்துருவாக்கம் பரவலாகவும், திட்டமிட்டும் முன் வைக்கப்பட்டுள்ளதால் இந்த குழப்பம்.

**ஹிந்து நாடு சிறுபான்மைக்கு எதிரானதா?**

ஆர்.எஸ்.எஸ். ஸ்தாபகர் இந்த நாடு ஹிந்து ராஷ்ட்ரம் என்று சொன்னதும் காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். ஹிந்து நாட்டில் சிறுபான்மையினர் பாதுகாப்பாக வாழ முடியாது என்ற அச்சத்தைக் கிளப்பினர்.

இந்த நாட்டில் எந்த விதமான பாரபட்சம் இன்றி அரசின் எல்லா உயர் பதவிகளிலும் எல்லா மதத்தினரும் இன்றளவும் வர முடிகின்றது என்று சொன்னால், அதற்குக் காரணம் இந்த நாட்டின் ஹிந்துத் தன்மையே.

ஹிந்து நாடு என்பது ஒரு மத வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்ட அரசு Theocratic State என்று குழப்பத்தை ஏற்படுத்தி, ஹிந்து நாடு சிறுபான்மையினர்க்கு பாதுகாப்பற்றது என்ற கருத்துருவாக்கம் ஏற்படுத்தப்பட்டது

**இஸ்லாமிய நாடு, கிறிஸ்தவ நாடு இருக்கலாம், ஹிந்து நாடு கூடாது**

உலகிலே பல நாடுகள் தங்களைக் கிறிஸ்தவ நாடாகவோ, இஸ்லாமிய நாடாகவோ அறிவித்துச் செயல்படுகின்றன. ஜனநாயக நாடாக அறிவித்துள்ள பல ஐரோப்பிய நாடுகள் கூட தங்கள் கொடிகளிலே, கரன்சிகளிலே, அரசின் இலச்சினைகளிலே, அரசு விழாக்களிலே கிறிஸ்தவ அடையாளங்களை பெருமையாக வைத்துக் கொள்கின்றன. இவற்றை எல்லாம் ஏற்றுக் கொள்ளும் அறிவுஜீவிகள் இந்த நாட்டின் தொன்மையான ஹிந்து அடையாளங்களை ஏற்றுக் கொள்ளாமல் கண்களை மூடிக் கொள்கின்றனர்.

**சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகள்**

1994 ல் நீதியரசர் திரு.இஸ்மாயில் ஃபரூக்கி "ஹிந்துத்வா என்பதை மத அடிப்படைவாதமாகக் கருத முடியாது, ஹிந்துத்வம் என்பது ஒரு வாழ்க்கை முறை" என்று தீர்ப்பு வழங்கினார். இதை எதிர்த்து 2016ல் டீஸ்டா சீதல்வாட் தொடுத்த வழக்கிலும் 7 நீதியரசர்கள் அமர்வு, 1994ல் கொடுக்கப்பட்ட தீர்ப்பை மறு வரையறை செய்ய இயலாது என்று கூறிவிட்டது. 2014ல் டாக்டர் SN குந்த்ரா என்பவர் 1994 தீர்ப்பை மறு பரிசீலனை செய்து ஹிந்துத்வம் என்பதை மத அடிப்படைவாதம் என்று அறிவிக்குமாறு தொடுத்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்தது நீதிபதி சந்திரசூட் அமர்வு.

**குழப்பம் எங்கே வருகிறது?**

ஹிந்துத்வம் என்பது இந்த நாட்டில் தொன்று தொட்டு நிலவி வருகிற வாழ்க்கை முறை (Way of life), ஹிந்துத்வம் என்பது மத அடிப்படைவாதம் அன்று (Hindutva is not a fundamental concept) என்பதை இது வரை 3 முறை இந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது.

**ஹிந்து முன்னோர்களின் செக்குலர் வழித்தோன்றல்கள்**

ஸ்வாமி விவேகானந்தர், அரவிந்தர் போன்ற இந்த நாட்டின் மாபெரும் ஞானிகள் தங்களை ஹிந்து என்று அழைத்துக் கொள்வதில் பெருமை கொண்டனர். இன்றைய தலைமுறையினரோ ஹிந்து என்று சொல்லிக் கொள்வதே சிறுமைத்தனம் என்றும், செக்குலர் என்பதே சிறந்த நெறி என்றும் கருதுகின்றனர்.



**பாரத மாதா**

தாய் நாட்டை அன்னையாகப் பார்ப்பது ஹிந்துத் தன்மை. "மாதா பூமி: புத்ரோஹம் ப்ருதிவ்யா:" என்று அதர்வண வேதம் கூறுகிறது. பெற்ற தாயைப் போன்றே பிறந்த பொன்னாடையும் கருத வேண்டும் என்ற கருத்தை, "ஜனனீ ஜன்ம பூமிஸ்ச" என்ற வால்மீகி ராமாயணப் பாடல் சொல்கிறது. இந்த ஹிந்து சிந்தனா மரபில் உதித்த பாடல்தான் வந்தே மாதரம்.

பாரதத் தாயின் தொன்மை குறித்துப் பாடும் பாரதி, "இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம்" என்று பாடுகிறார்.

ஹிந்து தேசியம் என்பது இந்த நாட்டை வெறும் நிலப்பரப்பாகப் பார்க்கவில்லை. உயிருடன் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பாரதத் தாயாக உணர வைக்கிறது.

**தேசத்தின் தந்தை யார்?**

இந்த பாரத நாடு என்று பிறந்தது என்பதை யாராலும் கணிக்க முடியாது என்று பாரதியார் கூறுகிறார். ஆனால் 1947, ஆகஸ்ட் 15 அன்றுதான் இந்த தேசம் உருவானதாகச் சொல்லுவது எந்த அளவு பிதற்றல்?

காந்தியடிகள் இந்த பாரதத் தாயின் மைந்தர்களில் ஒருவராக இருக்க முடியுமே தவிர, தேசத்தின் தந்தையாக எப்படி இருக்க முடியும்?

இந்த நாடு வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்படவில்லை. காந்தியடிகளாலும் உருவாக்கப்படவில்லை.

**காந்தியடிகள் இந்த பாரதத் தாயின் மைந்தர்களில் ஒருவராக இருக்க முடியுமே தவிர, தேசத்தின் தந்தையாக எப்படி இருக்க முடியும்?**

**இந்த நாடு வெள்ளைக்காரர்களால் உருவாக்கப்படவில்லை. காந்தியடிகளாலும் உருவாக்கப்படவில்லை.**

**ஹிந்து என்ற பெயரை பெர்ஷியர்கள் வைக்கவில்லை**

**ஹிமாலம்ய சமாரப்ய யாவத் ஹிந்து சரோவரம்**
**த்வம் தேவ நிர்மிதம் தேசம் ஹிந்துஸ்தானம் ப்ரஸ்க்ஷதே**

என்ற கிமு 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ப்ருஹ்ஸ்பத்ய ஆகம வரிகள் இந்த நாட்டை ஹிந்துஸ்தானம் என்றும், இந்த நாட்டைச் சூழ்ந்துள்ள கடலை ஹிந்து சாகரம் என்றும் கூறுகிறது. காலம் காலமாக ஹிந்து மகா சமுத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்த கடல் பகுதி, வெள்ளைகார கிறிஸ்தவர்களால் Indian Ocean என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு நமது தொன்மை மறக்கடிக்கப்பட்டது



**அரசாங்கமும் தேசியமும்**

நாடு என்பது வேறு. அரசு என்பது வேறு. அரசாங்கங்கள் வந்து போனாலும், தேசியம் மாறாமல் இருக்கும். உதாரணமாக ஔரங்கசீப் ஆட்சிக்காலத்தில் இஸ்லாமிய அரசு இருந்தது. அப்போதும் இந்த நாடு ஹிந்து தேசமாகத்தான் இருந்தது. இந்த மண்ணின் தேசியத் தன்மைக்கு முரணான அரசு அமைந்ததால் மக்களும் மன்னர்களும் முகலாயர் ஆட்சியை எதிர்த்துப் போராடினர்.

இப்போது இருக்கிற அரசு "மதச்சார்பற்ற அரசாங்கம்" என்று கருதப்பட்டாலும், இன்றளவும் இந்த நாடு ஹிந்து நாடாக உள்ளது. அதாவது இந்த தேசியத் தன்மையின் அடையாளம் ஹிந்து அடையாளமாகவே தொடர்ந்து மாறாமல் உள்ளது.

**ஆன்மிக தேசியம்**

ஹிந்து என்கின்ற இந்த நாட்டின் தேசியத் தன்மை எந்த ஒரு காலத்திலும் எந்த ஒரு அரசையும் சார்ந்து இருந்ததில்லை. இந்த நாட்டின் தொன்மையான ஆன்மிக மரபுகளின் அடிப்படையில் இந்த தேசியம் அமைந்திருக்கிறது. இதை Spiritual Nationalism என்று மகான் அரவிந்தர் கூறுகிறார்.

நமது மக்கள் வாழ்வின் ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயத்திலும் இந்த ஆன்மிக கலாச்சாரம் நாடு முழுக்க ஒரே போல விரவிக் கிடக்கிறது. இன்றைக்கும் கடை திறக்கும் போது கல்லாவுக்கும் தராசுக்கும் கற்பூரம் அல்லது ஊதுபத்தி காண்பிக்கும் பெட்டிக்கடைக்காரர், வாகனத்தை எடுக்கும் முன் ஸ்டீயரிங்கைத் தொட்டு வணங்கும் ட்ரைவர், புஸ்தகத்தைத் தொட்டு வணங்கி படிப்பைத் தொடங்கும் குழந்தைகள் என்று தொழில் படிப்பு என எல்லா செயலிலும் இறைவனைப் பிணைக்கும் ஹிந்து கலாச்சார மரபுகள் நமது வாழ்வியலோடு ஒன்றிப் பின்னிப் பிணைந்துள்ளன. (**தொடரும்...**)

# இரண்டாம் பாரதியின் எழுச்சிப் பாடல்கள்

திருமலை



**இரண்டாம் பாரதி**

இந்து முன்னணி - நிறுவன அமைப்பாளர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் ஹிந்து சமுதாயப் பணிக்காக அர்ப்பணித்த மகான். "**மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி வீரத்துறவி இராம.கோபாலன்ஜி**" என்று அவரைப்பற்றி கூறுவார் மறைந்த திரு.இல.கணேசன் அவர்கள்.

திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் தந்த திருத்தலமாம் சீர்காழியில் அவதரித்த இராம கோபாலன் ஐயா அவர்கள், 1945 ஆம் ஆண்டில் இருந்து, 75 ஆண்டுகள், பாரதத் தாயின் தாளில் இடையறாத் தவம் புரிந்த தவச்சீலர்.

**தேசபக்திப் பாடல்கள்**

இராம.கோபாலன்ஜி அவர்களது எழுச்சியூட்டும் பாடல்களை முழுமையாக ஆவணப்படுத்த இயலாவிட்டாலும், சுமார் 80க்கும் மேற்பட்ட அவரது பாடல்களைத் தொகுக்கும் முயற்சியில் ஓரளவு வெற்றி கிட்டியுள்ளது. இந்தப் பாடல்களில் அவரே சொந்தமாக இயற்றி இசை அமைத்த பாடல்கள் தவிர மொழி பெயர்ப்பு செய்த பாடல்களும் உண்டு. இவற்றுள் சில பாடல்களைத் தவிர மற்ற பாடல்கள் இயற்றப்பட்ட ஆண்டினைத் துல்லியமாகக் கணிக்க இயலவில்லை. ஆனால் பாடல்கள் இயற்றப்பட்ட தசாப்தங்கள் கணிக்கப்பட்டுள்ளன.

பாடல்கள் அந்தந்த கால கட்டத்தில் நிலவிய நாட்டின் சூழ்நிலைகளை பிரதிபலிக்கின்றன. பாடல்கள் மூலமாக நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டிய செய்திகளும் இதில் காணலாம்.

**தேசத்தின் வரலாறு**

பாடல்களின் ஊடே பயணம் செய்யும்போது அந்த காலத்திய நாட்டின் வரலாற்றோடும் நமது பயணம் அமைந்து விடும்.

- 1950 வரை எழுதப்பட்ட அவரது பாடல்களில் தேசப் பிரிவினையின் சோகம், பிளந்த நாட்டை மீண்டும் பிணைத்திடும் சபதம், புதிய விடுதலை பெற்ற பாரதம் எப்படி அமைய வேண்டும் ஆகியவை மையக் கருத்தாக இருப்பதைப் பார்க்கலாம்.
- 1950 முதல் 1959 வரை உள்ள கால கட்டத்தில் எழுதப்பட்ட பாடல்களில் பாரதத்தின் மேன்மை, தேசபக்தி, பாரதத்தை சக்தி வடிவமாக வழிபடுதல் ஆகிய கருத்துக்கள் அதிகம் இடம் பெற்றிருக்கும்.
- 1960 முதல் 1969 வரை உள்ள கால கட்டத்தில் எழுதப்பட்ட பாடல்களில் சீனப் போரில் ஏற்படட தோல்வி, அப்போது நாட்டிற்கு ஏற்பட்ட அவமானங்களை களைதல், பசு வதை தடை போன்ற கருத்துக்கள் இடம் பெற்று இருக்கும்
- 1975 முதல் 1979 வரை உள்ள கால கட்டத்தில் எழுதப்பட்ட பாடல்களில் நெருக்கடி நிலையை எதிர்த்து நடந்த போராட்டம், மக்கள் சக்தியின் மகத்துவம் போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டு இருப்பதைக் காண முடியும்.
- 1980 முதல் 1989 வரை உள்ள கால கட்டத்தில் எழுதப்பட்ட பாடல்களில் மீனாட்சிபுரம் மதமாற்றத்தைத் தொடர்ந்து நாடும் முழுவதும் ஏற்பட்ட ஹிந்து எழுச்சி, ஹிந்து ஒற்றுமை ஆகிய கருத்துக்கள் முக்கியமாகப் பேசப்பட்டிருக்கும்.

**இசை வடிவம்**

இந்த எல்லாப் பாடல்களுக்கும் இசை வடிவம் உண்டு. ஸ்ரீ.ராம கோபாலன் அவர்கள் எந்த மெட்டில் இசை அமைத்துப் பாடினாரோ அதே இசை வடிவில் இன்றளவும் இந்தப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. பாடலின் கருத்துக்களுக்கு மெருகூட்டும் வகையில் இசை வடிவம் அமைந்திருப்பது இன்னும் ஒரு சிறப்பு.

இந்த எல்லாப் பாடல்களின் இசை வடிவம் ஸ்ரீடிவியின் யூடியூப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலைப் பற்றிய அறிமுகத்துடன் அந்தப் பாடலின் இசை வடிவத்தை அணுகும் இணைப்பும் QR Code வடிவில் இணைக்கப்படும்.

**மொழி ஆளுமை**

ஒவ்வொரு பாடலிலும் அவர் கையாண்டு இருக்கும் பல சொற்கள் அவரது மொழி ஆளுமையை காட்டுகிறது. அந்த சொற்பதங்கள் ஏற்படுத்தும் தாக்கம் அபாரமானது. சுமார் 60 ஆண்டுக் கால தமிழ் மொழியின் வரலாற்றில் அந்தந்த காலத்திற்கு ஏற்ற மொழி அமைப்புடன் பாடல்கள் அமைந்திருப்பது இன்னும் ஒரு தனிச் சிறப்பு.

**தேசத்தின் வரலாறு**

இந்தப் பாடல்களை இன்றளவும் முணுமுணுக்கும் இதயங்களில் தேசபக்தி பெரும் தீச்சுடராக ஒளி விட்டு பிரகாசித்து கொண்டிருக்கிறது.

இவருடைய பாடல்கள் உயிரோட்டமுள்ளவை. ஆகையினால் பல பல தொண்டர்கள் பாடல்களால் ஈர்க்கப்பட்டு அவரைப் போலவே முழுநேர ஊழியர்களாக சமுதாயப் பணிக்கு தன்னை முழுமையாக தங்களை அர்ப்பணித்தனர்.

இவருடைய பாடல்கள் இன்றும் ஆயிரமாயிரம் தொண்டர்களை தேசிய பணியில் ஊக்கப்படுத்தி வருகிறது. எப்படி வந்தேமாதரம் பாடல் சுதந்திரப் போராட்ட காலத்தில் பல ஆயிரக்கணக்கான தொண்டர்களை தேசத்திற்காகத் தியாகம் செய்யத் தூண்டியதோ, அது போல சுதந்திரம் அடைந்த பாரதத்தில் பல தேசபக்தர்களை, சமுதாயப் பணிக்குத் தன்னை அர்ப்பணிக்கத் தூண்டிய மந்திரச் சொற்கள் இந்தப் பாடல்கள்.

வாருங்கள், அவரது பாடல்களில் தொடர்வோம் நம் பயணத்தை

**பாடல்: இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

1947ல் இருந்து 1950க்குள் உள்ள கால கட்டத்தில் நடந்த ஒரு மகர சங்கராந்தி விழாவில் இந்தப் பாடல் திரு.இராம கோபாலன் அவர்களால் இயற்றப்பட்டு பாடப்பட்டது என்று கருதப்படுகிறது.

1947 ஆகஸ்ட் 15 அன்றே இந்தப் பாடல் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் ஒரு கருத்து உள்ளது. இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற வரிகளே சுதந்திரம் கிடைத்த செய்தியைத்தான் சொல்கின்றன என்று கருதவும் இடமிருக்கிறது.

மகரத்தில் சூரியன் உதித்ததால் இரவு குறைய ஆரம்பிக்கும் என்று சங்கராந்தி செய்தியாக இந்தப் பாடல் பொருள்பட்டாலும் உட்பொருளாக அடிமைத்தனம் என்கிற இரவு கழிந்து ஒளிரும் பாரதமாகிய சூரியன் எழுந்ததையே இந்தப் பாடல் உணர்த்துகிறது. மை போட்டு மயக்க வைக்கும் அஞ்சனம் ஆகிய அந்நிய மயக்கம் நீங்கிவிட்டதை இந்தப் பாடல் குறிப்பிடுகிறது.

சுதந்திர பாரதம் விஞ்ஞானத்தில் இருந்து மெய்ஞானம் வரை எல்லாத் துறைகளிலும் எப்படி இருக்கும், எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கை மனக்கண்ணில் நிறுத்துகிறது இந்தப் பாடல்.

சுதந்திர பாரதம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்ற தேசபக்தனின் அபிலாஷைகள் இந்தப் பாடல் முழுவதும் எதிரொலிக்கின்றன.

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே என்ற பாரதியின் உள்ளக் கிடக்கை இந்தப் பாடலில் எதிரொலிப்பதை உணர முடியும்.

RSS-ன் பொங்கல் விழாவில் மகர சங்கராந்தி விழாப் பாடலாக ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பாடல் இன்றளவும் பாடப்பட்டு வருகிறது.

பூமண்டலம், திக்விஜயம், மகிமைகள் ஆகிய சொற்கள் இடம் பெற்றிருப்பது பாடலின் காலக்கணக்கை உறுதிபடுத்துகிறது.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**
**கிருதயுகக் கதிர்தூவிப் புரவி யமர்ந்தான்**
**வையகமே இனி புதுமைகள் காண்பாய்**
**பாரத சூரியன் மகிமைகள் காண்பாய்**

**ஆயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த**
**ஹிந்து மஹாசக்தி எழுந்தது சீறி**
**நல்லோரை வாழ்த்திட தீயோரை வீழ்த்திட**
**போர்க்கோலம் பூண்டு எழுந்தது காண்பாய்**

**வேதமுழக்கம் ஞான விளக்கம்**
**நரவுருவில் நடமாடிடும் தெய்வம்**
**கதையல்ல மிகையல்ல கற்பனையல்ல**
**கண்ணாரக் காண்பாய் நீ சற்றே பொறுப்பாய்.**

**ஹனுமனின் பக்தி சீதையின் கற்பு**
**ராமனின் அறவர சாட்சியும் காண்பாய்**
**வீமனும் பார்த்தனும் தருமனும் கண்ணனும்**
**மீண்டும் இந்நாட்டினில் உலவுதல் காண்பாய்**

**சங்கரன் மேதை வள்ளுவன் கவிதை**
**சிவராஜன் வாளுமே மின்னிக் கிளம்பும்**
**ரஜபுத்ரர் வீரம் சோழர் சீராட்சி**
**பூமண்டலம் வெல்ல திக் விஜயம் செய்யும்**

இந்தப் பாடலின் இசை வடிவத்திற்கு இந்த **QRCODE SCAN** செய்யவும்.

# வெளிச்சம் படாத வேர்கள்

# மாவீரன் பூலித்தேவர்

— யா.சு. கண்ணன்




திருநெல்வேலி மண்டல் நெற்கட்டுஞ்சேவல் பாளைய மன்னர் பூலித்தேவர். 1/09/1715 ஆம் ஆண்டு பிறந்தவர். சிறுவயதிலேயே வீர உணர்ச்சியும், இறையுணர்வும் மிகுந்தவராக விளங்கினார். பன்னிரண்டு வயதான பொழுது அவருக்குப் போர்ப்பயிற்சி தொடங்கப்பட்டது. 1726ல் அந்த பன்னிரண்டாவது வயதிலேயே அவர் நெற்கட்டுஞ்சேவல் அரசரானார். பின்னாளில் அக்கா மகள் கயல்கண்ணி என்கின்ற இலட்சுமி நாச்சியாரை மணந்தார். கயல்கண்ணியின் சகோதரர் சவுணத்தேவரும் பூலித்தேவரும் இணைபிரியாத நண்பர்கள். பூலித்தேவருக்கு கோமதி முத்துத் தலவாச்சி, சித்திரபுத்திரத் தேவன் மற்றும் சிவஞானப் பாண்டியன் என்று மூன்று மக்கள் பிறந்தனர். பல்வேறு ஆலயத் திருப்பணிகளில் ஈடுபட்டவர் அவர்.

**ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்**

1750இல் இராபர்ட் கிளைவ் திருச்சிக்கு வந்து ஆங்கிலக் கொடியை ஏற்றிவைத்துவிட்டு தென்னாட்டுப் பாளையக்காரர்கள் தன்னை நேரில் வந்து சந்திக்க வேண்டுமென்று ஆணையிட்டார். இதனால் வெகுண்ட பூலித்தேவன் திருச்சிக்குத் தனது படையுடன் சென்று ஆங்கிலேயரை எதிர்த்தார். இதில் பூலித்தேவனே வெற்றிபெற்றார் என 'பூலித்தேவன் சிந்து' என்ற கதைப்பாடல் கூறுகிறது.

1755ஆம் ஆண்டு கர்னல் கீரோன் (கர்னல் அலெக்ஸாண்டர் ஹெரான்) தம் கோட்டையை முற்றுகையிட்டு கப்பம் கட்ட கட்டாயப்படுத்தியபோது தன்னுடைய நிலப்பகுதியில் வசூலிக்கும் உரிமை வெள்ளையர் எவருக்கும் கிடையாது என வீர முழக்கமிட்டு வெள்ளையனை விரட்டியடித்து வெற்றியும் பெற்றார். அதே ஆண்டில் களக்காட்டிலும், நெற்கட்டும் செவல் கோட்டையிலும் நடைபெற்ற போரில் ஆங்கிலேயரின் கைக்கூலியான மாபூஸ்கானை தோற்கடித்தார். அதனை அடுத்து திருவில்லிபுத்தூர் கோட்டையில் நடைபெற்ற போரில் ஆற்காடு நவாபின் தம்பியைத் தோற்கடித்தார்.

1756 மார்ச் மாதம் திருநெல்வேலியில் மாபூஸ்கானுடன் பூலித்தேவர் நடத்தியப் போரில் அவர் உயிர்த்தோழன் மூடேமியா கொடூரமாகக் கொல்லப்பட்டதால் மனமுடைந்த பூலித்தேவர் போரை நிறுத்தித் திரும்பினார். அதனால் மாபூஸ்கான் திருநெல்வேலியை தன்வசப்படுத்தினான். 1765 அக்டோபர் மாதம் வாசுதேவநல்லூர் கோட்டையைத் தாக்கிய கேப்டன் பெரிட்சன் பூலித்தேவரிடம் தோற்றார்.

1760ஆம் ஆண்டு யூசுப்கான் நெற்கட்டும் செவல் கோட்டையைத் தாக்கியபோதும், 1766ஆம் ஆண்டு கேப்டன் பௌட்சன் வாசுதேவநல்லூர்க் கோட்டையைத் தாக்கிய போதும் அவற்றை முறியடித்து வெற்றி கொண்டார். தொடர்ந்து 1766ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் தலைமைத் தளபதி கான்சாகிப் என அறியப்பட்ட யூசுப்கான் பூலித்தேவரை வெல்ல முடியாமல் சுமார் 10 ஆண்டுகள் போரிட்டான். அதன் பின் தோல்வியடைந்த பூலித்தேவர் தலைமறைவானார். நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட,அவர்களும் அன்னியர்களே என்ற காரணத்தால், உதவ முன்வந்த டச்சுக்காரர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியை ஏற்க பூலித்தேவர் மறுத்துவிட்டார்.

பூலித்தேவர் ஆட்சி செய்த காலம் பாண்டியராட்சியின் முடிவும், நாயக்கராட்சியின் சரிவும் ஆற்காடு நவாப்பின் அத்துமீறல்கள் அதற்குள் ஆங்கிலேயரின் வருகை என்று பல தோற்றம் மறைவுகளைச் சந்தித்துக் கொண்டிருந்த காலம் காலத்தில் ஆட்சி செய்தார் பூலித்தேவர். இக்கட்டான இந்த சூழலில் பாளையக்காரர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டிய அவசியத்தை பூலித்தேவர் வலியுறுத்தினார்.

பூலித்தேவர் திட்டப்படி அனைத்து பாளையக்காரர்களும் நாயக்கராட்சிக்குக் கப்பம் கட்டுவதைத் தவிர்த்தனர். நாயக்கராட்சியை முகம்மதியர்கள் கைப்பற்றினர். பின்னர் அது மகாராஷ்டிர அரசர்கள் கைகளுக்கு மாறி மீண்டும் முகம்மதியர் கைக்கு வந்தது. ஆனால் ஆற்காடு நவாபுக்கும் மற்றோர் முகம்மதிய அரசனுக்கும் இடையில் ஏற்பட்ட பூசல் காரணமாக இரு பிரிவினரும் தனித்தனியே கப்பம் வசூல் செய்ய முனைந்தனர். இரு பிரிவினருக்கும் நடந்த

குழப்பத்தைப் பயன்படுத்தி, பாளையக்காரர்கள் கப்பம் கட்டுவதை மொத்தமாக நிறுத்தினார்கள்.

ஆற்காடு நவாபு ஆங்கிலேயர்களின் உதவியை நாடி வரிவசூலிக்கும் உரிமையை அவர்களிடம் ஒப்படைத்தான். அன்றிலிருந்து ஆங்கிலேயர்கள் இந்திய மன்னர்களோடு நேரடியாகப் போரிட ஆரம்பித்தனர்.

பாளையக்காரர்கள் கப்பம் கட்டாததால் கர்னல் கீரான் தலைமையில் கும்பினிப் படைமற்றும் ஆற்காடு நவாபின் அண்ணன் மாபூஸ்கான் தலைமையில் நவாபு படைகளும், கான்சாகிப் தலைமையில் உள்நாட்டுச் சிப்பாய் படைகளும் 1755-ஆம் ஆண்டு பாளையக்காரர்களைத் தாக்குவதற்குப் புறப்பட்டது. பேச்சளவில் இருந்த பாளையக்காரர்களின் ஒற்றுமை போர் என்றவுடன் உடைந்தது. மாபூஸ்கான், கர்னல் கீரான் இருவரும் சேர்ந்து பூலித்தேவரின் கோட்டையை முற்றுகையிட்டனர். ஆங்கிலேயர் வசம் வெடிமருந்துகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இருந்தன. இருந்தும் பூலித்தேவரின் கோட்டையில் ஒரு சிறு விரிசலைக் கூட ஏற்படுத்த முடியவில்லை. மாறாக அவர்களிடம் இருந்த தளவாடங்களும் உணவும் தீர்ந்தது. இந்த செய்தியைத் தன் ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்ட மன்னர் உடனடியாக கோட்டையை விட்டு வெளியே வந்து ஆங்கிலப்படைகளைக் கொன்று குவித்து சின்னாபின்னமாக்கினார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக மீண்டும் பாளையக்காரர்களை ஒன்றுபடுத்த பூலித்தேவர் முயற்சி செய்தார். அவருடைய எண்ணம் ஈடேறவில்லை. பல பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்க்கத் துணிவின்றி தங்கள் அரசாட்சியே போதும் என்கின்ற சுயநலத்தோடு ஒதுங்கிவிட்டார்கள். இந்த நிலையில் ஆற்காடு நவாபும் ஆங்கிலேயர்களும் பாளையக்காரர்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குப் பதவி ஆசை யைக் காட்டி, தங்கள் வசப்படுத்தினார்கள்.இதன் மூலம் சுதேசிப்படை என்கின்ற புதிய படையை உருவாக்கி அதை யூசுப்கான்(மருதநாயகம்) என்பவனிடம் ஒப்படைத்தனர். இவன், பதவி ஆசைக்காக, அன்னியராட்சியை எதிர்த்து முதல் குரல் கொடுத்த மாவீரன் பூலித்தேவரை கடுமையாக எதிர்த்தான்.

1755ஆம் ஆண்டு தொடங்கி 1767ஆம் ஆண்டு வரை பூலித்தேவரால் ஆங்கிலேயர்களையும், கூலிப்படைகளையும் எதிர்த்துப் பன்னிரெண்டு ஆண்டுகள் பல போர்கள் புரிய முடிந்தது.1767 ஆம் ஆண்டு பூலித்தேவரின் படைகள் யூசுப்கான் படைகளிடம் தோற்றன. ஆங்கிலேயர்களின் பீரங்கிகளின் உதவியோடு பூலித்தேவரின் கோட்டையில் முதன் முதலாக உடைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதற்குப்பின் ஆங்கிலேயப் படை, கோட்டைக்குள் புகுந்தது. வேறு வழியின்றி எஞ்சிய படைகளோடு பூலித்தேவர் கடலாடிக்குத் தந்திரமாகத் தப்பிச் சென்றார். ஆனாலும் இரகசியமாக படைகளைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார். சில மாதங்களுக்குப் பின்னர் பூலித்தேவர் மீண்டும் கோட்டையைப் பிடித்து பாளையத்தைச் சீர்படுத்தினார்.

1767 மே மாதம் டொனால்டு காம்பெல் தலைமையில் மேஜர் பிளிண்ட், காப்டன் ஹார்பர் ஆகியோர் வாசுதேவநல்லூர் கோட்டையை பெரும்படையுடன் தாக்கினர். பூலித்தேவர் நிலைத்து நின்று போரிட்டார். ஆனால் ஆங்கிலேயப் படை பீரங்கிகளின் முன்னால் பூலித்தேவர் படைகளின் வாளும் வேலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஒருவாரம் நடந்த இந்த போரின் போது எதிர்பாராமல் பெய்த பலத்த மழையைப் பயன்படுத்தி பூலித்தேவர் தப்பிச்சென்று மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மறைந்து கொண்டார். 1767 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தப் போரே பூலித்தேவரின் கடைசிப்போர்.

பூலித்தேவரின் மறைவு பற்றி ஒரு சாரார் கருத்துப்படி, அவர் ஆரணிக் கோட்டையின் தலைவன் அனந்த நாராயணன் என்பவனின் மாளிகைக்கு வரவழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார் என்றும், பாளையங்கோட்டைக்குக் கொண்டு செல்லும் வழியில், கும்பினியப் போர் வீரர்கள் புடைசூழ சங்கரன்கோயில் சென்று இறைவனை வழிபட்டதாகவும், அப்போது அங்குத் தோன்றிய சோதியில் கலந்தார் என்று, நாட்டுப்புறப் பாடல்கள் கூறுகின்றன. இன்றைக்கும் சங்கரன்கோவிலில் உள்ள சங்கர நாராயணன் கோவிலில் பூலித்தேவர் மறைந்த இடம் என்று ஒரு இடம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மற்றொரு கருத்தின்படி பூலித்தேவர் ஆங்கிலேயரால் கைதுசெய்யப்பட்டு ரகசியமாக தூக்கிலிடப்பட்டார் என்பதாகும்.



# ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள்:

## பக்தியால் கங்கையை வரவழைத்த மகான்.

நிதீஸ்வரன்

“எந்தரோ மகானுபாவலு” என்று போற்றும் வகையில், பல மகான்கள் நமது புண்ணிய பாரத திருநாட்டில் அவதரித்து மக்களுக்கு அனுக்ரஹம் செய்துள்ளனர். அவர்களுள் முக்கியமானவர் மானிட உருவம் கொண்ட சிவபெருமான் என்று போற்றப்படக்கூடிய திருவிசலூர் ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் அவர்கள்.

இவரைப் பற்றி பஜனை சம்பிரதாயத்தில் போற்றப்படும் ஸ்லோகம்.

**ईशे तस्य च नामनि प्रविमलं ज्ञानं तयोरूर्जितं**
**प्रेम प्रेम च तत्परेषु विरतिश्चान्यत्र सर्वत्र च ।**
**ईशेक्षा करुणा च यस्य नियता वृत्तिः श्रितस्यापि यं**
**तं वन्दे नररूपमन्तकरिपुं श्रीवेङ्कटेशं गुरुम् ॥**

ஈச்வரனிடமும் அவருடைய நாமாவிலும் எவருக்குப் பரிசுத்தமான ஞானமும் அவ்விரண்டிலும் த்ருடமான அன்புமுண்டோ, ஈச்வரனிடமும் அவர் நாமாவிலும் ஈடுபட்ட பக்தரிடமும் எவருக்கு அன்புண்டோ, வேறு எல்லாவற்றிலும் எவருக்கு விரக்தி உண்டோ, எவருக்கும் எவரை அண்டினவருக்கும் பகவந் நோக்கமும் கருணையும் மாறாத் தொழிலாகுமோ, மானிட வடிவங்கொண்ட பரமேச்வரரான அந்த ஸ்ரீதர வேங்கடேசர் என்ற குருவை வணங்குகிறேன். இவர் போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் ஸதாசிவ ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் போன்ற மகான்களின் சமகாலத்தில் வாழ்ந்தவர். இவர் நாமஸித்தாந்தத்தை பரப்பிய மஹானாகவும் விளங்குகிறார்.

பெரிய சிவபக்தரான இவர் அருகில் உள்ள திருவிடைமருதூர் மஹாலிங்க ஸ்வாமியைத் தவறாமல் அர்த்தஜாம பூஜையில் தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருமுறை, காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்ததால் அவரால் ஆற்றைக் கடக்க முடியாதபோது, மஹாலிங்க ஸ்வாமியே சிவாச்சார்யராக இவர் க்ருஹத்திற்கு வந்து ப்ரஸாதம் கொடுத்து அருளினார்.

பெரிய அத்வைதியான இவர், எல்லா இடத்திலும் பரமேஸ்வரனையே கண்டார். அய்யாவாளுடைய பெருமையை உலகுக்கு அறிய வைக்க விரும்பிய பரமேஸ்வரன் ஒரு முறை அய்யாவாள் ஸ்ராத்தம் செய்யும் தினத்தில் சண்டாள ரூபமாக வந்தார். பசியால்துடித்து மரண வேதனையில்இருந்த அச்சண்டாளனைக் கண்டு மனம்உருகிய அய்யாவாள், அவரைப் பரமேஸ்வரனாகவே பாவித்து, ச்ராத்தச்சமையலை அச்சண்டாளனுக்கு அர்ப்பணம்செய்து விட்டார்.

இதனால் ஏற்பட்ட தீண்டலுக்குக், கங்கா ஸ்நானத்தை ப்ராயச்சித்தமாக அந்தணர்கள் அய்யாவாளுக்கு விதித்தனர். இதனால் மனம் வருந்திய அய்யாவாள், தனது சிவ பக்தி பலத்தாலும், சிவ நாமத்தின் மகிமையாலும், ‘கங்காஷ்டகம்’ எனும் ஸ்தோத்திரத்தைப் பாடினார். உடனடியாக, அவரது க்ருஹத்தின் கிணற்றிலிருந்து கங்கை பிரவாகமாகப் பொங்கி எழுந்து, வீதி முழுவதும் பாய்ந்தாள். இந்த அற்புதம் நிகழ்ந்த நாள் கார்த்திகை அமாவாஸ்யை ஆகும். இதன் மூலம் அய்யாவாளின் பெருமையை பரமேஸ்வரன் எல்லோருக்கும் உணர்த்தினார்.

இன்றும், அய்யாவாள் இல்லக் கிணற்றில் ஆண்டுதோறும் கங்கை நீர் பொங்கி வருகிறது. லட்சக்கணக்கான மக்கள் அன்று அங்கு நீராடி, கங்கை ஸ்நானத்தினால் கிடைக்கும் பலனை அடைகின்றனர். இது போன்ற பல அற்புதங்கள் இவரது வாழ்வில் நடந்துள்ளது. இறுதியில் அவர் திருவிடைமருதூர் மஹாலிங்க ஸ்வாமியுடன் ஜோதி ஸ்வரூபமாக ஐக்கியமாகி இன்றும் நமக்கு அனுக்ரஹம் செய்து கொண்டிருக்கிறார். இந்த வருடம் கங்கா ஸ்நானம் கார்த்திகை மாதம் 3ம் தேதி (நவம்பர் 19ஆம் தேதி) நடைபெற இருக்கிறது.

**दोषे स्वभाजि मतिकौशलमन्यभाजि**
**मोढ्यं गुणेऽन्यजुषि हर्षभरः स्वभाजि ।**
**अस्तप्रसक्तिरखिलेषु दयात्युदार-**
**वृत्त्योर्जितो मम कदास्तु हरानुरागः ॥**

தோஷபரிஹாராஷ்டகம் என்னும் நூலில் அவர் செய்யும் பிரார்த்தனையை நாம் மனதில் கொண்டு நமது ஆத்ம குணங்களை விருத்தி செய்து பகவானுடைய அன்பிற்கு பாத்திரமாக மாறுவோம்.

பரமேஸ்வரா ! தன்னிடத்துள்ள தோஷத்தைப் பார்ப்பதில் புத்தித்திறமையும், பிறரிடத்திலுள்ள தோஷத்தைக் காண்பதில் மூடத்தனமும், பிறருடைய குணத்தினால் அதிக ஸந்தோஷமும், தன்னிடத்திலுள்ள குணத்தைப் புகழ்ந்து கொள்ளாமலிருத்தலும், எல்லா பிராணிகளிடத்தில் இரக்கமும், பரந்த நோக்கத்தோடு பிறரிடம் அன்பும், உன்னிடத்தில் ஊர்ஜிதமான பக்தியும் எனக்கு எப்பொழுது உண்டாகும்?

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

***கார்த்திகை மாத பிறப்பு - 17/11/2025***

**கங்கைக்கு சமமான தீர்த்தம்,**
**வேதத்திற்கு சமமான சாஸ்த்ரம்,**
**தர்மத்திற்கு ஸமமான மித்ரன்,**
**ஜோதிஷத்திற்கு சமமான கண்,**
**கார்த்திகைக்கு சமமான மாசம் வேறில்லை.**
**- என்று ஸ்கந்த புராணம் கூறுகிறது .**

புண்ய மாதமான கார்த்திகை மாதம் இவ்வருடம் நவம்பர் 17ம் தேதியன்று பிறக்கிறது.

ஸ்கந்த புராணத்தின், கார்த்திகை மாஹாத்மியம் என்னும் பகுதியில் புண்ய கார்த்திகை மாதத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விரதங்கள் அதற்கான பலன்களை விரிவாக கூறுகின்றது. அவற்றில் முக்கியமானவற்றைக் காணலாம்.

கார்த்திகை முப்பது நாளும் காவேரி அல்லது புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது நல்லது. நதி தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்யும் பொழுது கங்கே கங்கே என்று கூறி கங்கையை மனதாலும் நினைக்கவேண்டும்.

கார்த்திகை மாதம் முதல் நாளில் காவிரியில் நீராடினால், ஐப்பசி மாதத்தில் நீராடும் துலா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும். இதை "முடவன் முழுக்கு" என்பர்.

இந்த மாதம் முழுவதும் தினம் தீபதானம் செய்வது மிக விசேஷமானதாக கருதப்படுகிறது. இதனால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும். குறைந்தபட்சம் தினமும் ஒரு தேங்காய் அல்லது பழம் தருவது கூட மிகுந்த விசேஷப் பலனைத் தரும்.

கார்த்திகை மாதத்தில் தினமும் ஸந்த்யா காலத்தில் ஆலய கோபுர சிகரம், வாசற்படி, மண்டபம், மூலஸ்தாநம் முதலிய இடங்களில் தீபமேற்றினால் சகல பாபங்களும் அகலும். இதே போன்று தினமும் வீட்டு வாசற்படிகளில் விளக்கு ஏற்றி வழிபட வேண்டும்.

கார்த்திகை மாதத்தில் பகவத் கீதா பாராயணம், ச்ரவணம்(கேட்டல்) போன்றவற்றை செய்தால் பாம்பின் தோல் பாம்பைவிட்டு விலகுவதுபோல் சகல பாபங்களும் அகலும். கிருஷ்ண அல்லது வெளுப்பு துளசியால் பக்தியுடன் பகவானைப் பூஜித்தால் வைகுண்டம் சென்று ஆநந்தம் அனுபவிக்கலாம். கீதையின் விபூதியோகம், விஸ்வரூப தரிசனம், பக்தியோகம் இவைகளைப் பகவானது சன்னதியில், பூர்ணமாகவோ சிறிதளவோ பாராயணம் செய்தாலும் பாபகர்மா அடியோடு அகலும். முக்தி பெறலாம்.

இம்மாத ஞாயிற்றுக்கிழமைகளில் வனபோஜனம் செய்வது மிகுந்த சிறப்பு வாய்ந்தாக கூறப்படுகிறது. நம் ஹிந்து தர்மத்தில் மரம், செடி, கொடிகளையும் கூட கடவுளின் அம்சங்களாகக் கருதி வழிபடுவது வழக்கம்.



கார்த்திகை மாதத்தில் அனைத்து கடவுளர்களும் மரத்தின் அடியில் வாசம் செய்வதாக நம்பப்படுகிறது. குறிப்பாக விஷ்ணு, மஹாலக்ஷ்மியும் நெல்லி மரத்தின் அடியில் வாசம் செய்கிறார் என்பதால் கார்த்திகை ஞாயிறன்று நெல்லி மரத்திற்கு பூஜை செய்து நெல்லி மரத்தடியில் அன்னதானம் செய்து உணவு உண்டால் வைகுந்தம் செல்வார்கள் என்று நம்பப்படுகிறது.

சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து தீப்பொறியாக தோன்றி, சரவணப் பொய்கையில் குழந்தையாக முருகப்பெருமான் உதித்த மாதம் கார்த்திகை ஆகும். எனவே இந்த மாதத்தில் முருகனை வழிபட்டால் சகல நண்மைகளும் கிடைக்கும்.

இம்மாதத்தில் விஷ்ணு பகவானை துளசி இலையைக் கொண்டு அர்ச்சித்து வழிபாடு செய்தால், ஒவ்வொரு துளசியும் ஒரு அஸ்வமேத யாகம் செய்த பலனை பெற்றுத் தரும்.

கார்த்திகை மாதம் பஞ்சமி தினம், நாக தோஷ

நிவர்த்தி செய்ய உகந்த நாளாகும்.

இவைக்களை தவிர இந்த மாதத்தில் வரும் பெரும்பாலான திதி, கிழமை, நட்சத்திரங்களில் அனுசரிக்கப்படும் விரதங்களுக்கு உத்தமமான பலன்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. கார்த்திகை தீபம், சோமவார விரதம், உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை ஞாயிறு விரதம், கார்த்திகை விரதம், சஷ்டி விரதம், கார்த்திகை மாத வளர்பிறை துவாதசி, துளசி கல்யாணம், ப்ரபோதினி ஏகாதசி, ரமா ஏகாதசி போன்ற விரதங்களைக் கூறலாம்.

குருவாயூரில் கார்த்திகை மாத சுக்ல பட்ச ஏகாதசியை ஒட்டி நடத்தப்படும் உற்சவம் சிறப்பு வாய்ந்தது. அந்த நாளில் காசி, பத்ரி, சபரிகிரி ஆகிய திருத்தலங்களின் புண்ணிய தீர்த்தங்களின் மகிமையும், கங்கை, யமுனை, உள்ளிட்ட நதிகளும் குருவாயூரில் ஒன்று கூடுவதாக ஐதீகம்.

பாலக்காடு அருகே உள்ள ஊர் கல்பாதி. இங்குள்ள ஸ்ரீவிஸ்வ நாதஸ்வாமி ஆலயத்தில், கார்த்திகைத் தேரோட்டம் விசேஷம். பூரி ஜெகநாத சுவாமி கோயில் தேரோட்ட வைபவத்தை அடுத்து, இங்குதான் பெரியளவில் தேரோட்டம் நடைபெறுவதாக கூறுகிறார்கள்.

இப்படிப்பட்ட திருக்கார்த்திகை மாதத்தின் மஹாத்மியத்தை கேட்டாலே நோய், ஏழ்மை அகலும்.

கார்த்திகை மாதப் பிறப்பு அன்று தான் ஐயப்ப பக்தர்கள் சபரிமலைக்கு மாலையணிந்து விரதத்தைத் தொடங்குகிறார்கள். மாலையணிந்து சபரிமலைக்குச் செல்பவர்கள் தினமும் அதிகாலை, மாலை இருவேளைகளிலும் நீ ராடி ஐயப்பனுக்குப் பூஜை செய்து வழிபட்டு, பிரம்மசரிய விரதத்தை மேற்கொள்கின்றனர்.

**அடுத்த இதழில் கார்த்திகை மாதம் என்றாலே எல்லோருக்கும் நினைவிற்கு வரும் பரணி தீபம், திருக்கார்த்திகை தீபம் போன்றவற்றைக் குறித்துப் பார்க்கலாம்.**

---------------------------------------

**விவாக பஞ்சமி – 25/11/2025**

கார்த்திகை மாத சுக்ல பட்சத்தின் ஐந்தாம்நாள் விவாக பஞ்சமி என்றழைக்கப்படுகிறது. இந்நாளில் தான் ராமருக்கும், சீதைக்கும் திருமணம் நடந்ததாக



வால்மீகி இராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த வருடம் இவ்விழா நவம்பர் 25ம் தேதியன்று வருகின்றது. இந்த நாளில் பெருமாள் கோவில்களில் சீதா ராம கல்யாண வைபவம் நடைபெறும்.


சீதா ராமர் கல்யாண வைபவம் மிதிலாவின் தலைநகரான ஜனக்பூரில் நடைபெற்றதால் அங்கு இந்த விழா மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இச்சமயத்தில் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் இந்தியாவிலிருந்தும் நேபாள நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் வந்து கலந்து கொள்கிறார்கள்.

அயோத்தியா ஸ்ரீ ராம் ஜென்மபூமியிலும் வெகு விமர்சையாக கொண்டாட தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்த தினத்தை ஹிந்துக்கள் வெகு விமர்சையாக கொண்டாடி வருகின்றனர். வீட்டிலும் கூட இராமர் சீதை சிலையோ அல்லது படத்தையோ வைத்து பூஜைகள், நிவேதனங்கள் செய்து வழிபடுவார்கள். சில பக்தர்கள் சீதா ராம கல்யாண உற்சவத்தை நடத்தி வழிபடுகிறார்கள்.

இந்த தினத்தில் வால்மீகி இராமாயணத்தில் உள்ள சீதா சுயம்வரம், திருமண பகுதிகளை படிப்பது, கேட்பது மிகுந்த பலனைத் தரும்.

**ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே**
**பரமானந்தம் ஆனந்தம் ஆனந்தமே**
**ஸ்ரீ ராமனும் மணமகன் ஆனாரே**
**நம்ம ஜானகி மணமகள் ஆனாளே**
**வந்தவர்க்கும் பார்த்தவர்க்கும் ஆனந்தம்**
**சீதைக்கும் ராமனுக்கும் ஆனந்தம்**
**நாம் செய்த பூஜாபலன் இன்றே பலித்ததம்மா**

விவாஹ பஞ்சமியில் ஸ்ரீ சீதாராமனை வணங்கி நல் வாழ்வு வாழ்வோமாக !



# இல்லறம் அல்லது நல்லறம் அன்று!

-கலாவதி

இரவு தூங்க போகும் நேரத்தில் வீடே பரபரப்பாக இருந்தது. செல்வம் வீட்டுக்கு வந்திருந்த சக்திவேல் தாத்தா, திடீரென இறந்துவிட்டார். அப்பா எல்லோருக்கும் அலைபேசியில் தகவல் சொன்னார். கொஞ்ச நேரத்தில் சொந்தக்காரர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள்.

பெரியவர்கள் ஏதோ ஆலோசனையில் இருக்க, செல்வத்தின் வயதுடைய பெரியப்பா, சித்தப்பா, அத்தை பையன்கள் ஒரு பக்கம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“சக்திவேல் தாத்தா எனக்கு எவ்வளவு கதைகள் சொல்லியிருக்கார் தெரியுமா?'' என்றார் ரகு. “எனக்கு நிறைய புதிர்கள் போட கத்து தந்தார்'' என்றான் செல்வம். “எனக்கு தமிழும், கணக்கும் நிறையவே சொல்லி தந்திருக்கார்'' இது மணி. “சோர்வா இருந்தா சக்திவேல் தாத்தா கிட்ட பேசினா போதும். உற்சாகமாக்கிடுவார்'' என்று தன் அனுபவத்தை சொன்னார் விக்ரம்.

சக்திவேல் தாத்தா குடும்பத்தில் எல்லோருக்கும் நெருக்கம். ஒவ்வொருவர் வீட்டிலும் ஓரிரண்டு மாதங்கள் தங்குவார். எங்கு தங்கினாலும் வீட்டில் இருக்கும் சிறியவர் முதல் பெரியவர் வரை அவருக்கு நெருக்கமாகி விடுவார்கள். யாரையும் அவர் புண்படுத்தி பேசி பார்த்ததில்லை. முடிந்தவரை தன் வேலையை தானே செய்து விடுவார். அதனால், நிறைய சொந்தக்காரர்கள் வந்து கொண்டே இருந்தார்கள்.

அப்போதுதான் செல்வத்துக்கு ஒன்று உறைத்தது. இங்கிருப்பவர்கள் சக்திவேல் தாத்தாவுக்கு நெருக்கமானவர்கள் தான். ஆனால், யார் அவருக்கு உண்மையான் பையன், பேரன்?

எல்லோரும் இவர்கள் வீட்டுக்கு வந்திருந்ததால், அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நின்று பேச நேரமில்லை. சித்தப்பாவிடம் போய் கேட்டான். “அவருக்கு பசங்க இல்ல. மனைவியும் சீக்கிரமா போயிட்டாங்க. எங்களுக்கும் ஒண்ணு விட்ட சித்தப்பாதான். நாங்க அவரை முறை போட்டு பார்த்துட்டு வரோம். அவரும் உடம்பு மேல அக்கறை வச்சிருந்ததால, அவரை பார்த்துக்கறதும் சிரமமா இருந்ததில்லை. அது மட்டுமில்ல, நாங்க சின்ன வயசுல இருந்தப்போ எங்களுக்கு விளையாட்டு, உடற்பயிற்சின்னு நிறைய சொல்லி தந்துருக்கார். அதனால, எங்களுக்கு அவரை ரொம்ப பிடிக்கும்'' என்றார்.

ரகு ஆச்சரியமாக பார்த்தான். “ரொம்ப ஆச்சரியமா இருக்கு மாமா. இந்த காலத்துல பெத்த அப்பா அம்மாவையே முதியோர் இல்லத்துல சேர்த்துடறாங்க. நீங்க ஏதோ சொந்தக்காரரை கூட வச்சி பராமரிக்கறீங்க?''

“அதுக்கு நம்ம சொந்தக்காரங்களும், ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டு கொடுக்கறதும்தான் காரணம். முதியோர் இல்லம், கருணை இல்லம் எல்லாம் ஆங்கிலேயன் கொடுத்ததுதான். அதுக்கு முன்னாடி, எல்லா விஷயங்களுக்கும் கூட்டு குடும்பங்கள்தான் மருந்து. இவராவது எங்க சொந்தக்காரர். அப்பா அம்மா இல்லாத பையன்களை கோயிலில் வளர்த்து, அவங்களை பராமரிக்கற குடும்பங்கள் முன்ன நிறைய இருந்துச்சு. இப்போ “அது குறைஞ்சிட்டு வருது'' என்று சொல்லி ‘உச்’ கொட்டினார் சித்தப்பா.

“அட, நம்ம குடும்பங்கள் கிட்ட இவ்வளவு விஷயமா இருக்கா'' என்று எல்லா பையன்களும் ஒன்றாக கேட்டார்கள்.

**இல்லறம் அல்லது நல்லறம் அன்று!**



# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்

வேத விஞ்ஞான ஆராய்ச்சி மையம் நடத்தி வரும் இலவச மாலை நேர வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான விநாயகர் அகவல் ஒப்புவித்தல் போட்டி 8-9-2025 அன்று மாலை நடைபெற்றது.

-17 டியூஷன் மையங்களில் இருந்து 184 பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர்.

-47 பேர் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

-32 பேர் விநாயகர் அகவல் முழுவதையும் (72 வரிகளையும்) மனப்பாடமாகப் பாடி உள்ளனர்.

-விநாயகர் அகவல் ஒப்புவித்தல் போட்டித் தேர்வு அந்தந்த டியூஷன் மையங்களிலேயே ஒரே நாளில், ஒரே சமயத்தில் நடத்தப்பட்டது.

- ஒவ்வொரு டியூசன் மையத்திற்கும் வெளியில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்ட நடுவர் மூலமாகத் தேர்வு நடத்தப்பட்டது.

-விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 3 வாரங்களுக்கு தினந்தோறும் மாணவர்களுக்கு விநாயகர் அகவல் பாராயணம் செய்யும் பயிற்சியும், விநாயகர் அகவல் கையடக்கப் புத்தகமும் தரப்பட்டது.

**பள்ளிக் கல்வியுடன் ஹிந்து சமயக் கல்வியையும் ஆர்வமுடன் கற்கும் இளைய தலைமுறைக்கும், இதை முனைப்புடன் செயல்படுத்தி நடத்திக்கொடுத்த டியூஷன் மைய ஆசிரியர்களுக்கும், முழு விநாயகர் அகவலையும் (72 வரிகள்) மனனம் செய்து பாடிக் காட்டிய 32 மாணவக் கண்மணிகளுக்கும் நம் வாழ்த்துக்களும், பாராட்டுகளும்..**


விநாயகர் அகவல் போட்டியில் வென்ற மாணவர்களுக்கு, 30-11-2025 அன்று நடக்க இருக்கும் பகவத் கீதை ஒப்புவித்தல் போட்டியில் பரிசுகள் வழங்கப்படும்.

## விஷ்ணு சஹஸ்ரநாம பாராயண மஹோத்ஸ்வம்

ஸ்ருதி கேந்த்ரா அறக்கட்டளை ஆன்மீக மற்றும் தொண்டு ஸ்தாபனம் நவம்பர் 9ம்தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று 5008 குழந்தைகள் கலந்து கொண்டு விஷ்ணு சஹஸ்ர நாம பாராயணம் நிகழ்ச்சியை நடத்தியது.

இந்நிகழ்வில் மழலையர் முதல் முதியவர்கள் வரை கலந்துக் கொண்டு பாராயணம் செய்தார்கள். உலக நன்மைக்காவும், அவரவர்கள் குடும்ப நலனுக்காவும் ப்ரார்த்தனை செய்து பாராயணம் செய்யப்பட்டது.


அதன் பிறகு ஸ்வாமி மோக்ஷ வித்யாநந்த ஸரஸ்வதி அவர்கள் இதிஹாசத்தின் சிறப்பைப் பற்றி உரையாற்றினார்கள். இறுதி நிகழ்வாக நவ வித பக்தியில் ஸ்மரணம், பாதஸேவனம் என்ற இரண்டு பக்தி ஸ்திதியை நாடகமாக நடித்துக் காண்பித்தார்கள். இந்நிகழ்ச்சி ஸ்ரீடிவி ஆன்மீக சானலில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.



# சினிமா சாரல்

## HAQ பட விமர்சனம்

ஜூலை 31,2019 ல் முத்தலாக் தடை சட்டத்தை மோடி அரசு பல்வேறு தடையையும் தாண்டி செயல்பாட்டுக்கு கொண்டு வந்தது. முத்தலாக் சட்ட திருத்தம் கொண்டு வர அடிப்படை Shayara Bano v. Union of India & Others வழக்கு தான். முத்தலாக்கினால் பாதிக்கப்பட்ட பல லட்சம் முஸ்லிம் பெண்களுக்கு உண்மையான விடுதலையை பெற்றுத் தந்தது மோடி அரசின் முத்தலாக் தடை சட்டம். இதை கொண்டு வந்ததற்காக முஸ்லீம் பெண்களே மோடியை கொண்டாடினர்.




பாலிவுட் என்றாலே அது கான் மார்கெட், தாவூத் நினைத்தால் தான் படம் வெளிவரும் என்ற காலத்திலிருந்து 2014க்கு பிறகு மாற ஆரம்பித்திருப்பது நல்ல மாற்றமே. தி காஷ்மீர் ஃபைல்ஸ், தி கேரளா ஸ்டோரி, பஸ்தர், தி பெங்கால் ஃபைல்ஸ் போன்ற படங்களாகட்டும், இந்திய உளவுத்துறையின், ராணுவத்தின் திறனைக் காட்டும் வெப் சீரியஸ்களாகட்டும் மக்களிடம் பேராதரவை பெற்றவுடன் வேறு வழியில்லாமல் நடிகர்களும், இயக்குநர்களும்,தயாரிப்பாளர்களும் கூட தைரியமாக தேசியத்தை பிரதிபலிக்கும் வகையில் சினிமா எடுக்க ஆரம்பித்துள்ளனர்.

**HAQ** திரைப்படம், இந்தியாவில் அரசியல் பாதையை மாற்றிய ஷாபானு வழக்கை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம். இதில் ஷாபானுவாக யாமினி கௌதம் தார், முகமது ஹகமது கானாக இம்ரான் ஹஷ்மி ஆகியோரின் எதார்த்தமான நடிப்பு ரசிகர்களின் பாராட்டை பெறுகிறது. நீண்ட நீதிமன்ற காட்சிகள் இருந்தாலும் சலிப்பு ஏற்படாமல் இருக்கும்படியாக பளிச்சென இருக்கும் வசனங்கள். ட்ரையிலர் வெளியிடும் போதே சில வசனங்களுக்கு முஸ்லீம் தரப்பிலிருந்து எதிர்ப்பு கிளம்பியது.

முஸ்லீம் மத சட்டங்கள், இந்திய அரசியலமைப்பு பெண்களுக்கு வழங்கிய உரிமை என இரண்டுக்குமிடையே நடக்கும் போராட்டம் ஒரு பக்கம், தான் ஒரு மதகுருவாக இருந்தாலும் தன் மகளுக்கு அதே மத கருத்துக்களை கோடிட்டு ஜீவனாம்சம் மறுக்கப்படும் நிலையில் மதத்தை விட தன் மகளின் உரிமை முக்கியம் என துணை நிற்கும் தந்தை, ஜீவனாம்ச தொகையாக மிக குறைந்த பணமே கேட்ட போதும், அதை தரும் வசதியும் வாய்ப்பும் இருந்தாலும் கொடுக்க மறுப்பதுடன் மதச்சட்டத்தின் பின் ஒளிந்து கொண்டு வாதாடும் கொடூர எண்ணம் கொண்ட தன் கணவனை எதிர்த்து 68 வயது பெண் அடுத்தடுத்து நீதிமன்ற படிகளில் ஏறி தன் பக்க நியாயத்தை சட்டத்தின் முன் நிலைநிறுத்தி தீர்ப்பையும் பெற்ற உண்மை வரலாற்றை எந்த சிக்கலிலும் சிக்காமல் லாவகமாக திரைக்கதையை கையாண்டு இருக்கும் இயக்குநர் சுபன் எஸ் வர்மாவுக்கு பாராட்டுக்கள்.

சர்ச்சையை கிளப்பும் என எதிர்பார்க்கப்பட்ட படம், முஸ்லீம் பெண்ணுக்கு ஷரியா, அரசியல் தாண்டி அவருக்கு எப்படியாவது நியாயம் கிடைத்திட வேண்டும் என்ற எண்ணத்தை ரசிகர்களுக்கு ஏற்படுத்தும் வண்ணம் படம் எடுக்கப்பட்டிருந்தாலும் 1985ல் உச்சநீதிமன்ற தீர்ப்பையே பாராளுமன்றத்தில் மாற்றி எழுதிய மத அரசியல் எப்படிப்பட்ட அநீதியை ஷாபானு என்ற அப்பாவி பெண்ணுக்கு வழங்கியது என்பதை படம் பார்த்த ரசிகர்கள் பாப்கானுடன் அதையும் சேர்த்து அசைபோட்டிருந்தால் படத்தின் நோக்கம் நிறைவேறியதாகக் கொள்ளலாம்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.